# முன்னேற்றம் '97

உள்நாட்டு, சர்வதேச
வாணிப உணவு அமைச்சு
'றக்சன மந்திய'
21, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றம் 1997

உள்நாட்டு. சர்வதேச வாணிப உணவு அமைச்சு
'றக்சன மந்திரய'
21. வொக்ஷோல் வீதி. கொழும்பு 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| முன்னுரை | ... | v |
| அமைச்சின் பங்கு | ... | vii |
| அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடு | | |
| வாணிபத் திணைக்களம் | ... | 1 |
| இறக்குமதிகள் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | ... | 14 |
| உள்நாட்டு வியாபாரத் திணைக்களம் | ... | 21 |
| கம்பணிகள் பதிவாளர் திணைக்களம் | ... | 31 |
| ஆக்கத் தனியுரிமை வியாபாரக் குறிகள் பதிவகம் | ... | 37 |
| உணவு ஆணையாளர் திணைக்களம் | ... | 43 |
| அளவீட்டு அலகுகள், நியமங்கள், சேவைகள் திணைக்களம் | ... | 56 |
| இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு | ... | 61 |
| நியாய வியாபார ஆணைக்குழு | ... | 66 |
| கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் | ... | 78 |
| இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை | ... | 87 |
| இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | .... | 121 |
| லங்கா பொது வியாபார கம்பனி லிமிடெட் | ... | 132 |
| லங்கா சலுசல லிமிடெட் | ... | 142 |
| மஹபொல புலமை பரிசளிப்பு | ... | 151 |
| லங்கா பால் கைத்தொழில் கம்பனி லிமிடெட் (மில்கோ) | ... | 154 |
| வெலதாம | ... | 174 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

உலகளாவிய ரீதியிலான வியாபாரத்தினதும் முதலீட்டினதும் அதிகரிப்பையும் பிராந்திய வர்த்தகக் கட்டங்களை உருவாக்கும் நோக்கத்தின் வளர்ச்சியையுமடுத்து, வெறியேறும் வர்த்தகச் சூழலிருந்தான நன்மைகளை ஆகக் கூடியதாக்குவதற்கான பொருத்தமான நடைமுறைத்திறத்தை இலங்கை கையாண்டுள்ளது. இந் நிலையில் இந் நூற்றாண்டு மாற்றத்தினால் தென்னாசியாவின் பெரும் சந்தை இடத்திற்கான பொருளாதார வாயிலாக இலங்கை முன்னேற்றப்படுகின்றது. இந் நோக்கத்தைக் கருத்திற் கொண்டு அவசியமான உள்ளமைப்பு உருவாக்கப்படுகின்றது.

அண்மையில் முடிவடைந்த எக்ஸ்போ '97 எமது ஏற்றுமதியாளர்களுக்கு அரங்கமொன்றை அளிப்பதற்கும் பல வகையான இலங்கைப் பொருட்களையும் சேவைகளையும் உலகெங்கிலுமுள்ள கொள்வனவுகாரருக்குக் விளம்பரப்படுத்தவும் முற்றிலும் சந்தைப்படுத்தும் பயிற்சி முறையாக ஒழுங்குசெய்யப்பட்டதுடன் உறவுகள், பின்னணியமைப்பு, கூட்டு முயற்சிகளை வளர்ப்பதற்கான சந்திப்பு இடமொன்றையும் அளித்தது. எக்ஸ்போ '97 உலகெங்கிலும் பரப்பப்படுவதை உறுதிப்படுத்தி முன்னேற்றமடைந்த தகவல் தொழில்நுட்பவியலின் பரப்பப்படுவதை உறுதிப்படுத்தி முன்னேற்றமடைந்த தகவல் தொழில்நுட்பவியலின் பாவிப்பு மூலம் வெற்றிகரமாக சந்தைப்படுத்தப்பட்டது. உலகின் எப்பாகத்திலிருந்தும் இன்ரநெற்றின் உலகெங்கிலும் பரந்துள்ள வெப் அமைப்பின் உயர்வழித் தகவல் மூலம் எக்ஸ்போ '97 யிற்கு விஜயஞ் செய்யும் புதுக் கண்டுபிடிப்பு இலங்கைச் சந்தையை விரைவாகவும் மிக வசதியான முறைகளிலும் அணுகுவதற்கு வசதியளித்தது. எக்ஸ்போ '97 யின் நேரடியான விளைவாக பல மில்லியன் யு.எஸ் டொலர் பெறுமதியான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை முடிப்பதற்கு தனியார் துறை ஏற்றுமதியாளர்களுக்கு முடியுமாயிருந்தது.

பொருள் அபிவிருத்தி சந்தை முன்னேற்றத்திற்கான கவர்ச்சியான ஊக்குவிப்புத் திட்டங்கள் மூலம் எற்றுமதித் துறையை மேலும் பலப்படுத்துவது நோக்கி அமைச்சின் கொள்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது. வர்த்தக முன்னேற்ற வேலைக்கு வசதியளிக்கும் பொருட்டு இன்ரநெற்றுக்கான தொடர்புடன் இலங்கைக்கான வெப் பக்கத்துடன் ஏஅச தற்போது ரேட்நெற் ஸ்ரீ லங்காவை நிறுவியுள்ளது. இவ் வசதியானது தற்போது சகல ஏற்றுமதி விசாரணைகளையும், தகவலையும், கம்பனி சுருக்கக் குறிப்புகளையும், பொருளின் சுருக்கக் குறிப்புகளையும் இன்ரநெற்றுக்கு அனுப்புவதற்குப் பாவிக்கப்படுகின்றது.

ஏற்றுமதித் துறைக்கு ஆதரவை அளிக்கும் அதே நேரத்தில், நியாயமற்ற வர்த்தக முறைகளின் தடுப்பு, இணைப்புகள் தனியுரிமைகளின் கட்டுப்பாடு மூலம் பாலனையாளர்களுக்கு அதிக பாவிப்பை அளிப்பது நோக்கி முடுக்கி விடப்படுகிறது. இம் முறையைப் பலப்படுத்தும் பொருட்டு சட்டம் வரையப்பட்டுள்ளதுடன் விரைவாக வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரத்தில் பாவனையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான அதிக அதிகாரத்துடன் புதிய பாவனையாளர் பாதுகாப்பை நிறுவுவதற்கு அடுத்த ஆண்டு முற்பகுதியில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். சுதந்திரமான முழு நிறைவான திணைக்களமொன்று நாட்டில் அளவுகள் நியமங்கள் சேவையின் பேணுகையை உறுதிப்படுத்துவதற்கு நிறுவப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனி சட்டம், புலமைச் சொத்து உரிமைகள் துறையிலான புனரமைப்புகள் கடந்த இரு ஆண்டுகளின் போது தொழில் தகைமை பெற்றோர்களைக் கொண்ட தகுதி பெற்ற குழாம்களினால் ஆழ்ந்த ஆய்வொன்றிற்கு உட்படுத்தப்பட்டன. விரைவாக மாறுகின்ற வாணிப, தொழில்நுட்பவியல்ரீதியான புதிய கண்டுபிடிப்புகளைக் கொண்ட உலகில் நடைமுறைத் தேவைகளைப் பிரதிபலிப்பதற்கு இச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்படும்.

இலங்கையில் பாற்பண்ணைத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய தேசிய பாற்பண்ணை அபிவிருத்தி சபையுடனான இணைப்பு கிரியா பால் தைத்தொழில் லங்கா லிமிட்டெட்டை உருவாக்குவதில் முடிந்தது. இது 1997 ஆகஸ்டில் செயற்படத் தொடங்கியது. நாளொன்றிற்கு 150,000 லீட்டர் கொள்திறத்துடனான பால் பதனிடும் தொழிற்சாலையொன்று அம்பேவெலவில் நிறுவப்படும் அதே நேரத்தில் 300,000 லீட்டர் கொள்திறத்துடனான இன்னொரு தொழிற்சாலை கொழும்பில் நிறுவப்படும். 1998 யில் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாட்டுத் தீனி உற்பத்தி நிலையமொன்றும் 1998 யில் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறுவப்படும்.

நெதர்லாந்திலிருந்து நவீன அச்சடிப்பு இயந்திரபொறியொன்றினை அச்சடிப்புப் படைவரைவு பாடசாலை ஏற்கெனவே பரிசாகப் பெற்றள்ளது. இத் துறையில் இறங்கும் இந் நாட்டிலுள்ள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இக் கைத்தொழிலில் கிடைக்கும் புதிய தொழில்நுட்பவியலைத் தெரிவிப்பதற்கே இது பெறப்பட்டது.

யாழ்ப்பாணம் விடுதலையாக்கப்பட்டதை அடுத்து, யாழ்ப்பாண மக்களுக்கு உணவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தனியுரிமை பெற்ற அமைப்புடனான உணவுச் சந்தைப்படுத்தல் தொடரை நிறுவுவதற்கு முதலில் சென்ற நிறுவனங்களில் கூ. மொ. வி. நிறுவனம் ஒன்றாகும். எனது அமைச்சின் கீழான மற்றைய வர்த்தக நிறுவனமான – சலுசலவும் லங்கா பொது வியாபாரக் கம்பனியும் வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் கிளைகளை நிறுவின. கூ. மொ. வி. நிறுவனமும் பிற நிறுவனங்களும் இருந்தமை யாழ்ப்பாணம் பாவனையாளர் பொருட்களின் சந்தை விலைகளை நிலைநாட்டுவதில் பெருமளவில் உதவியுள்ளன.

இப் பின்னணி மீது, இவ் அமைச்சின் கவனத்தின் கீழ் வரும் சகல 16 நிறுவனங்களிலும் 1998 ஆம் ஆண்டில், தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக ஆட்சியின் பரந்த கொள்கை அமைப்புக்குட்பட்ட திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் மீது நடைபெறுகின்ற அதிகளவிலான தொழிற்பாட்டுக் காலத்தை நான் எதிர்பார்க்கிறேன்

கிங்ஸ்லி. ரி. விக்ரமரட்ன.

உள்நாட்டு, சர்வதேச, வாணிப, உணவு அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சின் கடப்பாடு

அரசாங்கத்தின் பரந்த வர்த்தகக் கொள்கை அமைப்பை அபிவிருத்தி செய்கையில் இறக்குமதி வர்த்தகத்தில் ஆகக் குறைந்த அரசுக் கட்டுப்பாட்டுடனும் அரசத் தனியுரிமையுடனும் திறந்த சந்தைச் சூழலில் வர்த்தகத் தொழிற்பாடுகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மட்டங்களைக் கொண்ட விளையாட்டுத் துறையில் விளையாட்டுக்காரர்களுக்கிடையில் தனியார் துறையினரின் பங்குபற்றலையும் நலம் தரும் போட்டியையும் பாவனையாளர்களுக்கு சிறந்த வாணிகத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு முன்னேற்றுவதே இவ்வமைச்சின் முக்கிய அக்கறையாக இருந்தது. சந்தைரீதியான தாராளமாக்கப்பட்ட வர்த்தக அமைப்பு நிலைத்திருக்க வந்துள்ளதால், இத் தொழில்களை மேம்படுத்துவதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு, வளர்ப்பதற்கு, மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சுதந்திர வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கான கண்காணிப்பாளராகவும் ஒழுங்கு செய்பவராகவும் இருப்பதே அமைச்சின் அடிப்படையான பங்காகும்.

வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகள் இரண்டின் மூலமும் ஆரம்பத்தில் ஏற்றுற்மதிகளுக்கான உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம் பொருளாதாரத்தின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கையின் பாரம்பரிய, பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களும் சேவைகளும் முன்னேற்றப்பட்டன. இந் நோக்கத்தை அடையும் பொருட்டு தேவையற்ற ஒழுங்குவிதிகளும் கட்டுப்பாடுகளும் மேலும் நீக்கப்பட்டன.

மாறுபடுகின்ற சர்வதேசவர்த்தசச் சூழலில் வெளியேறுகின்ற உலகளாவிய வர்த்தக வாய்ப்புகளின் சவால்களைச் சமாளிக்கும் பொருட்டு இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை உருவாக்கப்பட்டு சீர் செய்யப்பட்டது. பெறுமதியுடைய ஏற்றுமதியாளர்களை அதிகரிப்பதையும் புதிய சந்தைகளைக் கண்டுபிடிப்பதையும் நோக்கி அடிப்படைரீதியாக இக் கொள்கை திசை திருப்பப்பட்டது. அதே நேரத்தில் தற்போதுள்ள சந்தைகள் பேணப்பட்டு விஸ்தரிக்கப்பட்டன. கப்பற் சரக்கேற்றமும் நிதி நிலையங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன. அத்தடன் மூலதனம், தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கு முதலீட்டு வரவையும் ஏற்றுமதியை முன்னணியாகக் கொண்ட வளர்ச்சிக் கொள்கையையும் பின்பற்றி சுதந்திரமான, திறந்த பலபக்க வர்த்தக முறையைப் பலப்படுத்துவது நோக்கி உதவப்பட்டதுடன் தேசிய பொருளாதாரத்தை விரிவுசெய்வதற்கு ஆக்கபூர்வமாக உதவும் பாவனையாளர்களின் அடிப்படைத் தேவைகளும், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்கு இடைப்பட்ட மூலதனப் பொருட்களும் தடையின்றிக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதை இறக்குமதிகள் மீதான அரசாங்கக் கொள்கை இலக்காகக் கொண்டுள்ளது.

அமைச்சின் கவனத்தின் கீழ் வரும் 17 நிறுவனங்களின் செயல் நிறைவேற்று விபரங்கள் வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இத் தொழிற்பாடுகளின் சில சிறப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டின் போது நான்கு கூட்டுக்குழுக் கூட்டங்கள் இலங்கை, இந்தியா, குவெயிட், ஈரான், ஐரோப்பிய சமூகத்திற்கிடையில் நடைபெற்றன.

இக் கூட்டுக் குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் வர்த்தகப் பரிமாற்றம், முதலீட்டு முன்னேற்றம் தொழில்நுட்ப கூட்டுறவு, வங்கிப்படுத்தல், கப்பற்சேவை போன்ற சேவை ஏற்றுமதிகள் விசேடமாக உள்நாட்டு மூலப் பொருட்களைப் பாவித்து கூட்டு முயற்சிகள்கலாச்சார கல்விரீதியான ஒத்துழைப்பு வெளிநாட்டு வேலைவய்ப்பு ஆசியனவாகும். சகல கூட்டுகுழுக் கூட்டங்களுக்கும் பெரும் தனியார் துறை பங்குபற்றல் ஒழுங்குசெய்யப்பட்டதுடன் எமது குழுக்களிலுள்ள வர்த்தக ஆலோசகர்கள் தூதரகப் பதவியாளரின் உதவியுடன் தனியார்துறை கூட்டு முயற்சியாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டடு ஒன்றுடன் ஒன்றான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினாலும் வாணிபத் திணைக்களத்தினாலும் பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைச்சினால் உருவாக்கப்பட்ட மொத்த சந்தை அணுகு முறைக் கொள்கை, அக் கூட்டங்களிலான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதுடன் இணக்கப் பேச்சு வார்த்தைகளுக்கும் உதவியாக இருந்தன.

1996 யில் நடாத்தப்பட்ட மொஸ்கோ ஒற்றை நாட்டுச் சந்தையில் பெற்ப்பட்ட பெறுபேறுகளினால் ஊக்கப்படுத்தப்பட்டு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் 1977 யில் பெல்கிறேடில் இன்னுமொரு ஒற்றை நாட்டுக் கண்காட்சியை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இ.ஏ.அ சபையும் 38(1996) 22(1997) பொருள் வரையறுக்கப்பட்டதும் பொது வியாபாரச் சந்தைகளையும் சந்தைகளும் ஏற்பாடு செய்தது. இச் சந்தைகளில் இணச்கஞ் செய்யப்பட்ட கட்டளைகளின் பெறுமதி ஏறக்குறைய ரூபா 1830 மில்லியன் கொண்ட தொகையாகும். இ.ஏ.அ சபையினால் எற்பாடு செய்யப்பட்ட மிக முக்கிய வர்த்தக நிகழ்ச்சி எக்ஸ்போ 97.) இது60 நாடுகளிலிருந்து பங்குபற்றுவோரைக் கவர்ந்ததுடன் எக்ஸ்போ 97 யில் இணக்கஞ் செய்யப்பட்ட கட்டளைகள் 180மில்லியன் தொகை சொண்டதாகும். 1994/95 ஆம் ஆண்டுகளின் போதான மிகச் சிறந்த செயல் நிறைவேற்றுகைக்கென 21 ஏற்றமதியாளர்களுககு இவ்வாண்டில் ஜனாதிபதி விருதுகள் வழங்கப்பட்டன. ஏற்றுமதிகள் சர்வதேச ரீதியாக போட்டியிடத்தக்கன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு கொள்கைச் சூழலை இ.எ.அ.ச தொடர்ந்து கண்காணித்தது.

தொழிலை முன்னேற்றம் பொருட்டு ஐ.இ, இத்தாலி, அவுஸ்திரேலியா, ஈரான், குவெயிட், யூகோஸ்லாவியாவுடன் பல தொழில் மன்றங்கள் உருவாக்கப்பட்டன.

உள்நாட்டு, சர்வதேச சமூகத்திற்கு வர்த்தக, முதலீட்டுத் தகவலைப் பரப்புவதற்கு உலகளாவிய வெப்சைட் ஒன்று, ரேட்நெற்றின் செயற்பாட்டை யடுத்து நிறுவப்பட்டது. முதன் முறையாக எக்ஸ்போ '97 யிற்கென விசேட வெப்சைட் உருவாக்கப்பட்டதுடன் மூன்று மாதங்களுக்கொரு தடவை இது சரிபார்க்கப்படும். எக்ஸ்போ 97 உடன் தொடர்புடையதான சிடிறொம்மின் விடுவிப்பு ரேட்நெற் அடைந்த ஒரு வெற்றியாகும். எமது சகல பணிகளுக்கும் அத்துடன் ட்ரேட்நெற் மீது பங்குபற்றவோர்கள் பதிவுசெய்யப்பட்ட எக்ஸ்போ 97 உடன் தொடர்புடையதான உரிய நிறுவனங்களுக்கம் இவ் சிடிறொம்கள் கிடைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூ.மொ.வி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தனியுரிமைத் திட்டத்தை விஸ்தரிக்கும் பொருட்டு, பொதிசெய்யப்பட்ட நுகர்வுப் பண்டங்களுக்கான பாவனையாளர் தேவையைச் சமாளிக்க கூ.மொ.வி. நிறுவனத்தால் முடியாதிருந்ததால் கூ.மொ.வி. நிறுவனத்திற்கென மிளகாய் அரைக்கும் வேலையை பொறுப்பேற்பதற்கு பொருள் தனியுரிமையாளர்கள் நியமிக்கப் பட்டனர். லுனுகம்வெஹரவிலும் மெதிரிகிரியவிலும் இரு நெல் ஆலைகளை உருவாக்குவதன் மூலம் நெல் அரைப்பதிலும் கூ.மொ.நி பிரவேசித்தது. மிளகாய், வெங்காயம், பயறு, எள் முதலியன போன்ற விவசாயப் பொருளுக்கான ஆகக் குறைந்த விலையை உத்தரவாதப்படுத்தும் திட்டமொன்றினை அரசாங்கம் அறிமுக்ப்படுத்தியது. இப் பொருட்களைப் பிரகடனப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த விலையை உத்தரவாதப்படுத்தியமை விவசாயிகள் தமது உற்பத்திக்கு நியாயமான விலைகளைப் பெறுவதற்கு உதவியது.

மேற்கூறப்பட்ட விவசாயப் பொருட்களை வளர்க்கும் விவசாயிகளைப் பதிவு செய்வதற்கு இவ்வமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ் வகையாக கூ.மொ.வி.நி இப் பொருட்களின் கொள்வனவின் போது விவசாயிகளைக் கண்டுபிடிக்க முடியுமாயிருக்கும்.

இலங்கையில் பால் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான கூட்டு முயற்சியொன்றினை நிறுவுவதற்கு தேசிய பாற்பண்ணை அபிவிருத்தி சபையுடன் எம்.ஒ.யு. ஒன்றினை இலங்கை கைச்சாத்திட்டது. திரவ பால் சேகரிப்பை அதிகரிப்பதனால் கூட்டு முயற்சி கம்பனி, கிரியா பால் கைத்தொழில் வங்கா கம்பனி லிமிட்டெட் தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. பால் பதனிடும் தொழிற்சாலையின் கொள்திறத்தை விரிவு செய்வதற்கும் விலங்கு தீனி நிலையமொன்றினை நிறுவுவதற்கும் இக் கம்பனி நடவடிக்கை எடுக்கும்.

நெதர்லாந்தைச் சேர்ந்த (நெதர்லாந்தில் சர்வதேச படவரைவு மாணவர்கள்) இங்கிறினுடன் இணைந்து அச்சடிப்பு படவரைவு நிறுவனமொன்று நிறுவப்பட்டது. இது முதல் 3 ஆண்டுகளிலும் தொழில்நுட்ப ஆலோசனையையும் ரூபா 70 மில்லியன் தொகை கொண்ட நிதி உதவியையும் அளிக்கும். உள்நாட்டு அச்சடிப்போர் சங்கத்துடன் சேர்ந்து சில உள்நாட்டு தனியார் துறை அச்சடிப்போர்கள் இத் திட்டத்திற்கு உடந்தையாயிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணிபத் திணைக்களம்

உள்நாட்டு, சர்வதேச வாணிப உணவு அமைச்சின் வெளிநாட்டு வியாபாரக் கொள்கையின் மீது மதியுரை வழங்குவதும் வெளிநாட்டு வியாபாரத் தொடர்புகளை இருமுனைப்பாகவும், பிராந்திய மட்டத்திலும், பலமுனைப்பாகவும் செயற்படுத்துவதும் வெளிநாடுகளில் வியாபார நடவடிக்கைகளை விருத்தி செய்வதும் இத் திணைக்களத்தின் பொறுப்பாகும். இலங்கையின் வெளிநாட்டுப் பிரதிநிதித்துவத்திற்கும் கூட இத் திணைக்களமே பொறுப்பாகும்.

பொருளாதார அபிவிருத்தியில் இலங்கையைத் தெற்கு ஆசியாவின் முக்கிய கேந்திர ஸ்தானமாகவும் சர்வதேச வர்த்தக மையமாகவும் விருத்தி செய்வதில் வெளிநாட்டு வியாபாரத்துறையின் பங்கு எப்படி இருக்கவேண்டுமென அரசு கொண்டுள்ள நோக்கின் அடிப்படையில் பாரம்பரிய வர்த்தகப் பிணைப்பிகளை வலுப்படுத்தல். புதிதாக ஏற்படும் சந்தைகளை இனங்கண்டு விருத்திசெய்தல், சிறிய, நடுத்தர நிறுவனங்களை சர்வதேச வர்த்தக அமைப்பில் பங்குபற்றக்கூடிய வகையில் பலப்படுத்தல் போன்ற முய்ற்சிகளில் ஈடுபடும் வகையில் இந்த ஆய்வுக்கு உட்பட்ட காலத்தில் இத்திணைக்களம் தனது திட்ட நடவடிக்கைளைத் தொடர்கிறது.

### 1. இருமுனைப்பு வியாபரமும் பொருளாதாரத் தொடர்புகளும்.

*1996,1997 காலத்;தில் இலங்கைக்கும் கீழ்த் தரப்பட்ட நாடுகளுக்கும் இடையில்; ஆறு இணைப்பு ஆணைக்குழு அமர்வுகள்; நடந்தன.*

1. **ஈரான்** (டெஹ்ரான், நான்காம் அமர்வு, 1996 ஜனவரி)
2. **எஹிப்து** (கெயிரோ, முதலாம் அமர்வு, 1996 ஜனவரி)
3. **சீன்ா** (பீஜிங், இரண்டாம் அமர்வு, 1997 மார்ச்)
4. **இந்தியா** (கொழும்பு, மூன்றாம் அமர்வு, 1997 ஜனவரி)
5. **குவெயிட்** (கொழும்ப, முதலாம் அமர்வு, 1997 மார்ச்)
6. **ஈரான்** (கொழும்பு, ஐந்தாம் அமர்வு, 1997 மார்ச்/ஏப்ரல்)
7. **யூ** (கொழும்பு, பதின்மூன்றாம் அமர்வு, 1997 மே)

உள்நாட்டு, சர்வதேச வாணிகத்துறையின் கௌரவ அமைச்சரின் பணிப்பன் கீழ் இத் திணைக்களம் மேற்குறிபபிடப்பட்ட ஒவ்வொரு இணைப்பு ஆணைக்குழு அமர்வு ஒழுங்குகள் சம்பந்தப்பட்ட தனியார் மற்றும் அரச முகவர்களின் பிரதிநிதிகளுடன் இந்த வாணிபத் திணைக்களம் தொடர்பு கொண்டு இணைந்து செயற்பட்டது.

வர்த்தகப் பண்டமாற்றும், முதலீட்டு ஊக்கம், வங்கிப்படுத்தல், கப்பற்துறை, நிர்மாணம் மற்றும் அதையொத்த சேவைகளின் ஏற்றுமதி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, வெளிநாட்டுப் பொருளாதார உதவி, சிலவேளைகளில், கலாச்சார கல்வி ஒத்துழைப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பன இணைப்பு அமர்வுகளின் செயற்புலங்களாகும். இந்த இணைப்பு ஆணைக்குழு அமர்வுகள் இலங்கைக்கம் சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசக்கும் இடையே அரச உயர்மட்ட ஆலோசனைகளுக்கு வழிகோலி பரஸ்பர நன்மை தரககூடிய திட்டங்களை ஏற்படுத்த ஏதுவாயின. சில அமர்வுகளில் இணைப்பு முயற்சிகள், முதலீட்டு ஊக்கம் போன்றவநற்றை நிறுவுதல் முக்கிய இடத்தைப் பிடித்தன. இணைப்பு முயற்சிகளை ஊக்குவிப்வதற்குப் பல நோக்கங்கள் உள. வர்த்தகத்தில் தொடர்ச்சியாக ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு இடையே சமநிலை ஏற்படாத இடத்து இணைப்பு முயற்சிகள் அந்த நிலைமையைச் சீராக்கக் கூடும். மேலும் அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டவர்களுக்கு வருமானத்தையும் வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தும். இவை தவிர இணைப்பு முயற்சிகள் மூலம் தொழில்நுட்ப அறிவையும் பெறமுடியும். 2001 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட இருக்கும் அகண்ட சார்க் சந்தையிலே இலங்கையின் ஏற்றுமதித் தளத்தை விரிவடையச் செய்வது இணைப்பு முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான ஒரு முக்கிய நோக்கமாகும்.

ஈரானின் பங்குபற்றுதலுடன் இலங்கையில் இணைப்பு முயற்சிகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் மலமைன் பாத்திரங்கள், சரவிளக்குச் சட்டங்கள் இயந்திரங்களினால் செய்யப்படும் கம்பளங்கள்என்பவற்றைத் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இலங்கை – ஈரான் ஆணைக் குழுவின் நான்காவது அமர்விலே மேலும் ஆராயப்பட்டன. அதுபோலவே எகிப்துடன் நடந்த கலந்துரையாடல்களைத் தொடர்ந்து குளிர்ப்பெட்டி அடங்கலாகப் பல மின்சாரப் பொருட்களை இணைப்பு முயற்சிகள் மூலம் உற்பத்தி செய்ய விரும்பும் பல பங்காளிகளிடையே பேச்சுவார்த்;தைகள் நடந்தன. இலங்கை நிறுவனங்களின் பங்குபற்றலுடன் எகிப்தில் இறப்பர் பாண்டங்கள், தும்புப் பாண்டங்கள், பிஸ்கட் இனிப்புவகைகளை இணைப்பு முயற்சிகளாக உற்பத்தி செய்வதற்கான வாய்புக்கள் ஆராயப்பட வேண்டும் எனவும் இணங்கப்பட்டது. காரியம், அப்பிரகம், வைக்கோல், அரிசி, உமி, இரப்பர் போன்ற உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி இணைப்பு முயற்சிக்காகப் பல பொருட்களைத் தயாரிப்பதற்கான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப் பட்டது இலங்கை, சீன் ஆணைக்குழுவின் கூட்டமர்வுகள் மூலம் எற்பட்ட மிகக் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். 24 பிரமுகர்களைக் கொண்ட சன் வர்த்தக முதலீட்டுக் குழு ஒன்று முன்கூட்டியே இனங் காணப்பட்ட இலங்கைப் பங்காளர்களுடன் பேச்சுவார்த்தைக்கு வருகை தர இலங்கைச் சீன் இணைப்பு ஆணைக்குமுவின் அமர்வுகள் வழி கோலின. அவர்கள் இங்கு தங்கியிருந்த காலத்தில் சில திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. அவற்றுள் உமி, எண்ணெய், இனோசிட்டோல், பென்சில்கள், இரத்தினக் கற்களைப் பதனிடல் ஆபரண உற்பக்தி என்பன அடங்கும், இலங்கையின் பொருளாதார வலையத்திற்கு ஆழ்கடலில் மீன்பிடிக்கும் திட்டம் ஒன்றையும் இணைப்பு முயற்;சியாக நிறுவ இணங்கப்பட்டது.

இலங்கை-குவெயிட் இணை ஆணைக்குழுவின் முதலாம் அமர்விலே வளைகுடா கூட்டுறவுக் கழக(வகூக) அங்கத்துவ நாடுகளில் இலங்கை – குவெயிட் கம்பனிகள் கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் ஒழுங்குகளை ஊக்குவித்து இலங்கை உற்பத்திகளை விற்பனை செய்வது பற்றி ஆராயப்பட்டது. குவெயிட், இலங்கை மற்றும் வகூக, சார்க் நாடுகளில் நிர்மாண ஒப்பந்தங்களையும் உப ஒப்பந்தங்களையும் இரு நாட்டுக் கம்பனிகளும் கூட்டாகப் பொறுப் பேற்பதை ஊக்குவிக்க வேண்டும் என இணங்கப்பட்டது. குவெயிட் முதலீட்டு அதிகாரசபை (குமுஅ) தனது ஈடபாட்டை வியாபித்து பொதுக் கம்பனிக ளிலும் உள்ளக அமைப்புத் திட்டங்களிலும் முதலீடு செய்து உதவும்வகையில் இலங்கை குவெயிட் அரசிடம் வேண்டிக் கொண்டது.

இலங்கையின் முக்கிய பாரம்பரிய ஏற்றுமதியான தேயிலைச் சந்தைப் படுத்தலை ஊக்குவிக்கும் வகையில் கூட்டுச் சந்தைப்படுத்;தல் ஒழுங்ககள் செய்;வது பற்றி சில ஏற்புடைத்தான கூட்டு ஆணைக்குழு அமர்வுகளில் ஆராயப்பட்டன. 1995 இன் பிற்பகுதியில் இலங்கைக்கும் மாலை தீவுகளுக்கும் இடையே நடந்த இணை ஆணைக்குழு அமர்வில் இணங்கப்பட்ட பிரேரணைகளின் தொடர்ச்சியாக உணவு, உள்நாட்டு, சர்வதேச வாணிகத் துறையின் கௌரவ அமைச்சர் இலங்கையிலிருந்து அரிசி, கோதுமை மா, பெற்றோலிய உற்பத்திகள் என்பவற்றை மாலை தீவுக்குக் கப்பலேற்றும் நோக்குடன் மார்ச் மாதத்தில் அந் நாட்டின் சரி நேர் அமைச்சருடன் விரிவான கலந்துரையாடல்களை நடாத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997 ஜனவரியில் கொழும்பில் நடந்த இலங்கை இந்திய கூட்டு ஆணைக்குழவின் இருமுனைப்பான கலந்துரையாடல்களில் இலங்கையினால் ஏற்றுமதி செய்யக்கூடிய பாண்டங்களின் தீர்வைக் குறைப்பு மற்றும் என்டீபீ க்களை அகற்றுதல் போன்ற வியாபாரச் சலுகைகள் பற்றி முக்கியமாக ஆராயப்பட்டன. ஒரு தலைப்பட்ட அடிப் படையில் குறைந்தது 70 வகைப் பாண்டங்களுக்கு இந்தியா வர்த்தகச் சலுகைகள் வழங்க முன்வந்ததுடன் அலுவலர் குழு ஒன்றை இலங்கையிலிருந்து இந்தியாவிழுற்கு வரும்படி அழைப்பு விடுத்தது. வர்த்தகச் சலுகை வழங்கும்படி முன்னரே சமர்ப்பிக்கப்பட்ட 182 வகைப் பாண்டங்கள் அடங்கிய பட்டியலை வாணிகத் திணைக்களம் சம்பந்தமுள்ள தணியார், அரச நிறுவனங்களுடன் ஆராய்ந்து 84 வகைப் பாண்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. மேற்படி கலந்துரையாடலின் தொடர்ச்சியாக இருமுனை மட்டத்திலான உத்தியோக பூர்வ கூட்டம் ஒன்று 1997 மே யில் புது டில்லியில் நடந்தது.

1996 இன் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைகயில் அடக்கப்பட்டுள்ள சீன் பொருளாதார உதவிகளின் உன்னத அம்சமாவது இனம் காணப்படும் கூட்டு முயற்சிகளை ஏற்படுத்த உதவும் வகையில் ஆர் எம் பீவை 150 மில்லியன் பெறுமதியான வட்டிச் சலுகையுடன் கூடிய முன்னுரிமைக் கடனாகும் (வசமு கடன்)

வேலைச் சந்தையில் மேலும் விரிவான பங்கைப் பெற அவாவும் இலங்கை குறிப்பாகச் செயற்திறத் தொழிலாளர் வேலை வாய்ப்புக்களைப் பெற குவெயிட் அதிகாரிகளின் உதவிகளை வேண்டின.

இலங்கையர்கள் வேலைகளில் அமர குவெயிட் செல்வதற்கு வேண்டிய நுளைவுரிமைகளைக் கொழும்பிலே வழங்க ஆவன செய்வதாக குவெயிட் இணங்கியது. ஆய்வுக் காலத்தின்போது இலங்கைக்கும் தாய்லந்துக்கும் இடையே பொருளாதார தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டதுடன் இருநாட்டுக்கு இடையே ஒத்துளைப்புத் தேவையான புலங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

இலங்கைக்கும் றோமானியாவிற்கும் இடையிலான வர்த்தக, பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துளைப்பு ஒப்பந்தத்திற்கான முன்னுரிவு தயாரிக்;கப்பட்டு ஒப்பமிடுவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெற்றுள்றது.

இலங்கை துருக்கிக் கிடையிலும் தொழில்நுட்ப பொருளாதார ஒத்துளைப்புகளுக்கான ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று எதிர்பாரிக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின் கருப்பொருட்களுக்கு ஏலவே அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைத்துள்ளது.

இணைப்பு ஆணைக்குழ ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட நாடுகள் தவிர ரூசியக் கூட்டரசு, யூகோசலேவிய சமஷ்டிக் குடியரசு, ரூமேனியா, கிழக்கு ஐரோப்பாவின் யூக்ரெயின் எனும் நாடுகளின் உயர் அதிகாரிகளுடனும் ஆய்வுகாலத்தில் தொடர் கலந்துரையாடல்கள் நடந்தன. கௌரவ அமைச்சர் 1996 இல் ரூசிய கூட்டரசுக்கு விஜயம் செய்த போது அக்கூட்டரசின் தேயிலை கொள்வனவாளர்களுக்கு தேயிலைத் தர உத்தரவாதத்தில் அரசின் பங்கை விளக்கியதைத் தெரடர்ந்து கொழும்பு தேயிலை ஏலத்தில் நல்ல தாக்கம் எற்பட்டது. கொழம்பு எலத்தில் ரூசிய கூட்டரசு தேயிலையை மீண்டும் பெருந் தொகையாகக் கொள்வனவு செய்யத் தொடங்கியதால் ஆய்வுக்கான காலத்தில் தேயிலையின் விலையில் முன்னேற்றம் காணப்பட்டது. சந்தையின் தேவைகளை செயற்திறனுடன் பூர்த்தி செய்வதற்கு உதவும் வகையில் ரூசியக் கூட்டரசில் சொந்தக் களஞ்சியங்களை ஏற்படுத்த கௌரவ அமைச்சர் இலங்கை நிறுவனங்களுக்கு ஊக்கமளித்தார். சில முன்னணி எற்றுமதியாளர்கள் இத்தகைய வசதிகளை நிறுவியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பிராந்தியக் கூட்டுறவு

### 2.1 (சப்ற்றா்)

சார்க் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (சப்ற்றா) சார்க்கின் 10 வருடச் செயற்பாட்டின் பின் 1995 டிசம்பர் 7 இல் செயற்படத் தொடங்கியது. சார்க் நாடுகள் தத்தமது தேசிய அரசுகளில் சுங்கவரிச் சலுகைக் கென பட்டியற்படுத்தப்பட்ட 226 வகைப் பண்டங்களுக்கு 10 முதல் 90% சலுகைகள் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1996 மார்ச் 1 முதல் அவை நடைமுறைக்கு வந்தன. இலங்கை நேரடியாக ஏற்றுமதி செய்வதில் நாட்டங்கொண்ட 62 இற்கும் அதிகமான பாண்ட வகைகளுக்கு சுங்க வரிச் சலுகையைப் பெற்றது. தேயிலை, வாசனைத் திரவியம், இறப்பர் உற்பத்திகள், தெங்குப் பொருட்கள், மட்பாண்டங்கள் சொக்ளெட் போன்ற விவசாய குறை உற்பத்திப் பொருட்கள் இவற்றுள் அடங்கும். இதற்குக் கைமாறாக இலங்கை 31 வகைப் பாண்டங்களுக்குச் சங்கவரிச் சலுகைகளை வழங்கியது.

1996 இல் நான்கு இசைவிணக்கமுனைவமர்வுடன் இரண்டாம் சுற்று வியாபார இசைவிணக்கமுனைவுகள் முற்றுப் பெற்று அவ்வாண்டு டிசம்பரில் இறுதிப் பட்டியல் கைமாறப்பட்டது. இரண்டாவது சுற்றில் பிராந்தியத்தின் நாடுகள் 1767 இற்கும் அதிக வகைப் பண்டங்களுக்கான சுங்கவரிச் சலுகைகளைக் கைமாறியது. இலங்கை 22 வகைப் பாண்டங்களுக்கான நேரடிச் சலுகைகளை இந்தியாவிடமிருந்தும் 14 வகைப் பாண்டங்களுக்கு நேபாளத்திட மிருந்தும், 02 வகைப் பாண்டங்களுக்கு மாலைதீவிலிருந்தும், 03 வகைப் பாண்டங்களிற்கு பூட்டானிடமிருந்தும், 05 வகைப் பாண்டங்களுக்கு வங்களாதேசத்திடமிருந்தும் 21 வகைப் பாண்டங்களுக்கு பாகிஸ்தானிடமிருந்தம் சுங்க வரிச் சலுகைகளைப் பெற்றது. இதறகுக் கைமாற்றாக இலங்கை இப் பிராந்திய நாடுகளில் ஆக்கப்பட்ட 92 வகைப் பாண்டங்களுக்கு சுங்க வரிச் சலுகைகளை வழங்கியது. மேலே குறிப்பிட்ட நேரடிச் சலுகைகளுக்கு மேலாக மற்ற நாடுகளுக்க இடையே ஏற்படுத்தப்பட்ட சுங்சவரிச் சலுகைகளாலும் பயன்பெற முடியும்.

1996 ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதியாளர்கள் அங்கத்துவ நாடுகள் சப்ற்றா வழங்கிய சலுகைகளைப் பயன்படுத்தி யூ எஸ் டொலர் 2.6 பில்லியன் பெறுமதியான மொத்த ஏற்றுமதிகளை சார்க் பிரதேசத்தில் மேற்கொண்டது. இந்தச் சலுகைகளின் பலன்களை மதிப்பிடக் கூறமுடியாத முதிரா நிலையே தற்போதும் வங்களா தேசத்துடனான வர்தகம் தவிர ஏனைய சப்ற்றா நாடுகளுடனான இலங்கையின் இருமனை வர்த்தகச் சமநிலை இலங்கைக்குப் பாதகமாகவே இருந்தது. சப்ற்றா ஒழுங்குகளின் உதவியுடன் இப்பிராந்தியத்திற்கான ஏற்றுமதிகளைப் படிப்படியாக அதிகரித்து இறுதியில் நல்ல சந்தைகளில் இலங்கை புகுவதனால் இந்த நாடுகளுடனான பாதகமாக வர்த்தகச் சமநிலையில் முன்னேற்றம் காணமுடியும் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இரண்டாம் சுற்று இசைவிணக்கமுனைவமர்வுகளின் போது இணக்கங் காணப்பட்ட சலுகைகளை 1997 முதற்காலில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இலங்கையினால் வழங்கப்படும் சுங்கவரிச் சலுகைகளை ஒரு விசேட வர்த்தமானியிற் பிரசுரிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. இலங்கை அரசின் வர்த்தமானியின்படி இந்தச் சலுகைகள் ஜுலை 15 முதல் செயற்படும்.

வெளிநாட்டு அமைச்சின் வேண்டுகோளுக்கு அமைய சார்க் நாடுகளுக்கு இடையிலான பொருளாதார ஒத்துழைப்புப் பற்றியும் சப்ற்றா உடன்படிப்புப் பற்றியும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதுடன் அவை மாலைதீவில் 1997 மேயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த உச்சி மகாநாட்டில் ஆராயப்பட இருந்தது. கௌரவ வர்த்தக அமைச்சரும் வாணிகத் திணைக்களப் பணிப்பாளரும் இம் மகாநாட்டிற்கான பிரதிநிதிகள் ஆவர். இந்த மகாநாட்டில் தெற்கு ஆசிய சுதந்திர வர்த்தக வலயத்தை (சவ்றா) ஆரம்பிக்கும் உத்தேச வருடம் 2001 இற்கு முன் கொண்டுவருதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

சப்ற்றா விலிருந்து சவ்றா வாக மாறுவது பற்றி அரசுகளுக்கு இடையிலான வல்லுணர் குழுவின் விசேட உபகழு (ஐ. ஜீ. ஈ. ஜீ) நிர்வாகசபைக் கூட்டம் 1997 ஜுன் 17 முதல் 18 வரை நடந்ததுடன் வணிபத் திணைக்களப் பணிப்பாளர் இக் குழுவிற்குத் தலைமை வகித்தார். ஐ. ஜீ. ஈ. ஜீ யின் கலந்துரையாடல்களின்படி சவ்றா உடன்;படிக்கையை எற்படுத்தும்போது அதில் கீழ்க்காணும் அம்சங்கள் அடங்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அ) இறக்குமதிக் கட்டுப்பாடுகள் எதுவும் இன்றிச் சுங்கவரிகளை அகற்றுதல்.

ஆ) அமைப்புத் தடைகளை அகற்றுதல்.

இ) சுங்க வழிமுறைகளையும் ஆவணாதிகளையும் இசைவுபடுத்தல்

ஈ) வங்கி வசதிகள்

உ) துறைமுக போக்கவரத்து வசதிகள்

ஊ) வர்த்தகம் தொடர்பான சேவைகளை வழங்குதல்

எ) மீளாய்வு, கண்காணிப்பு நடைமுறைகளை நிறவுதல்.

சப்றாவின் கீழ் சுங்கவரிச் சலுகைகள் வளங்குவது பற்றிய மூன்றாவது முனைவிணக்கச் சுற்றை ஆரம்பிக்கும் பொருட்டு வர்த்தக தாராள மயம் பற்றிய முதலாவது கூட்டம் கட்டுமண்டுவில் 1997 ஜுலையில் நடந்தது. சுங்கவரிச் சலுகைகள் சம்பந்தமான விபரமான வேண்டு கோள் பட்டியல்களை இலங்கை இப்பிராந்தியத்திலுள்ள எனைய அங்கத்துவ நரடுகளுக்குச் சமர்ப்பித்தது. தற்போதைய சந்தை நிலைகளையும் வருங்காலச் சந்தை எதிர்பார்ப்புக்களையும் நன்கு ஆராய்ந்த பின்னரே இந்தப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. வர்த்தக சமூகத்;துடன் கலந்தாலோசிக்கப்பட்டது. ஒன்பதாவது சார்க் உச்சிமகாநாட்டின் உரிமைக் கட்டளைகளுக்கு அமைய அங்கத்துவ நாடுகளின் பேராளர் குழக்கள் பலவகை அணுகுமுறை களையும் அவற்றின் இணைவுகளையும் பயன்படுத்தி இரு முனைப்பான இசைவிணக்க முனைவமர்வுகளை நடாத்தின, அதாவது தயாரிப்புக்கள் உப-தயாரிப்புக்கள், பகுதிசார் மற்றும் முழுமையான என்ற வகைகளில் அணுகி அங்கத்துவ நாடுகளிடையே மிகவும் உத்வேகமாக விற்பனை செய்யப்பட்ட தயாரிப்புக்களில் கவனம் செலுத்தத் தீர்மானித்தது. இந்த இசைவிணக்க முனைவமர்வுகளின் விளைவுகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் சப்ற்றா அங்கத்தவர்களிடையே நான்கு ஐஜீஜீ கூட்டங்களை மூன்றாவது சுற்றின் கீழ் 1998 ஜனவரியில் நடாத்த எதிர் பார்க்கப்படுகிறது.

### 2.2 பாங்கொக் உடன்படிக்கை

இந்தியா, வங்காளதேசம், தென்கொரியா, லாவோஸ் குடியரசு, இலங்கை என்பன தற்போதைய அங்கத்தவர்களாக இருக்கும் பாங்கொக் ஒப்பந்தம் பிராந்திய மட்டத்திலான இரண்டாவது முக்கிய ஒப்பந்தமாகும். சனத்தொகை ரீதியிலும் பூகோளரீதியிலும் சீனா இந்த ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்ளும் பட்சத்தில் இது ஆசியப் பிராந்தியத்தின் மிக முக்கியமான ஒரு ஒப்பந்தமாக இருக்கும். சீனா இதிற் சேர்வதற்கான விண்ணப்பங்களைச் செய்துள்ளதுடன் இந்த ஒப்பந்த நாடுகளுடன் சுங்கவரிக் குறைப்புப் பற்றி இருமுனைப்பான கூட்டங்களையும் ஏற்கெனவே நடாத்தியுள்ளது. இலங்கை சீனாவுடன் சுங்கவரிச் சலுகைகளை ஆராயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவிணக்கமுனைவுகளைச் செய்து 1997 ஜுலை 11 இல் முடிவான தீர்மானங்களை எடுத்துள்ளன. இந்த இசை விணக்கமுனைவிகளின் போது தற்போது இலங்கை சீனாவிற்கு ஏற்றுமதி செய்யும் 40 இகும்; அதிகமான வகைப் பொருட்களுக்கு அதாவது தற்போது பெரும்பாலும் எற்றுமதி செய்யும் எல்லா வகைப் பொருட்களுக்கும் சுங்கவரிச் சலுகை வீதங்களை வழங்கச் சீனா இணங்கியது.

## 2.3 ஜீஎஸ்ரீபீ (வியாபார முன்னுரிமைகளில் உலகளாவிய முறை)

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வர்த்தகங்களை அதிகரிக்கும் நோக்கைக் கொண்ட 77 அங்கத்துவ நாடுகளின் ஜீஎஸ்ரீபீ ஒப்பந்த அமைப்பு ஆய்வுக் காலத்தில் அதன் அங்கத்தவர் தொகை அதிகரிக்கவும் உற்பத்திப் பொருள்களின் வகைகளை வியாபிக்கவும் சுங்கவரித் தாக்கங்களை அனுகூலமாக்கவும் மேலும் முயற்சிகளை எற்படுத்தியது. இரண்டாவது சுற்று இசைவிணக்க முனைவுகளின் கீழான உற்பத்திகள் உப-உற்பத்திகள் பற்றிய இசைவிணக்க முனைவுகள் மும்மரமாக நடந்தன. நேரெதிர் சுங்க வரி இசைவிணக்கப் புலத்திலும் நடவடிக்கைகள் தொடர்ந்தன. சம்பந்தப்பட்ட அம்சங்களின் பாரதூரமான சிக்கல்கள் காரண மாக ஏனைய புலங்களிலான இசைவிணக்க முனைவுகளில் சிறு முன்னேற்றமே காணப்பட்டது. ஜீஎஸ்ரீபீ யில் பங்கு கொள்ளும் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இரண்டாவது சுற்று இசை விணக்க முனைவுகள் 1997 செப்தெம்பர் இறதிவரை தொடர்வதுடன் 1997 முடிவிற்குள் இறுதி முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1996 பெப்ரவரியில் கிடைத்த அமைச்சரவை அங்கீகாரத்தைத் தொடர்ந்து நடைமுறையிலுள்ள ஜீஎஸ்ரீபீ இசைவிணக்க முனைவுகளில் பிறேசில் (மேர்கொகுர்), ஈகுவாடோர், ஈராக், ஈரான் நைஜீரிய என்பவற்றுடன் இருமுனைப்பான இசைவிணக்க முனைவுகளில் ஈடுபட்டது. ஜீஎஸ்ரீபீ யின் கீழான இசைவிணக்க முனைவுகள் தொடர்கின்றன.

# 3. பலமுனைப்பான வியாபாரத் தொடர்புகள்.

## 3.1 உலக வியாபார நிறுவன (உவிநி) ஒப்பந்தங்கள்.

1995 ஜனவரியில் உவநி நிறுவப்பட்டதைத் தொடர்ந்தும் ஒப்பந்தம் செயற்படுத்தப்;பட்டதைத் தொடர்ந்தும் ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை தனது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யவேண்டி இருந்தது. மேலும் இந்த ஒப்பந்தங்களினால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு எற்படக்கூடிய தாக்கங்களை ஆராய்ந்து நிர்வாகிகள், அறிஞர்கள், வர்த்தகச் சமூகம் என்பவற்றிற்கு இப்புதிய பலமுனைப்பான வியாபார அமைப்பில் எமது உரிமைகள் கடப்பாடுகள் உணர்த்துவதும் அவர்களிடையே எதிர்காலத்திற் கிடைக்கக் கூடிய வியாபார வாய்ப்புகள் பற்றிய விளிப்புணர்வை எற்படுத்துவதும் வேண்டப் படுகிறது. இந்தக் குறிக்கோள்களை எய்தும் பொருட்டும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் கலந்து ஆலோசித்துக் கொள்கைகளை உருப்படுத்தவும் பல வேறுபட்ட உவிநி ஒப்பந்தங்களுக்கென உணவு, உள்நாட்டு, சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் அமைச்சுக்களுக்கு இடையிலான நிர்வாக சபையும் பத்து உப-நிர்வாகசபைகளும் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த உப-நிர்வாகசபைகள் தொடர்புடைய நிரல் அமைச்சின் உயர் மட்ட அலுவலர்களின் தலைமையில் இயங்கும். இந்த நிர்வாக சபைகள் வர்த்தக அமைச்சு மற்றும் தொடர்புடைய நிரல் அமைச்சுக்களுக்கு இடையேயும் வியாபாரக் கழகங்களுக்கும் இடையே முக்கிய தொடர்புகளை ஏற்படுத்தி உவிநி விடயங்கள் இந்த நிறுவனங்களினதும் சமூகத்தின் பல தரப்பட்ட பகுதிகளினதும் அபிலாசைகைளப் பிரதிபலிக்கும் வகையினதாக்கி கொள்கைை வழிப்;படுத்தலைக் பேரளவினதாக்க வழிவகை செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவிநிஒப்பந்தங்களுக்க ஒவ்வ உள்நாட்டுச் கட்டங்களை எங்கெங்கு புகுத்த வேண்டும் என்பதை இந்த உப-நிர்வாகசபைகள் ஏலவே இனங்கண்டுள்ளன. உதாரணமாக உள்ளூரிலே பாண்டங்களைக் கொண்டு குவித்தலைத் தவிர்த்தல், எதிரீடு செய்யும் வழிமுறைகள் பற்றிய காப்பு விதிகளின் வரைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 3.2 சிங்கப்பூர் அமைச்சுக்களின் கூட்டம்.

'96 டிசம்பரில் உவிநி இன் அமைச்சுக்களின் மகாநாடு சிங்கப்பூரில் நடந்தது. உவிநி நிறுவப்பட்ட 1995 ஜனவரி முதல் அதன் செயற்பாடுகளை மதிப்பிட்டு அதன் வருங்காலச் செயற்பாட்டுக்கான பணிப்புக்களை வழங்குவதே இந்த மகா நாட்டின் முக்கிய குறிக்கோளாகும்.

நெசவு துணிகள், தயாரித்த ஆடைகள், முதலீடு போட்டிக் கொள்கைகளில் நவீன அம்சங்கள், தொழிலாளர் தரங்கள், அரச கொள்வனவுகள் போன்றவை மகாநாட்டில் இலங்கையின் கவனத்தை ஈர்த்த முக்கிய விடயங்களாகும். நெசவு துணிகள், தயாரித்த ஆடைகள் பற்றிய ஒப்பந்தின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய அபிவிருத்தி அடைந்த நாடுகள் அவற்றின் இறக்குமதிக்கு அர்த்தமுள்ள தாராளமயத்தை ஏற்படுத்தவில்லையே எனப் பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அங்கலாய்த்தன. நெசவு துணிகளுடன் தயாரித்த ஆடைகளை இணைப்பது குறுகிய எதிர்காலத்தில் இலங்கைக்குப் பாரிய தாக்கங்களை ஏற்படுத்த மாட்டாது எனினும் உவிநி திட்டத்தின் கடைசி வருடத்தில் இவை அதன் கட்டுப்பாட்டுக்குள் அடங்க இருப்பதால் பொறுப்புப் பங்கு 2004 ஆம் ஆண்டு முடிவு வரை தொடருமிடத்து இக் கைத்தொழிலில் அமைப்பு மாற்றங்களை மேற்கொள்ள நீண்ட கால அவகாசம் கிடைக்கும் என்ற முறையில் இலங்கை போன்ற நாடுகளுக்கு நன்;மை கிடைக்கம்.

## 4. வியாபார முன்னேற்றம்.

### 4.1 வியாபார மன்றங்களின் முன்னேற்றம்.

#### ஐ.இ - இலங்கை வியாபர மன்றம்.

1996 இல் கௌரவ அமைச்சர் கிங்ஸ்லி. ரி. விக்கிரமரத்ன ஐ. இ க்கு விஜயம் செய்தபோது அவரால் ஐ. இ இலங்கை வியாபார மன்றத்தை வலிமை ஆக்க முடிந்தது. அவர் கழகத்தில் உரையாற்றியதுடன் ஐ. இ. யில் உள்ள பாரிய இறக்கமதியாளர்களையும் வினியோகத்தர்களையும் இம்மன்றத்தில் சேரும்படி அழைத்தார். ஐ. இ. க்கு விஜயம் செய்தததைத் தொடர்ந்து லண்டனிலிருந்தும் லயிஸ்டர்ஷயரிலிருந்தும் இலங்கைக்கு எற்றுமதி செய்பவர்களையும் இலங்கையில் இறக்குமதி ஏற்றுமதிகளைச் செய்பவர்களையும் சார்ந்த நல்லெண்ணததூதுக்குழு அங்கத்தவர்களுடன் வர்த்தக ஒப்பந்;தங்கள் செய்வதற்;கான தொடர்புகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

#### இத்தாலி - இலங்கை வியாபார மன்றம்

இத்தாலியின் ரோமபுரியிலே 1997 பெப்ரவரி 28 இல் கௌரவ உணவு உள்நாட்டு சர்வதேச வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி. ரீ. விக்கிரமரத்ன இத்தாலி இலங்கை வியாபார மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். இத்தாலிய வர்த்தக சமூகம் எமது வர்த்தக சமூகத்துடன் நேரடிப் பேச்சுவார்த்ததைகளை ஏற்படுத்தப்பட்ட கன்னி முயற்சி இதுவாகம். பெல்கிறேட் இல் நடந்த தனிநாட்டு வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றிய பின் இரு தினங்கள் ரோமபுரியில் தங்கியபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலியின் முன்னணி ஆபரண காலணிகள் மற்றும் நவீன பாணி ஆடை வடிவமைப்பாளர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளிற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. எமது ஏற்றுமதிகளின் தங்களை மேம்படச் செய்து இத்தாலி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் மேல்மட்டச் சந்தைகளில் நுழையும் இலக்குடனேய இந்த இரு முனைப்பான பேச்சுவர்த்தைகள் நடந்தன. ரோமபுரியில் நடந்த ஆரம்ப பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இலங்கையில் மேலும் இசைவிணக்க முனைவுகளை மேற்கொள்ள இத்தாலியின் முன்னணி வர்த்தகர்கள் வருகை தந்தனர். கொழும்பில் நவம்பர் மாதத்தில் நடக்க இருக்கும் எக்ஸ்போ '97 சர்வதேசக் கண்காட்சியில் இத்தாலி இலங்கை வியாபாரமன்றத்தின் பாரிய குழ ஒன்று பங்குபற்ற இருக்கிறது.

அவுஸ்திரேலியா - இலங்கை வியாபார மன்றம்.

1997 ஜுன்/ஜுலை யில் நடந்த கௌரவ அமைச்சரின் அண்மைக் கால அவுஸ்திரேலிய விஜயத்தின்போது சப்றா சவ்றா பற்றிய விசேட சுட்டுக் குறிப்புகளுடன் தெற்கு ஆசியாவில் உதயமாகிவரும் வியாபார வாய்ப்புக்களைப் பற்றி சிட்னி, பேர்க், மெல்போனில் நடந்த இலங்கை-அவுஸ்திரேலிய வியாபார மன்றங்களில் உரை நிகழ்த்தும் போது பகர்ந்தார்.

கௌரவ அமைச்சரின் இந்த விஜயத்தின் போதே மேற்கு அவுஸ்திரேலியாவின் பேர்த் இல் அவுஸ்திரேலியா-இலங்கை வியாபார மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து சிட்னி, மெல்போன், பேர்த் இல் உள்ள மூன்றுவியாபார மன்றங்களை யும் இணைத்து ஒரு உச்சி நிறுவனம் அமைக்கப்படும்

ஈரான், குவெயிட் உடனான வியாபார மன்றங்கள்.

இலங்கையில் முதலீட்டை ஊக்குவிக்கும் தனியார்துறையின் உன்னத இயக்க நிலையைக் கருத்திற்கொண்டு இணை ஆணைக்குழுக் கூட்டங்களில் இலங்கை, குவெயிட் வியாபரக் கழகங்களுக் கிடையிலும் இலங்கை, ஈரானுக்கு இடையிலும் இணை வியாபார மன்றங்களை அமைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன.

4.2 எக்ஸ்போ '97

யூகொசிலேவியா அவுஸ்திரேலியாவிற்கு கௌரவ அமைச்சர் விஜயம் செய்து உரைநிகழ்த்திய பல விபாரக் கூட்டங்களிலும் வியாபார மன்றங்கள், மற்றும் வியாபார நிறுவனங்களுடன் தொடர்பு கொண்ட சந்தர்ப்பங்களிலும் எக்ஸ்போ '97 பற்றிய முக்கியத்துவத்தை உணர்த்த முடிந்தது. 1997 நவம்பரில் நடக்க இருக்கும் இந்த எக்ஸ்போ '97 இற்கு இலங்கைக்கு பிரமுகர்களை அனுப்ப அவர்கள் இணங்கியுள்ளார்கள்.

வர்த்தகக் கூட்டங்களில் பங்குபற்றுபவர்களுக்கு கௌரவ அமைச்சரின் யூகோசிலேவிய, இத்தாலிய, அவுஸ்திரேலிய விஜயங்கள் வீடியோ படங்களாகக் காட்டப்படுவதுடன் எக்ஸ்போ '97 பற்றிய அ. உ ஜனாதிபதியின் செய்தி அடங்கிய விசேட தயாரிப்பான எக்ஸ்போ '97 பற்றிய சீ. டீ. றொம் பதிவு நாடாக்களும் விநியோகிக்கப் படுகின்றன.

4.3 வியாபாரச் சந்தை விழாக்கள்.

இலங்கை வாரம் '96 - மொஸ்கோ (1996 ஜுன் 4 முதல் 8வரை)

வர்த்தகம், உல்லாசப் பிரையாணம், முதலீடு ஏனைய வியாபர நடவடிக்கைகளை இலங்கைக்கும் ரூசியாவிற்கும் இடையே ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கை வாரம் '96 ரூசியாவின் மொஸ்கோ விலே 1996 ஜுன் 4 முதல் 8 வரை நடாத்தப்பட்டது. இலங்கை ஏற்றுமதியாளர்கள் பிரயாண முகவர்கள், அரச துறை நிறுவனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எற்றுமதியாளர்கள் வியாபாரச் சந்தை விழாவாக இந்த நிகழ்ச்சி அமைந்தது. "ரூசியாவுடன் எப்படி வியாபாரம் செய்ய வேண்டும்" என்பது பற்றிய ஒரு கலந்துரையாடலும் முதலீட்டுச் சபையின் "இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்கள்" என்ற புத்தகக் கையளிப்பும் மற்றும் இலங்கைக் கலாச்சாரக் குழுவின் நிகழ்ச்சிகளும் ஒரு பாம்பாட்டியின் நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டன.

முப்தேழு ஏற்றுமதிக் கம்பனிகளினதும் ஒன்பது பிரயாண முகவர் கம்பனிகளினதும் பிரதிநிதிகள் இந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர். இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை தேயிலைச் சபை, உல்லாசப் பிரயாண சபை, இரத்தினக்கல் ஆபரண ஆணைக்குழு, இலங்கை வங்கி, சீலன் வங்கி, எயர் லங்கா லிமி, முதலீட்டுச் சபை என்பன பங்குபற்றிய ஏனையவற்றுள் அடங்கும். மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியின்போது மொத்தம் யூ. எஸ். டொலர் 2,672,000 பெறுமதியான ஏற்றுமதி ஆணைகள் கிடைத்தன. ரூசியாவில் நடந்த '96 இலங்கை வாரத்தின் பயனாக ரூசியாவிற்கான ஏற்றுமதி 1995 உடன் ஒப்புநோக்காக 41% ஆல் அதிகரித்தது. தேயிலை ஏற்றுமதி 1995 மட்டத்தில் இருந்து 10% ஆல் அதிகரித்தது. பொதிகளிலும் உறைகளிலும், பெரும் பண்டமாகவும் தேயிலை, நறுஞ்சுவையூட்டப்பட்ட தேயிலை, மூலிகைத் தேயிலை, பைகளிலான வாசனைத் திரவியங்கள், சட்னி வகைகள், ஊறுவற்றல் வகைகள், சொக்லெட், இனிப்புவகைகள், கம்பளித் தலைச்சீராக்கல், பின்னற் கம்பளி உடற்சட்டைகள், தயாரித்த உடுபுடவைகள், பாதணிகள், மணிக்கற்கள், ஏற்றுமதிப் பாண்டங்களுள் அடங்கும்.

ரூசியச் சந்தையிலே தங்கள் உற்பத்திக்கு இருக்கும் கிராக்;கிகளைப் பற்றிய அறிவைப் பெறவும் அவற்றை எந்த வகையில் சீராக்கி எற்றுமதிக் கிராக்கியை உயர்த்தலாம் என அறிந்து கொள்ளவும் அனேகமாக பங்குபற்றிய அனைவருக்கும் இது உதவியது. நடந்த வர்த்தக இசைவிணக்கமுனைவுகளின் பயனாக புதிய முகவர்களை நியமிக்கவும், இலங்கையின் பலவகைப்பட்ட பாண்டங்களை ரூசியாவிற்கு இறக்குமதி செய்வதற்கான எற்பாடுகளைச் செய்யவும் உடன் விற்பனைக்கு வழி செய்யும் வகையில் வரி செலுத்தும் வரை ரூசியாவிலேயே களஞ்சியப் படுத்தக்கூடிய குதங்களைக் குத்தகைக்கு எடுக்கவும், தொடர்பு அதிகாரிகளை நியமிக்கவும், தற்போது ரூசியாவிலுள்ள இறக்குமதியாளர்கள் மூலமும் புதியவர்கள் மூலமும் ஏற்றுமதிகளை ஆரம்பிக்கவும் வியாபிக்கச் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றியதன் விளைவாக ஏலவே ரூசியாவில் நிறுவப்பட்ட கம்பனிகள் தமது பாண்ட வகைகளை நுகர்வோருக்கு ஜனப்பிரியப்படுத்தவும், சில்லறை வியாப்ாரங்களைப் பொறுப்பேற்கவும், குதங்களிலுள்ள தமது கழஞ்சியங்களை வேண்டியபோது சந்தைக்கு அனுப்பவும் கூடிய வசதிகளைத் தற்போதே அனுபவிக்கின்றன.

மேலும் இந்த இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகத்திற்கு அனுசரணையாக இருக்கம் வகையில் இலங்கை வங்கி (இவ) மொஸ்கோவிலே ஒரு பிரதிநிதித்துவ அலுவலகத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளைச் செய்கிறது.

**"இலங்கை வாரம் '97- பல்கிறேட் யூகோசிலேவியா"**

***1997 பெப்ரவரி 26 முதல் மார்ச் 2 வரை***

கிழக்கு ஐரோப்பாச் சந்தையிலே நுளையும் பிறிதொரு முயற்சியாக 1997 பெப்ரவரி 26 முதல் மார்ச் 2 வரை யூ கோசிலேவியாவின் பெல்கிறேட் நகரில் "இலங்கை வாரம்" ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி விசேடமாக கிழக்கு ஐரோப்பிய உல்லாசப் பிரயாணிகளுக்கு இலங்கையை பொதுவான சேரிடமாக்க ஊக்குவிக்கவும் இப் பிராந்தியக் கொள்வனவாளர்கள் இலங்கைப் பாண்டங்களைக் கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கவுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. இந்த வியாபாரக் கண்காட்சி விழா இலங்கை உணவுக் கண்காட்சி விழாவுடனும் கலாச்சாரப் பேரணிக்காட்சியுடனும் முற்றுப் பெற்றது.

இந்த நிகழ்ச்சியின் போது வருகை தந்தவர்களில் 214 வர்த்தகர்கள் பங்குபற்றியோருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். தேயிலை, டீசீ, தயாரித்த உடைகள், குடைகள், மட்பாண்டங்கள் என்பவற்றிற்கு யூகோசிலேவியாவிடமிருந்தும் அண்டை நாடுகளிலிருந்தும் இசைவிணக்கமுனைவுகளின் மூலம் கிடைத்த ஆணைகளின் மொத்தப் பெறுமதி யூ. எஸ். டொலர் 5,081,000 ஆகும். பெல்கிறேட்டை நுளைவாயிலாகப் பயன்படுத்தி பலவகைப்பட்ட இலங்கை உற்பத்திகளைக் கிழக்கு ஐரோப்பாப் பிரதேசத்திற் சந்தைப்படுத்தக்கூடிய பாரிய வாய்ப்பு இருப்பதை பங்குபற்றியவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை நபர்கள் உணர்ந்தனர்.

### 4.4 அவுஸ்திரேலியாவிற்கான உத்திபோகபூர்வ விஜயம்.

அவுஸ்திரேலிய அரசின் அழைப்பின் பேரில் கௌரவ உணவு, உள்நாட்டு, சர்வதேச வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி. ரி. விக்கிரமரட்ன 1997 ஜுன் 29 முதல் ஜுலை 4 வரை அவுஸ்திரேலியாவிற்கு உத்தியோக விஜயம் ஒன்றை மேற்கொண்டார். ஹெயிலீஸ் குரூப் ஒவ் கம்பனிகளின் தலைவர் திரு. சுனில் மென்டிஸ், எம். ஜே. எவ். எக்ஸ்போட் லிமி.இன் தலைவர் திரு. மெரில். ஜே. பேர்ணாந்து, ஸ்டாசன் குரூப் ஒவ் கம்பனிகளின் முகாமையாளர் திரு. டீ.எத். எஸ் ஜயவர்த்தன ஆகிய உயர்மட்ட தனியார் துறைப் பிரமுகர்களும் கௌரவ அமைச்சருடன் சென்றனர். இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்குமிடையே வர்த்தகத்தையும் முதலீட்டையும் அதிகரிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை கௌரவ அமைச்சர் கௌரவ பிரதிப் பிரதம மந்திரியும் வர்த்தக அமைச்சருமான டிம். பிஸருடன் நடத்தினார். அவர் மேற்கு அவுஸ்திரேலிய பிரதேச சபையின் கௌரவ அங்கத்தவர், பிரதி முதல் அமைச்சர், வர்த்தக, பிரதேச அபிவிருத்தி, சிறு வியாபார அமைச்சர் ஹான்டி கவனையும் அவர் சந்தித்தார். இந்தச் சந்திப் புக்களின்போது கௌரவ அமைச்சர் கேட்டுக் கொண்டபடி 1997 நவம்பரில் நடக்க இருக்கும் எக்ஸ்பொ 97 இல் பங்குபற்றத் தனியார்துறைப் பிரமுகர்கள் குழு ஒன்றை அனுப்ப இணங்கியதுடன் அவுஸ்திரேலியாவின் வர்த்தக அமைச்சர் எக்ஸ்போ 97 இற்கு நேரடியாகச் சமூகம் செய்து இரண்டாம் நாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கௌரவ அமைச்சர் தனது விஜயத்தின் போது சிட்னி, மெல்போன், பேர்த் நகரங்களில் பலர் சமூகமளித்த வர்த்தகர் கருத்தரங்குகளி லேல்லாம் "தெற்கு ஆசிய சுதந்திர வர்த்தக வலய அமைப்புடன் உதயமாகும் தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் உதயமாகும் வர்த்தக வாய்ப்பு" பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இந்த விஜயத்தின் ஏனைய முக்கியத்துவங்கள் வருமாறு.

அ) நியூ சவுத் வேல்சின் அரச வர்த்தக மன்றத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியைச் சந்தித்ததை அடுத்து எக்ஸ்போ 97 பற்றி நல்ல விளம்பரம் செய்வதுடன் பிரமுகர்கள் குழு ஒன்றையும் அனுப்ப இருக்கிறார்கள்.

ஆ) தேயிலை வியாபாரத்தில், இறக்குமதி, பொதிசெய்தல், சில்லறை, விற்பனை போன்ற பல தரப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுபவர்களைச் சந்தித்ததைத் தொடர்ந்து தேயிலைப் பாவனையை ஊக்குவித்தல் முக்கியமாக சிங்க இலச்சனை அடங்கலாக எமது தேயிலை ஏற்றுமதியாளர்களின் இலச்சனை அடங்கலாக எமது தேயிலை ஏற்றுமதியாளர்களின் இலச்சனை உரிமைகளைப் பேணுதல் போன்ற பணிகளில் ஈடுபட இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் ஒரு பிரதிநிதியை நியமிக்கும்படி இலங்கை தேயிலைச் சபைக்கு அறிவுரை வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) பசிபிக் டன்லப் குறூப், பசிபிக் பவர் இன்டர்நாஷனல், பீஎச்பீ, அவுஸ்திரேலிய கிறேற் நோதேர்ன் மைனிங், சினோயி மவுண்டின் என்ஜினியரிங் கூட்டுத்தாபனம், ஆர்சீஜீ லிம். என்பன போன்ற பல கம்பனிகளுடன் பயனுள்ள கருத்துரையாடல்கள் நடந்ததைத் தொடர்ந்து இலங்கையில் முதலீடுகள் செய்துள்ள கம்பனிகள் தமது நடவடிக்கைகளை அதிகரிக்கவும் ஏனையோர் முதலீட்டுப் புலங்களைப் பற்றி ஆராயவும் இணங்கியுள்ளனர்.

### 4.5 கடன் முகவர்கள்

கடன் முகவர்களை அங்கீகரிப்பது பற்றிய சட்டரீதியான அதிகாரங்கள் பற்றிய ஒரு விழிப்பு ணர்ச்சியை ஏற்படுத்தத் திணைக்களம் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இதன் விளைவாக வியாபார சமூகத்திலிருந்து அங்கீகாரம் வேண்டி விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இதன்படி 1996 முதல் இன்றுவரை ஆறு நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்ற கடன் வழங்கு நிறுவனங்களாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## 5. கடல் கடந்த வர்த்தகப் பிரதிநிதித்துவம்.

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களில் இலங்கையின் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக அரச தனியார் துறைகள் வர்த்தகம் சம்பந்தமான நிறுவனங்கள், அந்த நாட்டு வர்த்தகக்; கழகங்கள் என்பவற்றுடன் அயராத பின்னிப் பிணைந்த தொடர்புகளை ஏற்படுத்தும் பாரிய பங்கை வகிக்கத் திணைக்களத்தின் அலுவலர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வளர்ச்சிக்கு வெளிநாடுகளில் பணிபுரியும் வர்த்தக அலுவலர்களின் பங்களிப்பு கணிசமானதென்பது குறிப்பிடத்தக்கது.

வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் வெற்றிகாண வர்த்தக அலுவலர்களால் ஆரம்பிக்கப்பட்டு அமுல் செய்யப்படும் நடவடிக்கைகள் முக்கியமாகும். அதே சமயம் வர்த்தக அலுவலர்களின் சேவைகள் வர்த்தக ஊக்குவிப்பிற்கு மட்டும் கட்டுப்படாது வெளிநாட்டு முதலீடு, உல்லாசப் பிரயாணிகளைக் கவர்தல் போன்ற பணிகளிலும் மும்முரமாகச் செயற்படுகிறார்கள். டபிள்யூ. ரீ. ஓ. அங்றாட், எவ் ஏ ஓ போன்ற பலமுனைப்பான, பிராந்திய, இருமுனைப்பான நிறுவனங்களிலெல்லாம் இலங்கையின் நலன் பேணி விருத்தி செய்வதும் இந்த வர்த்தக அலுவலர் களின் பொறுப்பாகும்.

### 5.1 வர்த்தக ஊக்குவிப்பு

வர்த்தக அலுவலர்கள் பல ஆய்வுகளையும் படிப்புக்களையும் பொறுப்பேற்று அறிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களும் நிறுவனங்களுக்கும் வர்த்தகக் கழகங்களுக்கும் சமர்ப்பித்துள்ளார்கள். ஸ்டொக்ஹொம் இல் இருக்கும் இலங்கை ஸ்தானிகர் அலுவலகத்தில் கடமையாற்றும் ஆலுவலர் இலங்கையின் பொதி செய்யப்பட்ட தேயிலை, மிளகாய், மணிக்கற்கள், ஆபாணங்கள் பற்றி மூன்று வடதுருவ ஆய்வுகளை நடாத்தி விளக்கமான சந்தைச் சாத்திய அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார். யூஏஈ, இத்தாலி, கனடா, ஜப்பான் போன்ற நாடுகளில் பணியாற்றும் அலுவலர்களும் இந்த முயற்சிகளில் கணிசமான காணிக்கைகளைச் செய்துள்ளனர். கொள்வனவு செய்வோர் விற்பனை செய்வோரிடையே கூட்டங்களை ஒழுங்கு செய்தல், பணிசெய்யும் நாடுகளிலுள் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் நிறுவனங்களின் துணைகொண்டு உள்நோக்கிய, வெளிநோக்கிய வர்த்தகக் குழக்களுக்கு முக்கியமாக புதிதாக வருகைதரும் பிரமுகர்களை வர்த்தகத்துக்கு அறிமுகப்படுத்துவது சாதகமான விளைவுகளை எற்படுத்தியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.2 வியாபாரக் கண்காட்சி விழாவில் பங்குபற்றுதல்

வியாபாரக் கண்காட்சி விழாக்களில் பங்குபற்றுவது இலங்கையின் ஏற்றமதிகளை ஊக்குவிக்கப் பெரிதும் உதவுவதுடன் ஏற்றுமதியாளர் வெளிநாட்டுக் கொள்வனவாளர்களிடமும் நிரந்தர வர்த்தகத் தொடர்புகளை எற்படுத்தவும் உதவுகிறது. இது சம்பந்தமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தொடர்பு அமைச்சுக்களின் அனுசரணையுடன் வியாபாரக் கண்காட்சி விழாக் களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை உரியமுறையில் ஒழுங்கு செய்வதில் வர்த்தக அலுவலர்கள் முக்கிய பங்கை வகிக்கின்றனர். இலங்கை ஜேர்மனி, இத்தாலி, யூஎஈ, குவெயிற், எகிப்து, ஜப்பான் போன்ற நாடுகளில் 40 இற்கும் அதிகமான வர்த்தகக் கண்காட்சி விழாக்களை ஒழுங்கு செய்தது. மேலும் பல சர்வதேச பிராந்திய வர்த்தகக் கண்காட்சிகளில் நாம் பங்குபற்றியதைத் தொடர்ந்து அவற்றின் மூலம் சிறந்த பலன்களைப் எடுக்கவேண்டிய தொடர் நடவடிக்கைகளை வர்த்தக அலுவலர்கள் தொடர்கிறார்கள்.

### 5.3 ஐ.இ.இல். இலங்கை மத்திய நிலையம்.

1996 நவம்பரில் லண்டனில் நிறுவப்பட்ட இலங்கை மத்திய நிலையம் ஐ.இ. யின் சந்தைக்கு இலங்கை ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் ஒரு வாகனமாக மிகவும் பிரபலமடைந்து வருகிறது. தூதரகத்தின் வர்த்தகப் பிரிவு ஐ. இ இறக்குமதி யாளர்களிடமிருந்து ஏற்கனவே பல பரீட்சார்த்த ஆணைகளைப் பெற்றுள்ளது. பொம்மைகள், பீங்கான் பாண்டங்கள், பீங்கான் ஓடுகள், கைத்தறிப் புடவைகள், பதனிட்டு டப்பா செய்யப் பட்ட உணவு வகைகள் பரிசுப் பொருட்கள் போன்றவை இந்த மத்திய நிலையத்திலே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஏனைய தயாரிப்புக்களாகும். உணவு, உள்நாட்டு சர்வதேச வர்த்தகத்திற்கான கௌரவ அமைச்சரின் பணிப்பின் கீழ் தென்மாகாணத்திலுள்ள சிறிய மத்தியதர உற்பத்தியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டபாண்டங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஐ. இ கொள்வனவாளர்கள் சந்நதையில் இலங்கை உற்பத்திகளை நேரடியாகப் பார்வையிட்டு ஆணைகளை ஏற்படுத்தவோ அல்லது என்ன மாற்றங்கள் விரும்பப்படுகின்றன, விலைகளை எவ்வாறு சீராக்கலாம், என்றும் வேறு அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும் இந்த மத்திய நிலையம் சந்தர்ப்பம் வழங்குகிறது.

### 5.4 இலங்கை எக்ஸ்போ '97

எக்ஸ்போ '97 உண்மையான வெளிநாட்டுக் கொள்வனவாளர்களை ஈர்ப்பதிலேயே முழுமையாகத் தங்கி இருக்கிறது. எக்ஸ்போ '92 இலும் எக்ஸ்போ '94 இலும் வெளிநாட்டுப் பார்வையாளர்களை ஈர்ப்பதில் வர்த்தக அலுவலர்கள் ஆற்றிய பணிகளை மதிப்பிடுமிடத்து எக்ஸ்போ செயலகத்தினால் நியமிக்கப்பட்ட இலக்குகளை நிச்சயமாக இந்தவருடமும் இலங்கை ஈட்டும் என்பதில் நம்பிக்கை உண்டு. வெளிநாடுகளிலுள்ள எமது அலுவலர்களிடமிருந்து முன்னேற்றங்கள் பற்றிக் கிடைக்கும் அறிக்கைகளின்படி எக்ஸ்போ '97 ஐ ஊக்குவிக்க ஏற்கனவே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நேரடித் தபால்கள், அச்சுப் பிரசுரங்கள், பிரபல வர்த்தக மன்றங்களிலும், கழகங்களிலும் சொற்பொழிவுகள் என்ற வகையில் இந்த நடவடிக்கைகள் நடக்கின்றன.

## 6. உலக வியாபார அமைப்பு, பிராந்திய ஒத்துழைப்பு என்பன பற்றிய மக்களின் விழிப்புணர்ச்சித் திட்டம்.

உலக வர்த்தக ஒப்பந்தம் (டபிள்யு. ரீ. ஒ) சப்ற்றா எனப்படும் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றி பொதுமக்கள், வியாபார சமூகம், அறிஞர்களின் விழிப்புணர்வை ஏற்படத்தவும் இலங்கையின் பொருளாதாரத்தில் அவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கங்களைப்பற்றி விளக்கவும் வியாபார மன்றங்கள் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற வற்றால் ஒழுங்கு செய்த பல கலந்துரையாடல்களில் இத் திணைக் களம் உரைகள் நிகழ்த்த இணங்கியது. வாணிகத் திணைக்களத்தின் பணிப்பாளரும் அலுவலர்களும் கீழ்க்காணும் கூட்டங்களில் உரை நிகழ்த்தினர்.

1. இலங்கை வர்த்தக மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட உலக வர்த்தக நிறுவனங்களும் அவற்றின் பாதிப்புகளும் மீதான கருத்தரங்கு.

2. பிராந்தியக் கூட்டுறவும், இலங்கைப் பொருளாதாரத்தின் மீது அதன் பாதிப்புகளினதும் கீழ் அவ்டாவிற்கு சப்தா மீது கொள்கை கல்வி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சொற்பொழிவு.

3. பூகொளமயமாக்கல் பிராந்தியக் கூட்டுறவு மீது ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பகிரங்கச் சொற்பொழிவு.

4. சப்தாவும் குறிப்பாக இலங்கையில் விவசாய துறைக்குப் பாதிப்புகளும் மீது ப.ஞா.ச.க. மண்டபத்தில் விவசாய அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு.

மேற்கூறப்பட்டவற்றுடன் திணைக்களம் பின்வரும் கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தது.

1. அ.ஐ.இ வர்த்தகப் பிரதிநிதியின் சிரேட்ட கொள்கை ஆலோசகரான பேராசிரியர் கேசாவெகெற்றகுடிவோனினால் நடாத்தப்பட்ட பூகோளமயமாக்கல் மீது வாணிபத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு.

2. டச்சு அரசாங்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டு உவிநி உத்தியோகத்தர் களால் நடாத்தப்பட்ட சேவைகளிலுள்ள வியாபாரம் மீதான பொது உடன்படிக்கை மீது டபிள்யு ரி ஓ ஆசியஷ பிராந்திய கருத்தரங்கு.

3. உவிநி அறிவுரையாளரான திரு. கேரி ஈ வான்சினால் நடாத்தப் பட்ட உதவிப் பணங்களும் எதிர் செயலாற்றுகைகளும் பாதுகாப்பு நடவடிக்கைகளும், குவித்தல் எதிர்ப்பு மீதான உவிநி உடன்படிக்கைகள் மீதான கருத்தரங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறக்குமதிகள் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

**நோக்கங்கள்.**

*1985 இன் 48 ஆம் இலக்கச் சம்டத்தினாலும் 1987 இன் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்;தப்பட்டவாறான 1969 இன் 1 ஆம் இல இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை செயற்படுத்துவதே திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும். 1977 ஆம் ஆண்டில் அரசு அதன் திறந்த பொருளாதாரக் கொள்கையை அனுசரித்து இறக்குமதி எற்றுமதி வியாபாரத்தைத் தாராளமயமாக்கும் குறிப்பிடத்தக்க தீர்மானத்;தை எடுத்தது.*

**செயற்பாடுகள்.**

(1) இறக்குமதிகளுக்கும் ஏற்றுமதிகளுக்கும் அனுமதிப் பத்திரங்களை வழங்கல்.

(2) வரிகளையும் அனுமதிப் பத்திரக் கட்டணங்களையும் சேகரித்தல்.

தாராளமயமாக்கப்பட்ட இறக்குமதிகள் ஏற்றுமதிகள் மற்றும் தாராளமயமாக்கப்படாத இறக்குமதிகள் ஏற்றுமதிகள் என்பவற்றிள் ஆளுகையையும் கட்டுப்பாட்டையும் அரசின் கொள்கைகளுக்கு அமையச் சீராகச் செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளைக் காலத்திற்குக் காலம் திணைக்களம் ஒரு சீராக்கியது.

**இறக்குமதிகள்.**

1977.11.15 ஆந் திகதிய 291/7 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட "1977 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உத்தரவுச் சீட்டின்" அறிமுகத்துடன் இறக்குமதிகளின் தாராளமயமாக்கல் ஆரம்பித்தது. இதன் விளைவாக இத் திணைக்களத்திலிருந்து குறிப்பிட்ட இறக்குமதி உத்தரவுச் சீட்டுக்களைப் பெறும் தேவையிலிருந்து பல இனங்கள் நீக்கப்பட்டன. இன்னமும் உத்தரவுச் சீட்டுக்கள் அவசியம் தேவைப்பட்ட இனங்கள் மேலுள்ள வர்த்தமானியின் 1 ஆம் அட்டவணை 3 ஆம் நிரலில் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளதென்பது இதன் பொருள் எனிறும் தேவை எழுற்த போது காலத்திற்குக்காலம் சில நீக்கப்பட்டு, சில புகுத்தப்பட்டு இவ் அட்டவணை மீளாய்வு செய்யப்பட்டது. அத்தகைய ஒவ்வொரு நீக்கத்தின் போது அல்லது புகுத்தலின் போது வேறானதொரு வர்த்தமானி அறிவித்தலொன்று விசேட இறக்கமதி உத்தரவுச் சீட்டுக்கான திருத்தங்களாகப் பிரசுரிக்கப்பட்டது.

ஆய்வுக்கான காலத்தில் விசேட இறக்குமதி அனுமதிப் பத்திரங்களுக்குத் திருத்தங்களாக கீழ்க்காணும் வர்த்தமானி அறிவித்தல்கள் பிரசுரிக்கப் பட்டன.

| வர்த்தமானி அறிவித்தல் இல உம் திகதியும் | விடயம் | காரணங்கள் |
|---|---|---|
| 25.06.96 இன் அதிவிசேட வர்த்தமானி இல 929/8 | குளிரூட்டிகள், அதி குளிர் உறை பெட்டிகள், குளிர் பெட்டிகள். (பாவித்த/மீள-அமைக் கப்பட்ட) | ஓசோன் படையிலிருந்து பாதுகாப்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 26.07.96 இன் அதிவிசேட வர்த்தமானி இல 933/20 | உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சிவப்பு வெங்காயம், செத்தல் மிளகாய் | இந்த உணவு வகைகளின் விலைகளில் திடீர் விலை உயர்வுகளைத் தவிர்க்க தாராளமயமாக்கப்பட்டது. |
| 25.07.96 இன் அதிவிசேட வர்த்தமானி இல 933/10 | மின்சாரத்தால் இயக்கப்படும் பொம்மை கள் (தூரக் கட்டுப்பாடுள்ள | பாதுகாப்புக் காரணங்களுக்காக |
| 12.11.96 இன் அதிவிசேட வர்த்தமானி இல. 949/5 | உயிருள்ள மிருகங்களும், மிருகத் தயாரிப்புக்களும் | பீ. எஸ். ஈ. பதார்த்தம் படிந்துள்ள பண்டங்களின் இறக்குமதியைக் கட்டுப் படுத்தல் (விசர் மாட்டு நோய்க்கான காரணம்) |
| 13.11.96 இன் அதிவிசேட வர்த்தமானி இல 949/11 | "ஹலோஜினேட்டேட் டெரிவேற்றவ்ஸ் ஒவ் ஹைட்றோ காபன்ஸ்" | ஓசோன் படையைத் தூர்க்கும் பதார்த்தம். |

ஆய்வுக்கான காலத்தில் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்காதமைக்காக இறக்குமதியாளர்கள் தண்டிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பல. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாண்டங்களை நாயகம் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய அளவுகளிலான தண்டங்களை அறவிட வேண்டுமெனச் சிபார்சு இறக்குமதிகளுக்கு வேண்டிய இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களின் தேவை பற்றித் திணைக்களம் மிகவும் அவதானமாக இருப்பதால் முறையற்ற இறக்குமதிகளின் எண்ணிக்கைகளில் கணிசமான குறைவு தென்பட்டது.

1997.11.15 ஆந் திகதிய 291/77 ஆம் இலக்க இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி உத்தரவுச் சீட்டு ஒழுங்குவிதிகள் அதனால் தாராளமாக்கப்பட்ட சகல பொருட்களினதும் இறக்குமதி மீது நாணயக்; கடிதமொன்றைத் திறப்பதைக் கட்டாயமாக்கும் நிபந்தனையொன்றையும் கொண்டிருந்தது. இறக்குமதி ஏற்றுமதி வியாபாரத்திற்கு வசதியளிப்பதற்கும், உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களின் தகுதியை முன்னேற்றுவதற்கும், அது நீக்கப்பட வேண்டுமெனக் கோரி வர்த்தகக் கைத்தொழில் மன்றங்களினால் கடிதங்கள் எழுதப்பட்டதன் பேரிலும், மேலதிகச் செலவுகளையும் அவசியமற்ற தாமதங்களையும் தவிர்த்து தாராளமாக்கலின் முழு நன்மைகளையும் அவசியமற்ற தாமதங்களையும் தவிர்த்து தாராளமாக்கலின் முழு நன்மைகளையும் அடையும் நோக்குடனும் நிதி அமைச்சு பல்வேறு கூட்டங்களில் ஆழ்ந்து ஆராய்ந்த பின்னர் இக் கோரிக்கை செயற் படுத்தப்படலாமென சிபாரிசு செய்தது.

இந்தப் பேராண்மை உரிமையை வாபஸ் பெறுவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் எஸ். ஐ. எல் ஒழுங்கு விதியைத் திருத்தி ஆனால் உருவாக்கப்பட்ட வெறுமையைக் கண்காணிக்கவும் வெளிநாட்டில் இலங்கை வியாபாரத்தின் திறமையைப் பாதுகாப்பதற்கும் பெறுமதி மிக்க வெளிநாட்டு நாணயமாற்று தவறாகப் பாதுகாப்பதற்கும் பெறுமதி மிக்க வெளிநாட்டு நாணயமாற்று தவறாகப் பயன்படுவதைத் தவிர்ப்பதற்கும் பயன்தரத்தக்க, செயற்படத்தக்கூடிய மாற்றுத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தி 1996.03.21 ஆந் திகதிய 915/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பிரசுரித்து இத் தீர்மானத்தை இத் திணைக்களம் செயற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு "அ"

**1996 ஜனவரி முதல் டிச வரையிலும் 01.01.97 முதல் 31.07.97 வரையிலும் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் பெறுமதி.**

| | இனம் | 1996 வழங்கப் பட்ட அனுமதிப் பத்திர எண்ணிக்கை | 1997 பெறுமதி ரூபா | வழங்கப் பட்ட அனுமதிப் பத்திர எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | கிருமிநாசினிகள்/விவசாய இரசாயனங்கள் | 388 | 1222426100 | 319 | 781118015 |
| 2. | மருந்துச் சரக்கு | | | | |
| | (i) ஆயுர்வேத | 02 | 331475 | 08 | 2576047 |
| | (ii) மேற்கு நாட்டு | 297 | 3519867364 | 251 | 3568196904 |
| | (iii) மிருக மருத்துவ | 80 | 104418857 | 61 | 114555494 |
| | (iv) ஹோமியோபதி | 31 | 723503 | 14 | 359082 |
| | (v) சீன | – | – | 01 | 200000 |
| 3. | பெற்றோலியப் பொருட்கள் | 201 | 12159024248 | 117 | 6489167007 |
| 4. | செத்தல் மிளகாய் | 160 | 352768710 | – | – |
| 5. | பெரிய வெங்காயம் | 342 | 1002224583 | – | – |
| 6. | சோளம் | 21 | 1390178639 | 11 | 133813499 |
| 7. | இரசாயனங்கள் | 198 | 61882721 | 85 | 70647969 |
| 8. | ஆயுதங்கள் | 26 | 15701764 | 08 | 351578 |
| 9. | வெடிமருந்துகள்/ வாணவேடிக்கை சார்ந்த | 20 | 57531700 | 06 | 5230639 |
| 10. | வானொலி தொடர்பு உகரணம் | 34 | 940417487 | 152 | 1571001982 |
| 11. | கோதுமையும் கோதுமை மாவும் | 11 | 6659497108 | 09 | 4926482224 |
| 12. | சாராயம் | 17 | 5886117 | 11 | 8309466 |
| 13. | காசுகள் | 03 | 244502655 | 03 | 238603602 |
| 14. | உருளை மூடிகள் | – | – | 02 | 594625 |
| 15. | காப்புத் தோட்டாக்கள் | 05 | 437415 | 01 | 338565 |
| 16. | கடல் ஓடங்கள், உதிரிப்பாகங்கள் | 28 | 69592798 | 36 | 117396547 |
| 17. | கதிரியக்கப் பொருட்கள் | 12 | 3157146 | 08 | 3307440 |
| 18. | ஆகாய விமானங்கள் ஹெலிகொப்டர்கள்உதிரிப்பாகங்கள் | 154 | 1639609417 | 56 | 746002204 |
| 19. | உருளைக்கிழங்கு | 136 | 100656154 | – | – |
| 20. | விளையாட்டுப் பொருட்கள் | 01 | 229500 | 01 | 166250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காா்களின் இறக்கமதி.**

(i) 1500 சி. சி. க்கு மேற்படாததும் 3 வருடத்திற்கு மேற்படாததுமான காா்கள் 1993.05.27 ஆந் திகதி தொடக்கம் அனுமதிப் பத்திரமின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னா் இக் காா்களின் எஞ்ஜின் கொள்திறம் மீதான கட்டுப்பாடுகள் 1994.01.18 ஆந் திகதிய 802/7 ஆம் இலக்க வா்த்தமானியால் நீக்கப்பட்டன.

(ii) சம்பாதித்த அந்நிய செலவணி/வாக்குமூலத் திட்டத்திலும் நன்கொடைத் திட்டத்திலும் இறக்குமதி செய்யப்படும் காா்கள் 1994 வரவு செலவு உத்தேசத் திட்டங்கள் மீதும் மேலும் செய்யப்பட்ட தாராளமயமாக்கல் காரணமாகவும் வழக்கற்றுப் போனது. ஆனால் தமது இரத்த பந்தங்களுக்கு நன்கொடை அளிப்பதில் ஆா்வம் இருக்குமானால் இந் நன்கொடைத் திட்டம் இலங்கையா்களுக்குத் திறந்திருக்கும்.

(iii) (அ) 1991.05.08 ஆந் திகதிய 14/91 ஆம் இலக்கப் பொது நிா்வாகச் சுற்றறிக்கையிலும் திருத்தப்பட்டவாறான உப சுற்றறிக்கைகளிலும் நிரல்படுத்தப்பட்ட பாராளுமன்ற அங்கத்தவா்கள் மேதகு சனாதிபதியின் ஆலோசகா்கள் மாகாணசபை ஆளுநா்கள், மாநகரசபை முதல்வா்கள், பிரதி முதல்வா்கள், நகரசபைத் தலைவா், உப தலைவா் முதலியோா் மோட்டாா் காா்கள்/ ஜீப்கள்/இரட்டைப் பெட்டி வண்டிகள்/பிக்-அப் ஆகியவற்றை வரி அகற்றிய அடிப்படையில் ஆனால் பின்வரும் எஞ்ஜின் கொள்திற வரம்புக்குட்பட்டு புதிய அல்லது 03 வருட பாவனைக்கு மேற்படாத அத்தகைய வாகனத்தின் சி.ஐ.எவ் பெறுமதியின் இருபத்தைந்து சதவீத (25) கட்டணக் கொடுப்பனவின் பேரிலும் என்ஜின் கொள்திறங்கள் கீழ்க்கணும் வரம்புகளுக்கு உட்பட்டு இருக்கும் வகையிலும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளாா்கள்.

| | | | |
|---|---|---|---|
| பெற்றோல் மோட்டாா் வாகனங்கள் | - | 1500 | சி. சி |
| டீசல் மோட்டாா் வாகனம் | - | 3000 | சி. சி |

இவ் இறக்குமதி மீது பெறுமதி மீதான வரம்பெதுவும் சுமத்தப்படவில்லை. எனினும் அமைச்சரவை தீா்மானமொன்றின் மீது 1994.08.01 தொடக்கம் இத் திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இவ் இடைநிறுத்தமானது என்ஜின் கொள்திறம் மீது வரம்பொன்றின்றி 1995.01.30 ஆந் திகதி தொடக்கம் முற்றிலும் வரியற்ற அடிப்படையில் யு. எஸ்.டொ 26500 சி.ஐ.எவ் அல்லது வேறெந்த நாணயத்திலும் அதற்குச் சமமான தொகையை மீறாத பெறுமதியில் பஜரோ இன்டா் கூலா் மேசிடஸ் பென்ஸ், பி.எம்.டபிள்யு போன்ற சொகுசு வாகனங்கள் தவிா்ந்த எந்த மோட்டாா் வாகனத்தையும் இறக்குமதி செய்வதற்குப் பாராளுமன்ற அங்கத்தவா்களுக்கு வசதியளிக்கும் வகையில் இவ் இடைநிறுத்தம் ஓரளவு நீக்கப்பட்டது.

(இ) பின்வரும் என்ஜின் கொள்திற வரம்பிற்குட்பட்டு 1995.07.09 ஆந் திகதி தொடக்கம் முற்றிலும் வரியற்ற அடிப்படையில் யு.எஸ்.டொ 26500 சி.ஐ.எவ் அல்லது வேறெந்த நாணயத்திலும் அதற்குச் சமமான தொகையை மீறாத பெறுமதியில் பஜறோ-இன்டா் கூலா், மேசிடெஸ் பென்ஸ், பி.எம். டபிள்யு. போன்ற சொகுசு வாகனங்கள் தவிா்ந்த எந்த மோட்டாா் வாகனத்தையும் இறக்கமதி செய்வதற்கு மாகாணசபை அங்கத்தவா்கள் மீதான இடைநிறுத்தமும் நீக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோல் மோட்டார் வாகனங்கள் – 2000 சி. சி

டீசல் மோட்டார் வாகனங்கள் – 2300 சி. சி

(ஈ) 1991.05.08 ஆந் திகதிய 14/91 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையகூழிலும் 1993.10.01 ஆந் திகதிய 24/93 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்டவாறான உப-சுற்றறிக்கைகளிலும் வரிசைப்படுத்திக் கூறப்பட்ட மத்திய அரசாங்கம், உள்நாட்டு அமைப்புக்கள், நியதிச் சட்ட அமைப்புக்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் முதலியற்றிலுள்ள உத்தியோகத்தர்கள் உட்பட நீதிபதிகள், நீதித்துறை உத்தியோகத்தர்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் புதிய அல்லது 03 வருட பாவனைக்கு மேற்படாத மோட்டார் கார்/ஜீப்/இரட்டைப் பெட்டி வண்டிகள்/பிக்-அப் ஆகியவற்றை வரி அகற்றப்பட்ட அடிப்படையில், பின்வரும் என்ஜின் கொள்திற வரம்புக்குட்பட்டு அத்தகைய வாகனத்தின் சி.ஐ.எவ் பெறுமதியின் இருபத்தைந்து சதவீத (25%) இறக்குமதி அனுமதிப்பத்திரக் கட்டணக் கொடுப்பனவின் பேரில் இறககுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

பெற்றோல் கார் – 1500 சிசி-யு.எஸ்.டொ 8000

டீசல் கார் – 2000 சிசி-யு.எஸ்.டொ 10000

1994.08.01 தொடக்கம் இத் திட்டமும் அதே அமைச்சரவைத் தீர்மானத்தால் இடைநிறுத்;தப்பட்டதுடன இன்னமும் அவ்வாறே உள்ளது. எனினும் 01.08.94 இற்கு முன்னதாகவே அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் இத் திட்டத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

(iv) 1996 முதல் 31.07.97 வரையும் வரிச்சலுதை அடிப்படையில் செய்யப்பட்ட மோட்டார் கார் இறக்குமதிகளின் எண்ணிக்கையும் பெறுமதியும் பின்வருமாறு.

| ஆண்டு | அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
|---|---|---|
| 1996 | 115 | 214,008,975 |
| 1997 (ஜுலை 31வரை) | 91 | 130,447,398 |

(v) சம்பாதித்த அந்நிய செலாவணி/உறுதித் திட்டத்தின் 1996 இலும் 1997 ஜுலை வரையிலும் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையும் பெறுமதியும் பின்வருமாறு

| ஆண்டு | அனுமதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
|---|---|---|
| 1996 | 91 | 28,578,510 |
| 1997 (ஜுலை 31வரை) | 59 | 15,410,203 |

(vi) தனியார் பகுதியினரால் பாவிப்பிற்கு என நேரடி இறக்குமதிக்கென 1996 இலும் 1997 இன் முதல் 07 மாசத்திலும் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
|---|---|---|
| 1996 | 110 | 93,401,675 |
| 1997 (ஜுலை 31வரை) | 101 | 173,305,425 |

**வர்த்தக வாகனங்களின் இறக்குமதி**

5 வருடங்களுக்கு மேல் பழமையான வாகனங்களின் இறக்கமதி கட்டுப்பத்தப் பட்டுள்ளன. 20 வருடங்களுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட விவசாய திறாக்கடர்கள் 1996 இறுதிவரை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டன.

ஆய்வுக்கு உரிய காலத்தில் 10 வருடங்களுக்குக் குறைந்த பழமை வாய்ந்த 30 ஆசனங்களைக் கொண்ட 634 பஸ்வண்டிகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் 462 பஸ்வண்டிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

**கூட்டு அனுமதிப் பத்திரங்கள்.**

"விசேட இறக்குமதி அனுமதிப் பத்திரத்தின்" கீழ் இறக்குமதி செய்ய முடியாத கட்டுப்படுத்தப்பட்ட உருப்படிகள் தொடர்பாக வழக்கமான இறக்குமதியாளர்களுக்குக் கூட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1996 இலும் 1997 இன் முதல் ஏழு மாதத்திலும் வழங்கப்பட்ட இத்தகைய அனுமதிப் பத்திரங்கள் பற்றிய கூற்று "அ" இணைப்பில் தரப்பட்டுள்ளன.

**தரக் கட்டுப்பாடு.**

இறக்கமதி செய்யப்படும் பாண்டங்களின் தரங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, 1969 இன் 01 ஆம் இல. இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் அப்பாண்டங்களுக்கான இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தின் தரக் குறிப்பீடுகள் இருக்கும் பட்சத்தில் செயற்படுத்தப் பட்டன.

**ஏற்றுமதிகள்.**

27.04.79 இன் 33/24 ஆம் இல. அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஏற்றுமதி ஒழுங்கு விதிகள் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டுள்ளன. இறக்குமதிகள் போன்று ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையிற் கூட படிப்படியாக இறக்குமதி எற்றுமதி ஆணையாளரிடமிருந்து அனுமதிப் பத்திரங்கள் பெறாமலேயே ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் தாராளமயமாக்கப்பட்டுள்ளது.

(அ) தற்சமயம் பின்வரும் 4 பொருட்கள் மாத்திரம் ஏற்றுமதி செய்வதற்கு இத் திணைக்களத்தால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் தேவைப்படுகின்றன.

1. பவளச் சுண்ணமும் சங்குகளும் பி.ரி.என்.இல 05.12
2. மரம் அதாவது மரமும் மரத்தாலான பொருட்களும் (பி.ரி.என் அதிகாரம் 44ன் கீழ் வகைப்படுத்தப்பட்ட மரக்குத்திகளும் அரியப்பட்ட பலகைகள் அடங்கலாகத் தேங்காய்ச் சிரட்டைக் கரி நீங்கலாக பி.ரி.என் (இல.44.02) மரத்தினாலான வீட்டுப் பாவனை உபகரணங்கள் (பி.ரி.என் இல 44.24) மரத்தினால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் (பி.ரி.என் 44.27)
3. தந்தமும் தந்தப் பொருட்களும் (பி.ரி.என் 05.10,38.02, 95.01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்கையில் முதலில் 01.01.1945 யிற்கு முன் பதியப்பட்ட பிரயாணிகள் மோட்டார் வாகனங்கள் (பி.ரி.என் இல 87.02)

(ஆ) பி. தி. செயினால் வழங்கப்பட்ட பணிப்புரை மீது வர்த்தக ரீதியற்ற பொருட்களுக்கான ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்கள் நீக்கப்பட்டுள்ளன.

(இ) முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட இரத்தினக் கற்கள், ஆபரண வகை ஏற்றுமதியாளர்கள், விற்பனையாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டம் இன்னமும் நடைமுறையிலுள்ளது.

(ஈ) பெறுமதி அதிகரிக்கப்பட்ட களஞ்சிய வர்த்தகம் இன்னமும் தாராள நடைமுறையிலுள்ளது.

(உ) 1996 இற்கும் 1997 இன் முதல் 7 மாதங்களுக்குமான ஏற்றுமதிப் புள்ளி விபரங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | | அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| 1996 | வர்த்தகப் பொருட்கள் | 122 | 75,691,398 |
| | வர்த்தகரீதியற்ற பொருட்கள் | 705 | 165,614,729 |
| 1997 | வர்த்தகப் பொருட்கள் | 83 | 59,886,343 |
| | வர்த்தக ரீதியற்ற பொருட்கள் (ஜுலை 31 வரை) | 358 | 13,743,835 |

1996 இற்கும் 1997 இன் முதல் 7 மதாங்களுக்குமான நிதிச் செயற்பாட்டு கூற்று பின்வருமாறு.

| ஆண்டு | செலவு: மீண்டுவரும் ரூபா | மூலதனம் ரூபா |
|---|---|---|
| 1996 | 7,120,645 | 1,414,800 |
| 1997 (ஜுலை 31 வரை) | 4,678,573 | 117,150 |
| | வருமானம் | |
| 1996 | 31,595,129 | |
| 1997 (ஜுலை 31 வரை) | 10,022,830 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டு வியாபாரத் திணைக்களம்

**நோக்கங்களும் கடமைகளும்.**

நாட்டில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் நியாய வியாபார முறைகளை முன்னேற்றுவதனால் நுகர்வோருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குமென 1979 ஆம் 1 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் ஆக்கப்பட்டது. இச் சட்டவாக்கத்தின் விளைவாக, இச் சட்டத்தை நிருவகிப்பதற்கு 1979 யில் உள்நாட்டு வியாபாரத் திணைக்களம் நிறுவப்பட்டு விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தையும் நாட்டிலுள்ள நுகர்வோருக்குப் பயன் தருகின்ற பிற சட்டவாக்கத்தையும் நிருவகிப்பதற்கு திணைக்களத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அத்துடன், சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு உள்நாட்டு வியாபார ஆணையாளராக பதவிமுறைப்பட்ட விலைக் கட்டுப்பாட்டாளரிருந்தார். வேளாண்மை சமூகத்தினருக்கு நிவாரணம் கொடுக்கும் பொருட்டும் சந்தையில் கிடைக்கும் உரம் கலப்பற்றதும் வாய்பாடு வகைப்படுத்தலின் கீழ் கொடுக்கப்பட்ட தரங்கள் குறிப்புகளுக்கமைய உள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கும் உரவகைச் சட்டத்தைச் செயற்படுத்துவதில் விவசாய அமைச்சிற்கு இத் திணைக்களம் உதவுகின்றது.

வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் பயன்படுத்தப்பட்ட நிறுத்தல் அளத்தல் உபகரணத்தின் வருடாந்தச் சரிபார்த்தலும் பொறிமுத்திரையிடுதலும் நோடிப் பாவிப்பு உபகரணத்தின் ஆரம்ப அளவுத் தரங்களையும் மதிப்பாராய்தலையும் பேணுதலும், அவற்றையொத்த சேவைகளும் இத் திணைக்களத்தால் 1972 தொடக்கம் மேற்கொள்ளப்பட்டன. நாட்டின் அளவீட்டு மரபின் நிறுவுகைக்கென புதிய அளவீட்டு நியமங்கள், சேவைகள் மசோதா 1995 அக்டோபரில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து திணைக்களத்தின் அளவுகள், நியமங்கள் சேவைகள் பகுதி 1997 ஜனவரி 1 ஆந் திகதி தொடக்கம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் திணைக்களமாக மாற்றப்பட்டது.

இத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிள கடமைகள் பின்வருமாறு.

1. திடீர் சோதனைகள், அரசியல் குற்றச்சாட்டுக்கள் மூலம் பாவனையாளரைப் பாதுகாப்பதற்கு சட்டத்தின் தண்டனைக்குரிய பகுதிகளைச் செயற்படுத்துதல்.

2. நுகர்வோர் பொருட்கள், சேவைகளின் தன்மை, பாதுகாப்பிற்கான தரங்களின் தீர்மானமும் பேணுகையும்.

3. போட்டிரீதியான விலைகளில் கூடுதலான தெரிவுகளை நுகர்வோருக்கு அளிக்கும் சந்தை நிபந்தனைகளின் அபிவிருத்தியை ஊக்குதல்.

4. நுகர்வோர் ஈடுசெய்தலைப் பெறக்கூடிய வகையிலான முறைகளை அளித்தல்.

5. நாட்டில் சுதந்திரமான நுகர்வோர் குழுக்களின் அபிவிருத்திக்கு வசதியளித்தல்.

6. பொது நுகர்வோர் கல்வி, அறிவு நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல்.

7. பாவனையாளர் பாதுகாப்புத் துறையில் சர்வதேச ஒத்துழைப்பை விருத்தி செய்தல் (உப பிராந்தியம், பிராந்திய, சர்வதேச மட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சட்ட செயற்பாடு.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம், உரச் சட்டத்தின் தண்டனைக்குரிய பகுதிகளின் செயற்பாட்டின் பொருட்டு ஏறக்குறைய மொத்தம் 1225 திடீர் சோதனைகள் 1997 ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையிலான காலத்தின் போது நடாத்தப்பட்டன. இக் காலத்தின் போது நடாத்தப்பட்ட மொத்த திடீர் சோதனைகள் முன்னைய ஆண்டில் இதே காலத்தின் போதானதுடன் ஒப்பிடுமிடத்து சிறிது குறைவினைக் காட்டின. இதற்கு ஆய்வாண்டின் போது ஒரு மாத காலத்திற்கு கடந்த உள்நாட்டு அரசாங்க தேர்தல்களில் திணைக்கள உத்தியோகத்தர்களையும் வாகனங்களையும் பயன்படுத்தியமையே காரணமாகும். குற்றச் சாட்டுகளும் அபராதங்களும் குறைந்தமைக்கான காரணங்களும் மேலுள்ள காரணங்களின் விளைவானதாகும். இவ் அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் அதிக விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நிறைகள் அளவைகள் கட்டளைச் சட்டத்தின் கீழான கடமைகளும் அது தொடர்பான முன்னேற்றங்களும் இவ் அட்டவணைகளில் சதவீத பெறுமதிகளிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1 திடீர் சோதனைகள் - 1997**
**(1997 ஆகஸ்ட் இறுதியின் போது)**
**முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டது.**


| | 1996 | 1996 ஆகஸ்ட் வரை | 1997 ஆகஸ்ட் வரை | முன்னேற்ற % 4/3 |
|---|---|---|---|---|
| சட்டம் | | | | |
| திடீர் சோதனைகள் | | | | |
| விலைக் கட்டுப்பாடு | 111 | 67 | 110 | 64.2 |
| நுகர்வோர் பாதுகாப்பு | 2071 | 1363 | 1120 | -17.8 |
| நிறைகள், அளவைகள் | 303 | 286 | - | - |
| உரம் | 20 | 07 | 25 | 257.1 |
| மொத்தம் | 2505 | 1723 | 1255 | -15.5 |

**அட்டவணை 2 -. வெற்றிகரமான திடீர் சோதனைகள்**
**1997 (1997 ஆகஸ்ட் இறுதி வரை)**
**(முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டது)**

| | 1996 | 1996 ஆகஸ்ட் வரை | 1997 ஆகஸ்ட் வரை | முன்னேற்ற % 4/3 |
|---|---|---|---|---|
| சட்டம் | | | | |
| வெற்றிகரமான திடீர் சோதனைகள் | | | | |
| விலைக் கட்டுப்பாடு | 75 | 43 | 75 | 74.4 |
| நுகர்வோர் பாதுகாப்பு | 1620 | 1010 | 990 | -20 |
| நிறைகள் அளவுகள் | 79 | 73 | - | - |
| உரம் | 16 | 05 | 15 | 200.00 |
| மொத்தம் | 1790 | 1131 | 1080 | 27 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டு வியாபாரத் திணைக்களம் திடீர் சோதனைகள்




| ஆண்டு | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|
| வி. கா. ச | 163 | 84 | 111 | 160 |
| நு. பா.க | 2240 | 2067 | 2071 | 2000 |
| நி. அ. ச | 158 | 367 | 303 | 0 |
| உ. ச | 0 | 0 | 20 | 40 |
| மொத்தம் | 2561 | 2518 | 2505 | 2200 |

மதிப்பீட்டின்படி

**அட்டவணை 3 - குற்றத்தீர்ப்புகள் - 1997 (1997 ஆகஸ்ட் இறுதிவரை)**
**(முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டது)**


| | 1996 | 1996 ஆகஸ்ட்வரை | 1997 ஆகஸ்ட்வரை | முன்னேற்ற % 4/3 |
|---|---|---|---|---|
| குற்றத்தீர்ப்புகள் | | | | |
| விலைக்கட்டுப்பாடு | 34 | 22 | 40 | 81.8 |
| நுகர்வோர் பாதுகாப்பு | 1313 | 858 | 700 | -18.4 |
| நிறைகள் அளவைகள் | 57 | 57 | – | – |
| உரம் | 12 | 05 | 08 | 60.0 |
| மொத்தம் | 1416 | 942 | 748 | 15.5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அட்டவணை 4 - அபராதங்கள் 1997 (1997 ஆகஸ்ட் வரை)*
*(முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டது)*

| | 1996 | 1996<br>ஆகஸ்ட் வரை | 1997<br>ஆகஸ்ட் வகர | முன்னேற்றம் %<br>4/3 |
|---|---|---|---|---|
| அபராதங்கள் | | | | |
| விலைக்கட்டுப்பாடு | 70,000 | 26,000 | 61,200 | 135,3 |
| நுகர்வோர் பாதுகாப்பு | 1,934,350 | 1,264,500 | 419,600 | -27,2 |
| நிறைகள் அளவைகள் | 32,200 | 31,700 | - | - |
| உரம் | 39,500 | 17,500 | 20,650 | 18.0 |
| மொத்தம் | 2,076,050 | 1,311,170 | 1,001,450 | -21.7 |

**உள்நாட்டு வியாபரத் திணைக்களம் குற்றத் தீர்ப்புக்கள்**





| ஆண்டு | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|
| வி. க.ச | 67 | 20 | 84 | 60 |
| நு. பா.ச | 1258 | 1098 | 1313 | 1500 |
| உ. ச | 56 | 110 | 57 | 0 |
| நி.அ | 0 | 0 | 12 | 20 |
| மொததம் | 1381 | 1229 | 1416 | 1580 |

மதிப்பீட்டின்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்நாட்டு வியாபாரத திணைக்களம்**
**அபராதங்கள்**




| ஆண்டு | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|
| அபராகங்கள் | 1,646,950 | 1,768,350 | 2,076,050 | 2,000,000 |

1997 மதிப்பீடுகளின்படி

**நுகப்வோர் பண்டங்களின் பாதுகாப்பும் துன்மையும்.**

1974 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் 6(1) சியிற்கேற்ப, உற்பத்தி, சந்தைப்படுத்தல் அல்லது விற்பனை தொடர்பாகச் சமூக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான எத்தகைய பொருளினதும் விலைக் குறிப்பீடு, பெயர் குறிப்புச் சீட்டு ஓட்டல், பொதி செய்தல், நிபந்தனைகள் தொடர்பாக உற்பத்தியாளர்கள் அல்லது வியாபாரிகளுக்கு பொது அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு உள்நாட்டு வியாபார ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

இதன்படி நுகர்வோருக்குப் பயனளிக்ககூடிய பல எண்ணிக்கையான பொது அறிவுறுத்தல்களை உள்நாட்டு வியாபர ஆணையாளர் வழங்கினார். குறைந்த தரம், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்கு சட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை காலமும் மொத்தம் 101 பொது அறிவுறுத்தல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

1997 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் போது, சிகரெட், பால் மா தொடர்பாகப் பின்வருமாறு பெயர் குறிப்புச் சீட்டு ஒட்டுதல், விநியோகம் தொடர்பான கடப்பாட்டுத் தேவைகளைக் குறிப்பிட்டு இரண்டு பொது அறிவுறுத்தல்கள் 1997 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் போது வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| அறிவுறுத்தல் எண் 100 | – | சிகரெட் தொடர்பான உடல்நல எச்சரிக்கை தெளிவாகத் தெரியக்கூடியதாக மும்மொழிகளிலும் இருத்தல். |
| அறிவுறுத்தல் எண் 101 | – | பால் மா பொதியில் உற்பத்தி திகதி, பொதி செய்தல் திகதி, முடிவுத் திகதி 1997 செப்டெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் குறிப்பிடப்படுதல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கைத் தரங்கள்.

இலங்கைத் தரங்கள், குறிப்பீடுகளுக்கு இணங்க அமையாத எத்தகைய பொருளினதும் உற்பத்தி அல்லது விற்பனையைத் தடுப்பதற்கு உரிய இலங்கைத் தரங்களைத் தீர்மானிப்பதற்கு நுகர் பாதுகாப்புச் சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவு உள்நாட்டு வியாபார ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கின்றது. இது தொடர்பாக குறிப்பிடப்பட்ட பின்வரும்வகைப் பொருட்கள் உரிய தரக் குறிப்பீடுகளுக்கு இணங்க உள்ளன. இம் முறையைக் கண்காணிப்பதற்கு இதுவரை காலமும் 25 பொது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

* உணவும் பானங்களும்
* கட்டிடப் பொருட்கள்
* மின்சார உபகரணம்
* சவர்க்காரம், பற்பசை, ஊட்டும் போத்தல்கள், பயிற்திக் கொப்பிகள், பைசிக்கிள்கள்.

### சந்தை நிலைமையின் அபிவிருத்தி

நுகர்வோர் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கத்துடன், திறந்த சந்தை முறைக்கு அவசியமானதாகக் கருதப்பட்ட தொடர்ச்சியான மேற்பார்வைகள், பரிசோதனைகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை திணைக்களம் அதன் வெளிக்கள உத்தியோகத்தர் மூலம் எடுத்துள்ளது. ஆகவே, தீவெங்கிலுமுள்ள சந்தைகளின் பண்டங்களின் விலை அமைப்பு, விநியோக முறை, வழங்கீடு பற்றி ஆராய்வதற்கு பல மேற்பார்வைகள் நடாத்தப்பட்டன. அத்துடன் யாழ்ப்பாண குடாநாட்டில் அத்ததியாவசிய பணடங்களின் வழங்கீடு, விநியோகம், விடிலைகள் மீதான மாதாந்த ஆராய்வு நடைமுறையிலுள்ளது. இம் மேற்பார்வையின் கண்டுபிடிப்புகள் அவசிய நடவடிக்கைக்காக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆய்வாண்டின் போதான இத்தகைய் நடவடிக்கைகள் தொடர்பான தரவை பின்வரும் அட்டவணை தரகின்றது.

**அட்டவணை 5 - விலைகள், விநியோகத்தின் பகுப்பாய்வு**

| விவரணம் | 1996 | 1996/ஆகஸ்ட் | 97/ஆகஸ்ட் | 4/3 முன்னேற்ற% |
|---|---|---|---|---|
| மேற்பார்வைகள் | 926 | 814 | 502 | –14.2 |
| விற்பனைகள் மீது செவ்வை பார்த்தல் | 39,756 | 26,952 | 23,102 | –14.2 |
| கூட்டுறவு | 1,870 | 1,261 | 1,643 | +30.3 |
| கூ. மொ. வி. நி | 463 | 287 | 303 | +5.6 |
| பேக்கரிகள் | 1,945 | 1,271 | 1,227 | –3.4 |

(*தனிப்பட்ட மேற்பார்வைகள் - வாரகந்த சந்தைகளும் பண்டிகைப் பருவங்களும்)

### உடன்படிக்கைகள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு - 1 (அ) குறிப்பிட்ட காலத்திற்குப் பொருட்கள் மீது ஆகக்கூடின விலைகளுக்கான ஏற்பாடளிப்பதற்கு உடன்படிக்கைகள் செய்வதற்கான அதிகாரங்களை ஆணையாளருக்கு அளிக்கின்றது. ஏற்பாடுகளின் பிரகாரம், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனையை ஒழுங்கு படுத்துவதற்குத் தீவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய உடன்படிக்கைகளை தூண்டிவிடுவதற்கான நடவடிக்கையை ஆணையாளர் எடுத்துள்ளார். 1993 தொடக்கம் இந் நடைமுறை செயற்படுத்தப்படவில்லை. ஆகவே, விசேட வலியுறுத்தல் செய்யப்பட்டுள்ளதுடன் சகல பிரதேச பிரதி ஆணையாளர்கள்/ பிரதேச செயலாளர்களும் விந்யோகத்தர்களுடன் கூட்டங்களை கூட்டியதுடன் காலக் கிரமத்தில் உடன்படிக்கைகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. இத்தகைய உடன்படிக்கைகள் பொது மக்கள் அறியும் பொருட்டு அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்படும்.

### நுகர்வோர் மாற்றீடுகள்.

குறைந்த தரப் பொருட்களின் விற்பனை, விற்பனைக்குப் பிந்திய சேவைகள் கிடையாமை முதலியன போன்ற பிணைகளுடன் சம்பந்தப்பட்ட பிற காரணங்களினால் எழுந்த பல்வேறு பிணக்குகள் பற்றி துன்பத்துக்குள்ளான நுகர்வோர்களால் மாற்றீடு கோரப்பட்டு இத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டன. இணக்கப் பேச்சுவார்த்தைகள் இணக்கங்கள் மூலம் அவர்கள் இத் திணைக்களத்தின் உதவியைக் கோரினார்கள். 'ஒப்பேசர்' ஒப்பட்ஸ்மன் நிரலும் வாசகர்களால் அத்தகைய விடயங்கள் மீது மாற்றீடு கோரி செய்யப்பட்ட முறையீடுகளை இத் திணைக்களத்திற்கு அறிவித்தது.

இணக்கப் பேச்சுவார்த்தைகளின் முன்னர், சம்பந்தப்பட்ட கட்சியினரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்து ஆவணங்களை ஆராய்ந்து திணைக்களத்தினால் ஒவ்வொரு முறைப்பாடு மீதும் ஆரம்ப விசாரணையொன்று நடாத்தப்பட்டது. இம்முறை வழக்காடுவதைத் தவிர்த்ததாலும் செலவை ஈடுபடுத்தாதலாலும் நுகர்வோருக்கு அதிகளவு நன்மையைக் கொண்டு வந்தது. அட்டவணை 6 யில் புள்ளிலிபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6 - நுகர்வோர் மாற்றீட்டுத் தொழில்கள்

| | 1996 | 1997/ஆகஸ்ட் |
|---|---|---|
| கிடைத்த முறைப்பாடுகள் | 1,182 | 415 |
| தீர்க்கப்பட்டவை | 300 | 240 |
| தீர்க்கப்படவுள்ளவை | 882 | 175 |

இந் நிகழ்ச்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களும் இத் திணைக்களத்தால் கையாளப்பட்ட விடயங்களும் தொடர்புபடுத்தப்பட வேண்டியவற்றிற்கான அறிவுறுத்தலுடன் நுகர்வோர் அறியும் பொருட்டு பிரசுரிக்கப்படுகின்றது.

### சுதந்திரமான நுகர்வோர் குழுக்களின் அபிவிருத்திக்கு வசதியளித்தல்.

போதியளவு நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நுகர்வோர் இயக்கங்களின் தடையற்ற இயக்கங்களின் முக்கியத்துவத்தை நுகாவோர் பாதுகாப்பிற்கான ஐ. நா வழிகாட்டுதல் வற்புறுத்துகின்றது. கிராம சேவகர் அடிப்படையில் அடி மட்டத்தில் ஆரம்ப நுகர்வோர் குழுக்களை திணைக்களம் ஏற்பாடு செய்தது. 1996 யின் போது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட நுகர்வோர் சங்கங்களின் எண்ணிக்கை 186. இவ்வாண்டின் போது அநுராதபுர மாவட்டத்தில் இன்னுமொரு 29 சங்கங்கள் நிறுவப்பட்டதுடன் தற்போது செயற்படும் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 218. இந் நுகர்வோர் சங்கங்கள் அத்தியாவசிய பண்டங்களின் உடன்படிக்கைகள் விநியோகத்தின் கீழ் விலைகளைத் குறிப்பிடுவது தொடர்பான தன் விருப்ப உடன்படிக்கைகளை நோக்கமாகக் கொள்வதற்கு திணைக்களத்துடனும் பிற வர்த்தக நிறுவனங்களுடனும் கூட்டாகச் செயற்பட்டது. அத்துடன் நுகர்வோர் குழுக்கள் உதவின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996 நவெம்பரில் நிறுவப்பட்ட இலங்கை நுகர்வோர் சங்க கூட்டணி (எவ்ஒசியுஎஸ்) நாட்டில் நுகர்வோர் தொழிலை முன்னேற்றுவதற்கு இத் திணைக்களத்துடன் வட்டிணைந்த ஒரு குடை நிறுவனமாகும். நாட்டில் நுகர்வோர் முயற்சிகளை முன்னேற்றுவதற்கான செயற்கைத் திட்டமொன்றை எவ்ஒசியுஎஸ் கொண்டுள்ளது.

(1) அதன் பணியைச் ஸ்திரப்படுத்தல்.

(2) கல்விரீதியான அறிவு நிகழ்ச்சிகள்.

(3) பிரசுரங்கள்.

(4) மாவட்ட அலகுகள் பலப்படுத்தல்.

(5) நிதி ஏற்பாடுகள். நாட்டில் நுகர்வோர் நலத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு நிதி உதவியை அளிப்பதன் மூலம் இந் நிறுவனத்தின் தொடக்கத்திற்கு திணைக்களம் உதவியது. (நுகர்வோர் முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நுகர்வோர் குழுக்களுக்கு நிதி உதவியை நுகர்வோர் பாதுகாப்பு நிதி மூலம் அளிப்பதற்கு 1980 யின் 37 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 33 (அ) (3) (அ) ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கின்றதென்பதைக் தயவுசெய்து கவனிக்கவும்)

## நுகர்வோர் கல்வி.

நுகர்வோருக்கும் வியாபாரத்திற்கும் இடையிலான வேறுபாடு காரணமாக நிலவுகின்ற சந்தைச் சவால்களிலிருந்து நுகர்வேரைப் பாதுகாப்பதற்கு நாட்டில் பொது நுகர்வோர் நிறுவனம் மீது அறிவை உண்டுபண்ணுவதே திணைக்களத்தின் மிக முக்கிய நோக்கங் களிலொன்று.

பொது ஒப்பீட்டு நுகர்வோர் கல்வியை உருவாக்கம் முயற்சியாக, கல்வியின் அடிப்படைப் பாடத் தொகுதியின் முழுமையாக்கும் பகுதியாக நுகர்வோர் கல்வியை இருக்கச் செய்வதில் கல்வி அதிகாரிகளுக்கு விளக்குவதில் திணைக்களம் வெற்றியடைந்துள்ளது. இதன்படி, வாணிப மாணவர்களுக் கான உயர்தர பாடத்திட்டம் 1980 யின் கடைசிப் பகுதியில் திருத்தப்பட்டுள்ளது.

பாடசாலைப் பாடத் திட்டத்தில் நுகர்வோர் கல்வியை அபிவிருத்தி செய்வது தொடர்பான இதவியை அளிக்கம் பொருட்டு, மஹபொல நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான சட்டத்தில் அறிவை மேம்படுததுவதற்கு பாடசாலை மாணவர்க்கு விசேஷ மாக உயர்தர மாணவர்களைக் கருதி நுகர்வோர் கல்வி மீதான கருத்தரங்குகளை திணைக்களம் ஏற்பாடு செய்தது.

கருத்தரங்குகள், வினாவிடை நிகழ்ச்சிகள், சுவரொட்டிப் போட்டிகள், கண்காட்சிகள் முதலியன மூலம் நுகர்வோர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் திணைக்களம் கூட்டிணைக்கின்றது. விபரங்கள் பின்வருமாறு.

| 1996 | 1997 |
|---|---|
| உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதற்கான கருத்தரங்க – மார்ச் 15 – களுத்துறையில். | உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதற்கான கருத்தரங்கு மார்ச் 15 – மாத்தறையில். |
| கிராமங்களில் நுகர்வோர் குழுக்களை நிறுவுவதற்கு முன்னர் நுகர்வோர், இல்லத் தலைவிகள், மாணவர் பிற நுகர்வோர் உழைப்பாளர் பங்கமற்றும் கருத்தரங்ககளும் நுகர்வோர் கூட்டங்களும் – 264 கருத்தரங்குகள்/ கூட்ங்கள் நடாத்தப்பட்டன. | பங்குபற்றுவோரும் பாடசாலை மாணவரும் பெருந்தொகையாகக் கூடும் உலக நுகர்வோர் தினத்திற்கு முன்னர் மாத்தறையில் நடாத்தப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு மீதான கருத்தரங்கு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவருக்கான வினாவிடை நிகழ்ச்சிகள் - களுத்துறை, நுவரேலியா, மாத்தளையில் 4 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

உலக நுகர்வோர் உரிமைகள் தினத்திற்கு முன்னர் பாடசாலை மாணவருக்கான வேலைக்களங்கள் /கரத்தரங்குகள் மாத்தறை கல்வி சுற்று எல்லையிலுள்ள சகல பாடசாலைகளும் பங்குபற்றின.

* ஊடகம், துண்டுப் பிரசுரம் முகலியன மூலம் தகவல் பரப்பல்.

* நுகர்வோர் தகவல் மீது சஞ்சிகைப் பிரசுரம.

* தரத் தன்மைகள், மெட்றிக் ஆக்கலை அடிப்படையாகக் கொண்ட தொ. காநிகழ்ச்சித் திட்டங்கள்.

* நுகர்வோர் பாதுகாப்பு மீது மஹபொல கண்காட்சி சாவடி.

மாவட்டத்தின் உயர்தர மாணவர்களுக் கென 1997 ஏப்றில் 3 ஆந் திகதி களுத்துறையில் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது. 250 பங்கு கொண்டோர்.

களுத்துறையில் நடாத்தப்பட்ட நுகர் வோர் பாதுகாப்பு மீதான வினாவிடை நிகழ்ச்சித் திட்டம். இந் நிகழ்ச்சியின் ஒவ்வொரு குழுவிலும் 3 பங்குபற்றுவோர்களைக் கொண்ட 12 பாடசாலைகள் பங்குபற்றின.

* ஊடகப் புதினக் கடிதங்கள் மூலம் தகவல் பரப்பல்

* நுகர்வோர் பாதுகாப்பு பிரசாரம் பீது மஹபொல கண்காட்சி சாவடிகள்.

* நுகர்வோர் தகவல் மீது சஞ்சிகைப் பிரசுரம.

* நுகர்வோர் பாதுகாப்பிற்குப் பொருந் தக்கூடிய சட்ட விளக்கம், நுகர்வோர் அறிவுக்கான தொ. கா நிகழ்ச்சிகள்.

## நுகர்வோர் பாதுகாப்பில் சர்வதேச கூட்டுறவு.

90 யிற்கு மேற்பட்ட நாடுகளில் 215 அங்கத்தவர்களைக் கொண்ட நுகர்வோர் சர்வதேசத்தின் இணை உறுப்பினரே உள்நாட்டு வியாபாரத் திணைக்களம். இப்பொழுது அது ஐந்து பிராந்திய செயற்பாடுகளைக் கொண்டுள்ளதுடன் ஆசிய, பசுபிக் பிராந்தியத்தை (ஆர்ஓஏபி) இலங்கை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

நுகர்வோர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் பொருளாதார சமூக மன்றத்துடன் இணைகின்ற நுகர்வோர் சர்வதேசம் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான இயக்கும் குழுவில் இலங்கையை செயல்திறமையுடைய உறுப்பினராகத் தெரிவு செய்துள்ளது. 1997 ஜுலை 18 அந் திகதி ஐ. நா. ஈ. சிஓஎஸ்ஓசி யின் தன்னிலையான கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு மீதான தீர்மானம் ஒற்றுமையாக அங்கீகரிக்கப்பட்டட்டது. நுகர்வோருக்கான சமூக நீதியையும் நியாயத்தையும் முன்னேற்றும் பொருட்டு எதிர்காலத்தில் செயலாளர் நாயகத்தின் ஒப்பந்தத்தின் கீழ் ஐ. நா தனி உரிமையாக தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியும்.

## நுகர்வோர் பாதுகாப்பு நிதி.

நாட்டில் நுகர்வோர் தொடர்பான தொழிற்பாடுகளை முன்னேற்றும் பொருட்டு, பாவனையாளர் பாதுகாப்பு நிதியொன்றிள் நிறுவுகைக்கான சட்ட முறையான அதிகாரங்களை திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க நுகர்வோர் சட்டம் அளிக்கின்றது. இவ் ஆண்டின் முதல் அரை வருடத்தின் போது முன்னேற்ற முயற்சிகள் மீதான செலவாக ரூபா 338,945/- கொண்ட தொகை ஏற்பட்டுள்ளது. ரூபா 5.65 மில்லியன் கொண்ட தொகை தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் இம் முதலீட்டிலிருந்து வருடாந்தம் ரூபா 650,000/- கொண்ட வட்டி பெறப்பட்டது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான அபராதங்கள் இந் நிதியில வரவு வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை.

இவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ள முன்ளேற்றங்களும் வெற்றிகளும் திணைக்கள உத்தியோகத்தர்களாலும் உரிய அதிகாரிகளினாலும நிறைவேற்றப்பட்ட கூட்டான குழு வேலையாகும். இம் முன்னேற்றத்தைப் பெறுவதற்கு தம்மால் முடிந்தளவு ஒத்துழைப்பை நல்கிய கௌரவ உள்நாட்டு, சர்வதேச, வாணிப, உணவு அமைச்சருக்கும, அமைச்சு செயலாளருக்கும் அவருடைய உத்தியோகத்தர்களுக்கும் சகல பிரதேச செயலாளர்களுக்கும் பதவி முறையான பிரதி ஆணையாளர்க்கும் உள்நாட்டு வியாபார ஆணையாளர் நன்றி கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

முன்னேற்றம் - 1997

### 01. ஆரம்பம்

1938 இற்கு முன் கம்பனிகளைப் பதிவது இணைந்த பங்கு முதற் கம்பனிகள் உரிமைக்கட்டளையின் கீழ் பதிவாளர் நாயகத்தின் பொறுப்பில் விடப்பட்டது. இந்த நாடு குடியேற்ற நாடாக இருந்த இக் காலத்தில் இந் நாட்டில் வியாபாரம் செய்துவந்த பிரித்தானிய கம்பனிகளே முக்கியமாகப் பதிவு செய்யப்பட்டன.

1938 இன் 51 ஆம் இல. கம்பனிகள் உரிமைக்கட்டளைகளே உள்ளூர் தேவைகளை நிறைவேற்றிய முதற் சட்டமாகும். இந்த உரிமைக் கட்டளைகள் ஐக்கிய ஈராசதானியின் 1929 ஆம் வருடத்து கம்பனிகள் சட்டத்தின் அடிப்படையிலேயே பெரிதும் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டம் அமுல் செய்ததை அடுத்தே பெருகிவரும் கம்பனிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஏனைய வர்த்தகச் சட்ட ஆக்கங்களையும் ஒரு நிறுவனத்தின் கீழ் நிர்வாகிக்க ஒரு பிரிவான திணைக்களம் வேண்டும் என உணரப்பட்டது.

இதன் விளைவாக கம்பனிகள் உரிமைக் கட்டளையை நிர்வாகிக்கும் பொருட்டு கம்பனிகள் பதிவாளரின் கீழ் இத் திணைக்களம் 1938 இல் நிறுவப்பட்டது. 1925 இன் வணிக உரிமைக்குறி உரிமைக் கட்டளைச் சட்டம் இல 15, 1918 இன் 6ஆம் இல. வியாபாரப் பெயர்கள் உரிமைக் கட்டளைச் சட்டம், 1891 இன் 16 ஆம் இல. சங்கங்கள் உரிமைக் கட்டளை, 1935 இன் 61 ஆம் இல. சீட்டுக்கள் உரிமைக் கட்டளை என்பனவும் இத் திணைக்களத்தின் பொறுப்பில் விடப்பட்டன.

இத் திணைக்களம் செயற்பட்ட 50 வருடங்களில் பல பாரிய மாற்றங்களைக் கண்டுள்ளது. கைத்தொழில் வடிவமைப்பு, பிரதிபண்ணும் உரிமை, ஆக்கவுரிமை, வணிக உரிமைக்குறி, நியாயமற்ற வர்த்தகப் போட்டி சம்பந்தமான சட்டங்களுக்குப் பதிலாக 1979 இன் 52 ஆம் இலக்க புலமைச் சொத்து ஒழுங்குவிதிச் சட்டவாக்கத்தைத் தொடர்ந்து 1980 இல் திணைக்களம் பிரிக்கப்பட்டது. பின்னர் அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் கீழ் ஏற்பட்ட அதிகார மாற்றங்களின் பயனாக வியாபாரப் பெயர்கள் உரிமைக் கட்டளைச்சட்டம் சம்பந்தமான பணிகளை மாகாண நிர்வாகத்திற்கு மாற்ற இத் திணைக்களத்தில் மேலும் இரு மாற்றம் ஏற்பட்டது.

அரச கூட்டுத்தாபனங்கள், அல்லது அரச உரித்தாக இருந்த வியாபாரப் பொறுப்புக்களை 1987 இன் 23 ஆம் இல, அரச கம்பனிகள் சட்டத்தின் கீழ் மாற்றி அமைத்தல் மற்றும் 1987 இன் 3 ஆம் இல. அரச ஒப்பந்தச் சட்டம் எனும் ஏனைய சட்ட ஆக்கங்களின் நிர்வாகம் இத் திணைக்களத்தின் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

அதி மாட்சிமை தங்கிய ஜனாதிபதியின் கண்காணிப்பின் கீழ் உள்ள விடயமான அரச ஒப்பந்தச் சட்டம் தவிர்ந்த இத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் ஏனைய சட்டவாக்கங்களின் பராமரிப்பு ஆகார உள்நாட்டு, சர்வதேச வர்த்தக அமைச்சருடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. நோக்கமும் முக்கிய கடமைகளும்

இத் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ள பல சட்டங்களை அமுல் செய்து அவற்றைச் சரியாக நடைமுறைப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம்.

இந்தச்சட்டங்களாவன.

(அ) 1982 இன் 17 ஆம் இல. கம்பனிகள் சட்டம்.

(i) தனியார் மட்டுப்படுத்தப்பட்ட கடன் பொறுப்புக் கம்பனிகளின் பதிவு.

(ii) பொது மட்டுப்படுத்தப்பட்ட கடன் பொறுப்புக் கம்பனிகளின் பதிவு.

(iii) வெளிநாட்டுக் கம்பனிகளின் பதிவு.

(iv) தரை மருவிய கடலிற் செயற்படும் கம்பனிகளின் பதிவு.

(v) மக்கள் கம்பனிகளின் பதிவு

(vi) மட்டுப்படுத்தப்படாத கம்பனிகளின் பதிவு.

(vii) உத்தரவுக் கம்பன்களின் பதிவு

(viii) சபைகளின் பதிவு.

(ix) 1987 இன் 23 ஆம் இல. சட்டத்தின் கீழ் பொதுக் கூட்டுத்தாபனங்கள், அரசுக்குச் சொந்தமான வாணிகத் தொழில் முயற்சிகள் என்பவற்றைப் பொதுக் கம்பனிகளாக மாற்றுதல்.

(x) கணக்காய்வாளர்கள், கம்பனிச் செயலாளர்களைப் பதிவு செய்தல்.

(ஆ) 1891 இன் சங்கங்கள் உரிமைக்கட்டளை இல 16.

செல்வ வளத்தை ஊக்கவும் அங்கத்தவர்களுக்கு நோய்கள் இடர்கள் ஏற்படும்போது உதவும், பணத் தட்டுப்பாடுகள் ஏற்படும்போது அவர்களுக்கு ஆதாரங் கொடுக்கவும், விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் உதவவும் பரஸ்பர முன்னறிவுடைய சங்கங்களைப் பதிவு செய்தல் இந்த உரிமைக் கட்டளையின் ஒரு அம்சமாகும். இக் கட்டளையின் ஆதிக்கத்தை வேறு சங்கங்களின் செயற்பாடுகளுக்கு வியாபிக்க உணவு, உள்நாட்டு, சர்வதேச வர்த்தக ஆமைச்சரால் முடியும்.

(இ) 1935 இன் 61 ஆம் இல. சீட்டு உரிமைக் கட்டளை.

சீட்டுக் கட்டளைச் சட்டத்தின் படி சீட்டுக்களைப் பதியவும் கட்டுப் படுத்தவும் முடியும்.

(ஈ) 1987 இன் 3 ஆம் இல. பொது ஒப்பந்தச் சட்டம்.

இச் சட்டம் அதிஉத்தம ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. 5,000,000 ருபாவிற்கும் அதிகமான பெறுமதியுள்ள பொது ஒப்பந்தங்களுக்கு முகவர்களாக, உப முகவர்களாக, பிரதி நிதிகளாக, செயற்படும் தத்துவம் பெற்றவர்களாக அல்லது கேள்வுக்காரர்களாக இருப்பவர்கள் பதிவு செய்வதற்கு இச் சட்டம் வழி வகுத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. 1996 இல் நடாத்தப்பட்ட செயற்பாடுகள்

3.1 விரைவான செயற்திறனுடைய சேவைகளை வழங்கக்கூடிய வகையில் இந்தத் திணைக்களம் முழுவதும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனை எய்த எல்லா மட்டங்களிலும் கடமை வரையறுப்புக்களும், மறுவரையறுப்புக்களும் செய் யப்பட்டுள்ளது. படிவங்கைப் பரீட்சித்துக் கோவைசெய்து, கட்டிப் பதிவுசெய்து சம்பந்தப்பட்ட கம்பனி மூடப்படும் வரை அவற்றைத் தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதே ஒரு கம்பனியைப் பதிவு செய்தல் என்பதாகும். கம்பனிச் சட்டத்தின் கருத்துக்களை அனுசரித்து நடக்கத் தவறும் போது அந்தத் தவறுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறந்த தகவல்களைக் கொண்ட செய்திறன் மிக்க தகவல் சேவை ஒன்று பொதுமக்களுக்கு வேண்டிய தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கப் பேணப்பட்டு வருகிறது.

### 3.2 நிர்வாகம்

பெறுபேறுகளை எய்தும் பொருட்டு இத் திணைக்களத்தின் பணிகள் 8 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தகவற் பிரிவு பொதுமக்களின் சகல தேவைகளையும் உதவிப் பதிவாளரின் கண்காணிப்பில் அனுபவம் மிக்க அலுவலர்களைக் கொண்ட இப் பகுதி அறி வுரைகளையும் தகவல்களையும் வழங்குதல், புதிய கம்பனிகளின் பதிவு சம் பந்தமான விண்ணப்பப் பத்திரங்களையும் படிவங்களையும் ஏற்றுக் கொள்ளுதல், கம்பனி ஆவணக் கோவைகளில் தேடுகையை மேற்பார்வை செய்தல் மேலும் சில பணிகளைச் செய்வதும் இப் பகுதியின் பொறுப்பாகும்.

தலா ஒரு உதவிப் பதிவாளரையும் 8 எழுதுவினைஞர்களையும் கொண்ட இரு பகுதிகளிடம் இத்திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள 30000 இற்கும் அதிகமான கம்பனிகளும் சட்டங்களைக் கடைப்பிடிப்பதை நிச்சயப்படுத்துவது, கடிதங்கள் பற்றி ஆவன செய்தல், படிவங்களை ஆராய்ந்து பதிவு செய்தல் சம்பந்தமான நடவடிக்கைகள் என்பன போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சென்ற வருடத்திலிருந்து இரு உதவிப் பதிவாளர் பதவிகள் காலியாக்கப் பட்டதால் ஒரு உதவிப் பதிவாளரினாலும் ஒரு பிரதிப் பதிப்பாளராலும் தமது கடமைகளுக்கு மேலாக இவர்களின் கடமைகளையும் பொறுப்பேற் றுச் செயற்படுவது ஓரளவு கடினமாக இருந்தது.

### 3.3 பதிவறை

பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கோவைகளை வைத்துப் பேணும் இரு பதிவறைகளே இத் திணைக்களத்தின் முக்கிய மையமாகும். ஒவ்வொரு கம்பனிகளினதும் ஆரமபம் முதலான சட்ட, வரலாற்று பூர்வமான தகவல்கள் சீராகக் கோவைப்படுத்திப் பாதுகாப்பது பற்றிப் பாரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஆவணங்களின் பராமரிப்பிற்கான நவீன நுட்பமுறைகளைப் பயன்படுத்துவது பற்றிய பிரேரணைகள் அமுல் செய்யப்படும்வரை தற்போதைய நேரடி உடலுழைப்பான முறைகளே தொடரும்.

### 3.4 மேற்பார்வைப் பிரிவு

உரிய சட்டங்களுக்கு இசையக் கம்பனிகள் செயற்படுகின்றனவா என்பதைக் கோவைகளைக் காலத்துக்குக் காலம் பரீட்சித்து உறுதிப்படுத்துவது சில வருடங்களுக்கு முன் தாபிக்கப்பட்ட இப் பிரிவின் பொறுப்பாகும். முக்கியமாக பொதுக்கம்பனிகளின் கோவைகள் கிரமமாகப் பரீட்சிக்கப்படுகின்றன. தொடர்ச்சியாக சட்டங்களுக்கு முரண்பாடாகச் செயற்படும் கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குகள் தொடரப்படும் அல்லது குற்றங்களுக்கென நியமிக்கப்படும் தண்டனை அறவீடுகள் செய்யப்படும். இத்தகைய தகவல்களைப் பேணுவது மேலதிக சிரமமாக இத் திணைக்களத்திற்கு இருப்பதால் சொத்துக்களும் பொறுட்களைப் பதிவு நீக்கம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## 3.5 வழக்குத் தொடரும் கிளை

வழக்குத் தொடரும் கிளை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பிரதிப் பதிவாளரின் மேற்பார்வையின் கீழ் இத் திணைக்களத்தின் நிரந்தர பதவி யணியிலுள்ள நான்கு பரிசோதகரின் சேவைகளுடன் இயங்குகிறது. இத் திணைக்களத்தின் சார்பில், குற்றச்சாட்டுக்களைத் தயாரித்துக் கோவைப்படுத்துதல், நீதிமன்றங்களில் ஆஜராகுதல், மற்றும் திணைக்களத்தின் பொது அமுலாக்கல் நடவடிக்கைகளைச் செயற்படுத்தல் என்பன இவர்களது பொறுப்பாகும். ஆய்வுக்கான காலத்தில் 752 குற்ற வழக்குகள் தொடுக்கப்பட்டு 624 தீர்க்கப்பட்டடுள்ளன. 272 வழக்குகள் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படாது இருந்தன.

## 04. கணக்குகள் மற்றும் நிர்வாகக் கிளை

இவ்விரு கிளைகளும் திணைக்களத்தை உரிய வகையில் நிர்வகித்து அதன் கணக்குகளைச் சரியாக வைத்திருக்கும் பொறுப்புக்களைக் கொண்டுள்ளன. இவை கம்பனிகள் பதிவாளரின் மேற்பார்வையின் கீழ் ஒரு கணக்காளரின் கீழும் ஒரு நிர்வாக அலுவலரின் கீழும் செயற்படுகின்றன.

## 05. வரவுகளும் செலவுகளும்

இத் திணைக்களத்தின் வருமானங்களில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி ஏற்பட்டது. அரசாங்கத்தின் பணிப்புக்களுக்கு அமையச் செலவுகளும் செய்யப்பட்டன. 1996 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானம் 35,027,712.09 ரூபாவாகவும் அதே ஆண்டிறகான செலவுகள் 14,401,304.00 ரூபாவகவும் இருந்தன. இவ்வருடத்தின் ஏழு மாதத்திற்கான மொத்த வருமானம் 20,854,439.00 ரூபாவாகவும் செலவு 8,018,055.00 ரூபாவாகவும் இருந்தன.

கம்பனிகளின் பதிவுக்கு என அறவிடப்படும் கட்டணங்கள், ஆவணங்களின் பதிவு, குற்றத் தண்டனை அறவீடுகள், நியமிக்கப்பட்ட படிவங்களின் விற்பனை. முக்கியமாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் கூடிய தகவல்களை வழங்கல், மற்றும் பொது ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல் என்பவற்றின் மூலமே முக்கியமாக இத் திணைக்களம் தனது வருமானங்களைப் பெறுகிறது.

## 06. உத்தேசத் திட்டங்கள்

இத் திணைக்களத்தின் இரண்டு முக்கிய எதிர்காலத் திட்டங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று திணைக்களத்தைக் கணனிமயப்படுத்தல். மற்றது புதிய கம்பனிகள் சட்டம் ஒன்றை வரைவு செய்தல். இந்த இரு திட்டங்களுக்கும் உலக வங்கி நிதி வழங்க இணங்கும் தறுவாயில் இருப்பதுடன் கணனிமயப்படுத்துவதற்கான திட்டப் பிரேரணைகளையும் அவர்ளே தயா ரித்துள்ளனர். இந்தப் பிரேரணைகள் பற்றிய அபிப்பிராயங்களைப் பெற அவை கொழும்பு பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இப் பிரேரணைகள் பற்றிய இணக்கங்கள் ஏற்பட்டதும் அவற்றைச் செயற்படுத்த முடியும்.

புதிய எண்ணங்களின்படி அபிவிருத்தி அடைந்துவரும் உலகிற்கு ஏற்றவாறான புதிய கம்பனிகள் சட்டத்தின் இறுதி வரைவுகளையும் மிக அண்மையில் கௌரவ உணவு, உள்நாட்டு சர்வதேச வர்த்தக அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. புள்ளிவிபரங்கள்

அட்டவணை.1

1996 இலும் 1997 ஜனவரி முதல் ஜுலை வரையிலும் கம்பனிகளின் பதிவு.

| | கம்பனியின் வகை | 1996 |
|---|---|---|
| 1. | தனியார் | 1846 |
| 2. | பொது | 49 |
| 3. | உத்தரவாதம் | 09 |
| 4. | கழகங்கள் | 77 |
| 5. | மக்களின் | 02 |
| 6. | கரையை மருவிய கடலில் | 04 |
| 7. | வெளிநாட்டு | 33 |
| | மொத்தம் | 2020 |
| | கழகங்கள் | 482 |
| | பொது ஒப்பந்கங்கள் | 651 |

அட்டவணை 2

| கம்பனியின் வகை | 1997 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜன | பெப் | மார்ச் | ஏப்ரல் | மே | ஜுன் | ஜுலை | மொத்தம் |
| 1. தனியார் | 151 | 138 | 159 | 165 | 181 | 179 | 181 | 1154 |
| 2. பொது | 06 | 02 | 04 | 02 | 02 | 02 | 08 | 26 |
| 3. உத்தரவாதம் | 01 | 01 | 01 | 03 | – | – | 01 | 07 |
| 4. கழகங்கள் | 06 | 06 | 02 | 03 | 04 | 08 | 08 | 37 |
| 5. மக்களின் | – | – | 01 | – | 01 | – | – | 02 |
| 6. கரையை மருவிய கடலில் | – | – | – | 01 | – | – | 01 | 02 |
| 7. வெளிநாட்டு | 05 | 06 | 02 | 06 | 03 | 01 | 01 | 24 |
| மொத்தம் | 169 | 153 | 169 | 180 | 191 | 190 | 200 | 1252 |
| கழகங்கள் | 62 | 28 | 18 | 33 | 07 | 36 | 34 | 218 |
| பொது ஒப்பந் கங்கள் | 38 | 27 | 70 | 46 | 34 | 36 | 86 | 337 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3

1996 ஜனவரி முதல் டிசம்பர் வரையும் 1997 ஜனவரி முதல் ஜுலை வரையும் கம்பனி நிதியத்திலும் திரட்டிய நிதியத்திலும் வரவு வைக்கப்பட்ட தொகைகள்.

| விபரம் | 1996 ரூபா | 1997 ஜன முதல் ஜுலை வரை ரூபா |
|---|---|---|
| 1. கம்பனிகள் நிதியத்தில் செய்யப்பட்ட தொகை | 25,441,144.87 | 14,522,127.76 |
| 2. திரட்டிய நிதியத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகை | 9,184,067.22 | 6,149,811.24 |
| 3. திரட்டிய நிதியத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகை (பொது ஒப்பந்தம்) | 402,500.00 | 182,500.00 |
| மொத்தம் | 35,027,712.09 | 20,854,439.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கத் தனியுரிமைகள் வியாபாரக் குறிகள் திணைக்களம்.

### முகவுரை

ஆக்கத் தனியுரிமைகள் வியாபாரக் குறிகள் பதிலகம் அதாவது தேசிய புலமைச் சொத்து அலுவலகம், 1980 ஆம் ஆண்டின் புலமைச் சொத்துக் கட்டளைச் சட்ட கோவையின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவப்பட்டது. புலமைப் படைப்புக்களைப் படைப்போர்க்கான தமது படைப்புக்களின் மீதுள்ள பொருளியலும் நேர்மையும் சார்ந்த உரிமைகளுக்குச் சட்டரீதியான வடிவத்தைக் கொடுப்பதும் சகல மனித முயற்சித் துறைகளிலும் மக்களது ஆக்கல் தன்மையை முன்னேற்றுவதிலும் அத்தகைய ஆக்கங்களைப் படைப்பாளிகளினதும் கோவையை அறிமுகப் படுத்துதற்கும், இத் திணைக்களம் நிறுவப்பட்டது உட்படப் புதிய புலமைச் சொத்து நிர்வாக முறையைக் கொண்டு வருவதற்கும் அடிப்படையிலுள்ள கோட்பாடும் காரணங்களாகும். ஆக்கத் தனியுரிமைகள் வியாபாரக் குறிகள் பதிவகம் ஒரு அரசாங்க நிறுவனமாகத் தன் கடமைகளை 1982 ஜனவரி 01 ஆந் திகதி ஆரம்பித்தது. கூறப்பட்ட கோவையின் பிரகாரம், அது சட்ட ரீதியாக தன் ஆட்சி உரிமை உடையதாகும்.

“புலைமச் சொத்து” என்னும் சொற்கோப்பு இரு கருத்துக்களைத் தழுவி நிற்கின்றது. முதலாவது, கைத்தொழில் சொத்து, கண்டு பிடிப்புக்கள் வியாபாரக் குறிகள், சேவைக் குறிகள், வியாபாரப் பெயர்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள், வியாபார இரகசியங்கள், நியாயமற்ற போட்டிக்கு எதிரான பாதுகாப்பு என்பன இதனுள் அடங்கும். இரண்டாவது பதிப்புரிமை இது. இலக்கிய, கலைத்துறை விஞ்ஞான படைப்புக்களைச் சார்ந்தது. புதியது கண்டுபிடித்தல், புதுமுறை காண்டல், படைப்பாற்றல் ஆகியவற்றை புலமைச் சொத்து ஊக்குவிக்குமென்றும், தொழில்நுட்பம் முதலீடு ஆகியவற்றை இடமாற்றம் செய்யுமென்றும், இலக்கியம், கலை, விஞ்ஞானம், ஆகிய துறைகளில் படைப்புக்களை இது முன்னேற்றுமென்றும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

### கடமைகளும் முயற்சிகளும்.

தேசிய புலமைச் சொத்து அலுவலகமாகச் செயற்படும் ஆக்கத் தனியுரிமைகள் வியாபாரக் குறிகள் பதிவகம் சட்ட ஏற்பாட்டின்படி உள்நாட்டு புலமைச் சொத்து முறையை நிருவகித்து வருகின்றது.

#### (அ) புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமைகள்

ஆக்கவுரிமை விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து வெளிநாடும் உள்நாடும் தகுதிபெற்ற கண்டுபிடிப்புக்களுக்கு ஆக்கவுரிமைப் பாதுகாப்பைக் கொடுக்கின்றது. ஆக்கவுரிமை வழங்கப்பட்டதும் செல்லுபடியான அவ்வாக்குரிமையின் சகல அம்சங்களையும் நிர்வகிக்கின்றது. சம்பந்தப்பட்ட விஞ்ஞான வர்த்தக சமூகங்கள், ஆராய்ச்சி வடிவமைப்பு நிறுவனங்கள், கைத்தொழில்கள் ஏனையவை ஆகியவற்றிள் பிரயோகத்திற்காக ஆக்க உரிமைத் தகவல்களைத் (தேச சர்வதேச மட்டத்தில்) சேர்ப்பதற்கும், இருப்பில் வைத்திருப்பதற்கும், பரப்புவதற்கும் இது பொறுப்பாக உள்ளது.

விண்ணப்பங்களின் கிடைப்பனவு தொடர்பான புள்ளிவிபரங்களும் குறிப்பிட்ட காலத்தின் போது கவனிக்கப்பட்ட விடயங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | ஆக்கவுரிமைகள் | | |
|---|---|---|---|
| | 1995 | 1996 | 1997.01.01 - 1997.07.31 |
| **கிடைத்த விண்ணப்பங்கள்** | | | |
| ஆக்கத் தனியுரிமை பெறுவதற்காக | 189 | 164 | 142 |
| புதுப்பித்தல்கள் | 354 | 295 | 205 |
| ஆவணப் பிரதிகள் | 26 | 23 | 05 |
| ஒப்படைத்தல்கள் | 18 | 03 | 03 |
| ஆவணப் பரிசோதனை | 12 | - | - |
| கவனிக்கப்பட்டவை | | | |
| ஆக்கத் தனியுரிமை கொடுக்கப்பட்டவை | 159 | 205 | 68 |
| புதுப்பித்தல்கள் | 340 | 295 | 205 |
| ஆவணப் பிரதிகள் | 26 | 23 | 28 |
| ஒப்படைத்தல்கள் | 18 | 03 | - |
| ஆவணப் பரிசோதனை | 12 | - | - |
| வகுக்கப்பட்டவை | 159 | 164 | 142 |
| தேடுதல் அறிக்கைகள் | 96 | 86 | 72 |

விண்ணப்பங்களின் எண்ணிக்கை 14% யினால் குறைந்துள்ளது. எனினும், கொடுக்கப்பட்ட ஆக்கவுரிமைகள் 28% யினால் அதிகரித்தன. ஆக்கத் தனியுரிமைகள் பகுதி தொழில்நுட்ப பின்னணியற்ற இரு பொது எழுதுநர்களை மாத்தரம் கொண்டுள்ளன. இத் திணைக்களத்தில் ஆக்கத் தனியுரிமை பரிசோதகர்கள் எவருமில்லை. தேடுதல் அறிக்கை ஒவ்வொன்றும் ரூபா 750/- கொண்ட கொடுப்பனவின் மீது ஆக்கவுரிமை பரிசீலனை செய்ய எம்மால் முடியுமாயிருந்தது.

### (ஆ) வியாபாரக் குறிகளும் சேவைக் குறிகளும்.

வடிவம், பொருள், சட்டரீதி தொடர்பாக அடையாளங்களைப் பரிசீலனை செய்து, தகுதி பெற்றோருக்குப் பதிவு செய்ய அனுமதிப்பது பதிவகத்தின் கடமையாகும். பதிவு செய்யப்பட்ட குறிகளின் நிருவாகமும் பதிவகத்கின் பொறுப்பாகும். குறிகள் தொடர்பான தகவல்களை இது சேமித்து பரப்புகிறது.

குறிப்பிட்ட காலத்தின் போது கவனிக்கப்பட்ட விடயங்கள் விண்ணப்பங்களின் கிடைப்பனவு தொடர்பான புள்ளி பிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | குறிகள் | | |
|---|---|---|---|
| | 1995 | 1996 | 1997.01.01 1997.07.31 |
| **கிடைத்த விண்ணப்பங்கள்.** | | | |
| பதிவுகள் | 4233 | 4427 | 2786 |
| புதுப்பித்தல்கள் | 1031 | 912 | 658 |
| மாற்றங்கள் | 229 | 173 | 109 |
| ஒப்படைப்புகள் | 192 | 154 | 77 |
| உத்தரவுச்சீட்டு ஒப்பந்தங்கள் | 12 | 13 | 03 |
| கவனிக்கப்பட்டவை | | | |
| பதிவுகள் | 1840 | 1071 | 774 |
| புதுப்பித்தல்கள் | 1027 | 732 | 309 |
| மாற்றங்கள் | 394 | 363 | 79 |
| ஒப்படைப்புக்கள் | 347 | 419 | 75 |
| உத்தரவுச்சீட்டு ஒப்பந்தங்கள் | 19 | 76 | 03 |
| எடுத்துச் செல்லுதல் | 219 | - | 55 |
| ஒரு கட்சியினரிடமிருந்து கேட்டல் | 1554 | 1637 | 823 |
| எதிர்கட்சியினரிடமிருந்து கேட்டல் | 253 | 214 | 54 |
| தேடுதல் அறிக்கைகள் | 4726 | 3304 | 1943 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரக் குறிகளின் பதிவிற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 42 யினால் அதிகரித்துள்ளன. கவனிக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளன. இக் குறைவிற்குப் பல காரணங்கள் ஏதுவாக உள்ளன. வியாபாரக் குறிகள் பகுதியின் தலைவர் 1996 ஆம் ஆண்டில் (44/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழான ஒய்வூதியத் திட்டத்தின் கீழ) சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அவ்வாறு செய்ய வேண்டாமென பல தரம் கோரியும் இவ் வெற்றிடத்தைத் திறைசேரி தடைப்படுத்தியது. ஒரு உத்தியோகத்தர் 5 மரதங்களுக்கு மேல் மருத்துவ விடுமுறையிலும் சென்றிருந்தார்கள். மேலும், மேலதிக நேரத்தில் வேலை செய்வதற்கு சில உத்தியோகத்தர்கள் மாத்திரமே விரும்பியதால் மேலதிக நேரத்தின் கீழ் செய்த வேலையும் குறைந்தது. முன்னைய ஆண்டில் வேலையின் பெரும் பகுதி மேலதிக நேரத்தில் செய்யப்பட்டது. 1995, 1996 ஆம் மனித வேலை மணித்தியாலங்கள் ஒப்பிடப்பட்டபோது, வியாபாரக் குறிப் பகுதியின் செயல் நிறைவேற்றம் அதிகரித்தது. வியாபாரக் குறி பரிசீலனையும் தொடர்பான வேறு விடயங்களும் விசேடமாகப் பயிற்றப்பட்ட உத்தியோகத்தரால் வழக்கமாகக் கையாளப்படும் திறமை பெற்ற கடமைகளாகும். எனினும், இலங்கையில் இணைந்த சேவையைச் சேர்ந்த பொது எழுதுநர்கள் இவ் வேலையைக் கவனித்தனர்.

**(இ) கைத்தெழில் வடிவமைப்புக்கள்.**

கைத்தொழில் வடிவமைப்புக்களின் பதிவிற்கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து தகுதிபெற்றோருக்குப் பதிவு செய்யப் பதிவகம் அனுமதி அளிக்கிறது. பதிவு செய்யப்பட்ட வடிவமைப்புக்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பது பரப்புகிறது.

குறிப்பிட்ட காலத்தின் போது கிடைத்த விண்ணப்பங்கள் கவனிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**கைத்தொழில் வடிலமைப்புக்கள்.**

| | 1995 | 1996 | 1997.01.01 - 1997.07.31 |
|---|---|---|---|
| கிடைத்த விண்ணப்பங்கள் | | | |
| பதிவுகள் | 608 | 277 | 114 |
| புதுப்பித்தல்கள் | 18 | 06 | 03 |
| ஆவணப்பிரதிகள் | 11 | 19 | 05 |
| ஒப்படைப்புக்கள் | 02 | - | - |
| கவனிக்கப்பட்டவை | | | |
| பதிவுகள் | 883 | 392 | 99 |
| புதுப்பித்தல்கள் | 18 | 06 | 03 |
| ஆவணப்பிரதிகள் | 62 | - | - |
| வகுக்கப்பட்டவை | 883 | 277 | 114 |

ஆக்கத் தனியுரிமை விண்ணப்பங்களைக் கையாளும் அதே இரு எழுதுநர்கள் இப் பகுதியின் உத்தியோகத்தர்களாகவும் உள்ளனர்.

**(ஆ) பதிப்புரிமை**

பதிப்புரிமைப் பாதுகாப்பைப் பதிவகம் ஊக்குவித்துக் கோவையின் பொருத்தமான ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளோரை மேற்பார்வை செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட காலத்தின் போது பதிப்புரிமைச் சட்டம் நிருவாகத்தின் மீது (சிங்களத்திலும் ஆங்கிலத்திலும்) இரண்டு கருத்தரங்குகளைப் பதிவகம் ஒழுங்கு செய்துள்ளது. இலங்கை நாடக உரிமைகள் சங்கத்தினதும் இலங்கை புத்தக பிரகரிப்பாளர் சங்கத்தினதும் அழைப்பின் பேரில் இரண்டு பொது சொற்பொழிவுகளையும் பதிவாளர் கொடுத்துள்ளார். இலங்கை நாடக உரிமைகள் சங்கத்தின் இரு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வசதிகளையும் பதிவகம் அளித்துள்ளது.

பின்வருபவை பதிவகத்தின் பிற கடமைகளாகும்.

### சர்வதேச உறவுகள்

உள்நாட்டுப் புலமைச் சொத்து முறையை முன்னேற்றுவதற்கும் திருத்தம் செய்வதற்கும் உலகப் புலமைச் சொத்து நிறுவனத்துடனும் (உ. பு. சொ. தி) ஏனைய நாடுகளிலுள்ள புலமைச் சொத்து அலுவலகங்களுடனும் உறுதியான நெருங்கிய தொடர்பு பேணப்படுகிறது. பேர்ண் மரபு, பரிஸ் மரபு ஆக்க உரிமை ஒத்துழைப்பு உடன்படிக்கை ஆகியவற்றிற்கு ஒரு பகுதியிரனாக விளங்கும் இலங்கையின் சார்பில் சர்வதேச ஒப்பந்தங்களிலுள்ள பொருத்தமான நிபந்தனைகளைப் பதிவகம் நிருவகிக்கின்றது. மேலும், ஏனைய நாடுகளின் புலைமச் சொத்துக் காரியாலயங்களுடன் புலமனச் சொத்துத் தகவலைப் பரிமாறிக் கொள்வதற்கும் பதிவகமே பொறுப்பாகும்.

### ஏனைய செயல்கள்.

### மதியுரைச் சேவை.

கேட்டுக் கொண்டால் மற்றவர்களது உரிமைகள் பாதிக்கப்படாத வகையில், பதிவகம், கண்டுபிடிப்பாளர், வர்த்தகக் கைத்தொழில் குழுவினர், இலக்கிய கலைப்படைப்பாளிகள், ஆராய்ச்சி வடிவமைப்பு நிறுவனங்கள் ஆகியோருக்கு நிபுணத்துவ மதியுரை சேவையை வழங்குகிறது. பொது மக்களிற் பலர், குறிப்பாக கலைஞர்கள், சிறிய தொழிலதிபர்கள் தமது புலமைச் சொத்து விடயங்கள் பற்றி பதிவகத்தின் ஆலோசனையை நாடுகின்றனர், என்பது எமது அனுபவம். இத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் பதிவகம் சிறியதொரு மதியுரைச் சேவையை ஆரம்பித்துளளது. மற்றவர்களது புலமைச் சொத்து உரிமைகளைப் பாதிக்காது என்னும் கட்டாய நிபந்தனையின் கீழ் இச்சேவை செயற்படுகிறது.

### முன்னுணர்வு முன்னேற்றம்.

புலமைச் சொத்து விடயம் பற்றிய முன்னுணர்வு பொதுமக்களிடையே முன்னேற்றப்படுதல் வேண்டும் என்னும் தேவை பதிவகத்தின் நெருங்கிய கவனத்தைப் பெற்றுள்ளது. இதன் விளைவாக, கூடிய முன்னுணர்வை உண்டாக்குவதற்கான ஒரு திட்டத்தைப் பதிவகம் ஆரம்பித்துள்ளது. புலமைச் சொத்து மீது மூன்று தேசிய கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தது.

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு, சிஜஎஸ்ஜஆர், இலங்கை நாடக உரிமைகள் சபை, தனியர்ா துறை அபிவிருத்திக்கான நிலையம், இலங்கைச் சத்தைப்படுத்தற் நிறுவனம், சிறிய கைத்தொழில்கள் மன்றம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து பல பொது சொது சொற் பொழிவுகளை அது நடாத்தியது. 3 சந்தர்ப்பங்களில் மஉறபொல கண்காட்சிகளிலும் பதிவகம் பங்குபற்றியது.

### பயிற்சி.

புலமைச் சொத்து நிர்வாகத்தில் பதிவகம் தொடர்ந்து தனது பணியாளர்களைப் பயிற்றுவித்து வருகிறது. ஆய்வுக் காலத்தின் போது ஏழு பணியாளர்கள் இலங்கையிலும் வெளிநாட்டிலும் புலமைச் சொத்து நிருவாகத் தொடர்பாகப் பயிற்சி பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவிலும் பசுபிக் பிரதேசத்திலும் உள்ள வளர்முக நாடுகளுக்கான புலமைச் சொத்துப் பயிற்சி நெறியை 1996 ஜுலை மாதத்தில் இலங்கை மன்றக் கல்லூரி, யுன்டிபி, உ. பு. சொ. நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பதிவகம் ஒழுங்கு செய்தது.

## அரசாங்க அரசாங்கமற்ற நிறுவனங்களுக்கு உதவி

அநேக பிற அரசாங்க, அரசாங்கமற்ற நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அவர்களது புலமைச் சொத்து நிர்வாகம் தொடர்பாகப் பதிவகம் உதவி வழங்கியுள்ளது. இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழு, சி. ஐ. எஸ். ஐ. ஆர் இலங்கை நாடக உரிமைச்சபை என்பன மூன்றும் இவற்றுள் அடங்கும். உ. பு. சொ. நிறுவனத்தின் உதவியுடன் மேலும் சில பயிற்சி சேவைகளை இலங்கயின் தனியார் துறையினர்க்காக இலங்கையிலும் வெளிநாட்டிலும் ஒழுங்கு செய்தது.

## வெளியீடுகள்.

"இலங்கையில் புலமைச் சொத்து நிருவாகம்" என்னும் ஒரு சிறிய நூலைப் பதிவகம் வெளியிட்டுள்ளது. இது 1996 யில் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மேலும், வியாபாரக் குறிகளின் பதிவு, கைத்தொழில் வடிவமைப்புகள், ஆக்கத்தனியுரிமைகளுக்கான விண்ணப்பதாரிகளுக்கான வழிகாட்டுதல்கள் சகல 3 மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டன.

## சட்டத்திற்குரிய திருத்தம்.

உ. வ. நி உடன்படிக்கையின் கீழுள்ள ட்றிப்ஸ் ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கையின் புலமைச் சொத்துச் சட்டத்தைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புலமைச் சொத்துச் சட்டக் கோவைக்கான திருத்தம் 1997 ஜுனில் பாராளுமன்றத்தில் அங்கீ கரிக்கப்பட்டது. மசோதா 1997 ஜுலை 21 ஆந் திகதி கௌரவ சபாநாயகரால் உறுதிப்படுத்தப்பட்டது. புலமைச் சொத்து நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் மீளமைப்பதக்கும் மசோதா கருதுகின்றது.

## நவீனமயப்படுத்தல்.

இந்நாளின் தேசிய சர்வதேசத் தேவைகளை, நிளைவு செய்வதற்காக நாட்டின் புலமைச் சொத்து முறையை மறுசீர் செய்து புதுப் பாணியில் அமைத்தல் வேண்டுமென்பது கட்டாயமானதொன்றாயுள்ளது. தொழில்நுட்பப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தி, புலமைச் சொத்து நிருவாக முறையை வழி நடாத்தும் திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ் யோசனைகள் சம்பளங்கள் ஆள் அணிக் குழுவின் முன்னிலையில் அவர்களது விதப்புரைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆக்கத் தனியுரிமைத் தகவல் முறையொன்றினை நிறுவி வியாபாரக் குறி நிர்வாகத்திற்கு இயந்திரம் மூலம் இயங்கும் உதவியை அளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. உ. பு. சொ. நி குழு 1997 மே மாதத்தில் முறைப்படியான ஆய்வொன்றினை மேற்கொண்டது. குழு தனது அறிக்கையை ஏற்கெனவே சமர்ப்பித்துள்ளது.

## நிதி.

இது வருமானத்தைப் பெருக்கும் திணைக்களமொன்றாகும். இது இரு கணக்குகளை பொதுத் திறைசேரிக் கணக்கு, புலமைச் சொத்து நிதிக் கணக்கை கையாளுகின்றது. இது கட்டணங்களைச் சேகரித்து புலமைச் சொத்துச் சட்டக் கோவையின் கீழ் நிறுவப்பட்ட புலமைச் சொத்து நிதியைப் பேணுகிறது. நிதி, வழங்கீட்டுப் பகுதி கணக்காளரொருவரையும் 3 எழுதுநர்களையும் கொண்டுள்ளது. நிதி நிர்வாகத்தின் சில பகுதிகள் இயந்திரமூலமான உதவியைப் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திர மூலமான நிதி நிர்வாகம் மீது ஏற்கெனவே கணக்காளரும் இரு எழுதுநர்களும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பிட்ட காலத்தின் போது பெறப்பட்ட வருமானம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது. 2% வருமான அதிகரிப்பு உள்ளது.

**சேகரிக்கப்பட்ட வருமானம்.**

| 1995 | 1996 | 1997.01.01 - 1997.07.31 |
|---|---|---|
| 6,031,383/- | 6,166,045/- | 3,304,179/- |

## பொது நிர்வாகம்.

நிர்வாக உத்தியோகத்தர் ஒருவராலும், ஒரு எழுதுநராலும், இரண்டு தட்டெழுத்தாளர்களாலும் ஒரு சுருக்கெழுத்தாளராலும் பொது நிர்வாகம் நடாத்தப்படுகின்றது. பொது நிர்வாகத் தொழிற்பாடுகள் குழப்பமின்றி தொடர்கின்றது. அரசகரும மொழிகள் தொடர்பான விதிகளுக்கு மரியாதை கொடுப்பதற்கு முடியுமான சகல நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட காலத்தின் போது ஒப்பந்த அடிப்படையில் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் ஒருவரையும் சிங்கள - ஆங்கில மொழிபெயர்ப்பாளர் ஒருவரையும் ஒப்பந்த அடிப்படையில் வேலையில் ஈடுபடுத்தியுள்ளோம்.

## குறைபாடுகளும் எதிர்பார்ப்புக்களும்.

தேர்ச்சித் திறனுடைய பணிப்பாளர்கள், நவீன வசதிகள் ஆகியவை இல்லாமை போன்ற கடுமையான பிரச்சனைகளைப் பதிவகம் எதிர்நோக்குகின்றது. இப்போதைய தேர்ச்சியற்ற பணியாளர்கள், பயனிழந்த பழைய புலமைச் சொத்து நிருவாக முறை ஆகியவற்றின் உதவியுடன் எப்போதுமே கூடிக்கொண்டு போகும் வேலைப் பளுவைச் சமாளிப்பது மிகவும் கஷ்டமாயுள்ளது. இத்தகைய குறைபாடுகள் காரணமாகச் சட்டரீதியாக அமைந்துள்ள பல கடமைகளையும் செயல்களையும் செய்யாது தவறத் திணைக்களம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

சகல இப் பிரச்சனைகள் இருந்த போதிலும், திணைக்களம் தனக்கு ஆகக் கூடிய அளவுக்கு விரும்பத்தக்க நோக்கங்களை எய்துவதற்கு வலுவுடன் பிரயத்தனப்பட்டது. இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் இந்த உண்மைகளை நிரூபிக்கும். உத்தேச நவீனமயப்படுத்தல் திட்டம் அமுலுக்கு வரும்போது, தொழில்நுட்ப, கலாச்சார, சமூக, பொருளாதார வளம் எய்தும் தேசத்தின் பிரயத்தனத்தில் பதிவகம் ஆக்கபூர்வ மாகவும் கூடிய திறனுடனும் சேவை செய்ய எதிர்பார்த்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு ஆணையாளர் திணைக்களம்.

### உணவுத் திணைக்களத்தின் ஆரம்பம்.

இரண்டாம் உலக யுத்த ஆரம்பத்துடன் 1941 இல் உணவு ஆணையாளர் திணைக்களம் நிறுவப்பட்டது. 1947 இன் 30 ஆம் இல. உணவு வழங்குதல் ஒழுங்குச் சட்டத்தின் கீழும், 1950 இன் 35 ஆம் இல. உணவு (கையிருப்பு) கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழும் இத் திணைக்களத்தின் செயற்பாடுகள் மேலும் விரிவாக்கப்பட்டன. உணவு ஆணையாளரே உணவுத் கட்டுப்பாட்டாளராகவும் உணவு வாங்கல்கள் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

### நோக்கங்கள்.

நாடு பூராவும் பிரதான உணவுப் பொருட்களை வழங்கி விநியோகிப்பதே திணைக்களத்தின் முக்கிய நோக்கமாக ஆரம்பத்தில் அமைந்திருந்தது. இதைத் தொடர்ந்த சட்டங்கள், ஒழுங்குச் சட்டங்கள் காரணமாக, உணவு விநியோகம், புடை பெயர்ப்பு, வழங்கல், சில குறிப்பிட்ட உணவுப் போருட்களை உற்பத்தியாளர்கள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், நுகர்வோர் வைத்திருத்தல் என்பவற்றிற்கான கட்டுப்பாட்டு அதிகாரங்கள் உணவு ஆணையாளருக்கு வழங்கப்பட்டது.

### திணைக்களத்தின் செயற்பாடுகள்.

அடிப்படையாக உணவு ஆணையாளர் திணைக்கணத்தினை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. உணவுன் பவித்திரதிதைப் பேணல் (வழங்கல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், விலை மட்டங்கள், தரம்)

2. உணவு இருப்பைக் கண்காணித்தல் (உற்பத்தி, விநியோகம், நுகர்வு முதவியன.

3. அத்தியாவசிய உணவுப் பாண்டங்களின் விலைகளை ஸ்திரப்படுத்துவதில் தலையீடு.

4. எல்லாப் பகுதி மக்களுக்கும் தட்டுங்கலற்ற கோதுமை மாவு வழங்கலை உறுதிப்படுத்தல்.

5. சத்துணவு முன்னேற்றம்.

### (1) உணவின் பவித்திரத்தைப் பேணுதல்.

முக்கிய உணவுப் பொருட்களான கோதுமை மாவு, அரிசி, சீனி என்பவற்றை தொடர்ச்சியாக பற்றாக்குறை எதுவுமின்றி வேண்டும்போதெல்லாம் நுகர்வோருக்க வழங்குவதை ஸ்திரப் படுத்தும் வகையில் திணைக்களம் அயராது செயற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப் பணடங்களின் மொத்த இறக்குமதிகள் வருமாறு.

**உணவுப் பண்டங்களின் மொத்த இறக்குமதி (மெ. தொன்)**

| ஆண்டு | தனியார் துறையினரால் அரிசி | கோதுமை சீனி | தானியம் |
|---|---|---|---|
| 1991 | 131,000 | 358,000 | 868,509 |
| 1992 | 237,000 | 356,422 | 706,666 |
| 1993 | 209,000 | 396,040 | 826,399 |
| 1994 | 58,434 | 491,000 | 865,004 |
| 1995 | 9,456 | 416,909 | 1,057,395 |
| 1996 | 341,000 | 381,000 | 913,000 |
| ஜூன் வரை | 112,700 | 302,371 | 432,502 |

(2) அரிசி இறக்குமதி 331544 மெ. தொ இனால் அதிகரித்தது. 1996 இன் மொத்த அரிசி வழங்கல் (உற்பத்தி இறக்குமதி) 1,660,040 மெ. தொ ஆகும். 1997 இன் முதற் பாதியில் 112,700 மெ. தொ அரிசி இறக்குமதி செய்யப்பட்டடுள்ளது. இருப்பின் 1997 ஜனவரியில் மட்டும் மொத்தம் 97688 மெ. தொ அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. இது 1997 இன் முதற் பாதியில் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த இறக்குமதியில் அண்ணளவாக 86% ஆகும் .0% சுங்கவரியே இதற்கான காரணமாகும். 01. 02. 97 முதல் 35% சங்கவரி விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1997 ஜூன் வரை மொத்தம் 13,519 மெ. தொ மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டது.

**உள்ளூர் அரிசி உற்பத்தியும் உலகச் சந்தையில் அரிசியின் விலையும்.**

| ஆண்டு | உற்பத்தி மெ. தொ | உலகச் சந்தை விலை (மெ. தொ. ஒன்றுக்கு யூ. எஸ். டொலர்) கரை சேர் நிலையில். | | |
|---|---|---|---|---|
| 1992 | 1,591,200 | 1992 | ஜூலை | 243.00 |
| 1993 | 1,743,520 | 1993 | ஜூலை | 182.00 |
| 1994 | 1,825,120 | 1994 | ஜூலை | 225.00 |
| 1995 | 1,910,800 | 1995 | ஜூலை | 330.00 |
| 1996 | 1,319,040** | 1996 | ஜூலை | 333.75 |

** தற்போதைக்கான

(3) 1995 இன் முடிவுமுல் நிலவிய கடும் வரட்சி 1995/96 உள்ளூர் பெரும்போக நெற்பயிர்களைப் பாதித்தது. 1996 இல் சிறு போகத்திற்கான பருவப் பெயர்ச்சிக் காற்று மழை வரப் பிந்தியதால் 1996 சிறு போகப் பயிர்கள் பாதிக்கப்பட்டன. இக் காரணிகள் அனைத்தும் 1996/97 இன் பயிர்களும் பெரும் வெற்றியைத் தரவில்லை. இவையெல்லாம் இவ்வருட இறுதிக்கால அரிசி விலைகளில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.

(ஆ) (1) உதவித் திட்டங்களின் கீழ் சர்வதேச சமூகத்தின் நன்கொடைகள் நாட்டின் உணவு உத்தரவாதத்தையும் கொடுப்பனவுச் சமனீட்டு நிலையையும் வலுவூட்ட உதவின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) 1,111 தலைப்புகளில் பீ. எல். 480 திட்டத்தின் கீழ் உணவு இறக்குமதிக்கான நிதி வழங்கல் மற்றும் ஏற்றுமதி ஊக்கத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சகாய விலைக் கோதுமை என்பவற்றால் பீ. எல். 480 திட்டம் அரசுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணத்தை வழங்கியது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் உதவித் திட்டங்களின் கீழ் கிடைத்த உணவு (மெ. தொ)

| | | |
|---|---|---|
| 1992 | அரிசி | 8,534 |
| | சீனி | 205 |
| | தானிய வகை | 986 |
| 1993 | அரிசி | 5,239 |
| | கோதுமை அரிசி | 5,840 |
| 1994 | அரிசி | 16,868 |
| | கோதுமை அரிசி | 77,070 |
| 1995 | கோதுமை அரிசி | 4,993 |
| 1996 | அரிசி | 13,000 |
| 1997 ஜுலை வரை | அரிசி | 5,870 |

பீ. எல் 480 திட்டத்தின் கீழ்
(மில்லியன் யூஎஸ் டொலர்களில் உணவின் பெறுமதி)

| ஆண்டு | பீ. எல் 480 (1) | பீ. எல் 480 (2) |
|---|---|---|

(இ) மேலும் வழங்கல்களில் பற்றாக் குறைகளையும் தடங்கல்களையும் தவிர்க்கும் பொருட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உள்ளூர் உற்பத்தி நிலைகளையும் தேவைகளையும் சீர்தூக்கிப் பார்த்து உரிய காலத்தில் இறக்குமதிகளை மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட அதிகார நிறுவனங்களுக்குத் திணைக்களம் வேண்டிய தகவல்களை அனுப்புகிறது.

(2) உணவுப் பாண்டங்களின் இருப்பை உறுதிப்படுத்தல்

(அ) இடுக்கண் காப்புக் களஞ்சியம்

(1) நியாயமான விலைகளுக்கு தேவையான அளவு உணவுப் பொருட்கள் மக்களுக்கென இருந்தாலும், அவற்றை நுகர்வோர் இலகுவாகப் பெறும் மார்க்கம் இருப்பதுமே உணவு உளமை என்ப. இதனை எய்த வேண்டிய அளவு உணவுக் களஞ்சிய மட்டங்கள் பேணப்படுதல் அவசியமாகும். எனவே கோதுமை மாவு, அரிசி, சீனி என்பவற்றை தடையின்றி வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டிய இடுக்கண் காப்புக் களஞ்சியங்கள் பேணப்படுகின்றன. திருகோணமலையிலுள்ள பிறிமா மாவாலையிலும் மாவரைப்பு செயற்திற உச்ச வரம்பைக் கருத்திற் கொண்டும் நெருக்கடி நிலைகளில் பயன்படுத்தும் பொருட்டும் திணைக்களம் எப்பொழுதும் குறைந்தது நான்கு முதல் ஆறு கிழமைகளுக்கு வேண்டிய கோதுமை மாவைக் களஞ்சியப்படுத்தி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோதுமைக் களஞ்சியக் கூற்று**

**01. 01. 96 இல் இருந்து ஆரம்பக் களஞ்சியம்**

| | | |
|---|---|---|
| பிறிமா ஆலையில் தானிய வடிவில் | 59,443 | மெ. தொ |
| பிறிமா ஆலையில் மாவு வடிவில் | 7,390 | மெ. தொ |
| உணவு ஆணையாளரின் களஞ்சியங்களில் | 51,014 | மெ. தொ |
| துறைமுதத்தில் (2 கப்பல்களில்) (தானியம்) | 6,159 | மெ. தொ |

**1996 ஆம் ஆண்டுக்குள் கிடைத்தவை**

| | | |
|---|---|---|
| மெத்தக் கோதுமை அரிசி இறக்குமதி உணவு ஆணையாளரால் அரைத்தபின் பொறுப்பேற்றவாறு | 913,00 | மெ. தொ |

**31. 12. 1996 இல் இருந்த வருட இறுதிக் களஞ்சியம்**

| | | |
|---|---|---|
| பிறிமா ஆலையில் தானிய வடிவில் | 40,535 | மெ. தொ |
| பிறிமா ஆலையில் மாவு வடிவில் | 23,870 | மெ. தொ |
| உணவு ஆணையாளர் களஞ்சியங்களில் | 29,224 | மெ. தொ |
| துறைமுகத்தில் (2 கப்பல்களில்) தானியம் | 2,068 | மெ. தொ |

குறிப்பு : பநோகூச யிடம் உள்ள களஞ்சியங்கள் சேர்க்கப்படவில்லை.

(2) சுங்கப் பிணையாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சீனி என்பன சுங்கத் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் சுங்கக் களஞ்சியக் குதங்களில் வைக்கப்படுகின்றன.

**அரிசிக் களஞ்சியக் கூற்று**

**01. 01. 96 இல் இருந்த ஆரம்பக் களஞ்சியம்**

| | | | | |
|---|---|---|---|---|
| பிணையாளர்களிடம் இருந்த | - | பச்சை | 54 | மெ. தொ |
| பிணையாளர்களிடம் இருந்த | - | புழுங்கல் | 3575 | மெ. தொ |
| நெ. வி. ச. இடம் இருந்த | - | அரிசி | 14980 | மெ. தொ |
| நெ. வி. ச. இடம் இருந்த | - | நெல் | 103,040 | மெ. தொ |
| | | | (சமான அரிசி 65,948) | |

**1996 இல் கிடைத்தவை**

| | | |
|---|---|---|
| மொத்த இறக்குமதி | 341,000 | மெ. தொ |
| உள்ளூர் உற்பத்தி | 1,319,040 | மெ. தொ |

31. 12. 1996 இல் இருந்த வருட இறுதிக் களஞ்சியம்

| | | | | |
|---|---|---|---|---|
| பிணையாளர்களிடம் இருந்த | - | பச்சை | 16,142 | மெ. தொ |
| பிணையாளர்களிடம் இருந்த | - | புழுங்கல் | 0 | மெ. தொ |
| நெ. வி. ச இடம் இருந்த | - | அரிசி | 2,410 | மெ. தொ |
| | | | (சமான அரிசி 1,942 மெ. தொ) | |
| உள்ளூர் இறக்குமதியாளரிடம் | - | பச்சை | 28,946 | மெ. தொ |
| உள்ளூர் இறக்குமதியாளரிடம் | - | புழுங்கல் | 5,345 | மெ. தொ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) குறைந்த பட்ச இடுக்கண் காப்புக் களஞ்சியத்தைப் பேணுவதை உணவுத் திணைக்களம் உறுதிப்படுத்துகிறது. ஏதாவது பற்றாக் குறைகள் நிலவும் போது விலைகளை ஸ்திரப்படுத்தும் பொருட்டு உணவுப் பொருட்கள் களஞ்சியத்தில் இருந்து சந்தைக்கு விடப்படுகின்றன. இந்த வருடம் பூராவும் இரண்டுமாத அரிசி, சீனிக் கையிருப்புக்கள் பேணப்பட்டன.

(ஆ) களஞ்சியப் படுத்தல்.

(1) இடையீடின்றி நாடு முழுவதும் உணவு இருப்பதை உறுதிப்படுத்த எல்லா மாவட்டங்களிலும் உண்வுத் திணைக்களம் களஞ்சியசாலைகள் பலவற்றைக் கொண்டுள்ளது.

(2) உணவு ஆணையாளரின் களஞ்சிய சாலைகளில் உணவுத் திணைக்களத்தின் களஞ்சியங்களுக்கு மேலதாக சங்கப் பிணையாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சீனி என்பனவும் களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் மாதாந்தம் திணைக்களத்திற்கு வாடகையும் செலுத்தப்பட்டது. பல்வேறு முகவர் நிலையங்களிலிருந்து கீழ்க்காணும் வாடகைகள் அறவிடப்பட்டன.

| ஆண்டு | வாடகையாக அறவிடப்பட்ட தொகை. ரூபா |
|---|---|
| 1992 | 22,108,705.06 |
| 1993 | 54,824,358.00 |
| 1994 | 63,475,993.92 |
| 1995 | 39,640,204.53 |
| 1996 | 44,093,750.00 |
| 1997ஜுன் வரை | 25,187,856.97 |

நாடு பூராவிலுமாக 519,610 மெ. தொ களஞ்சியப்படுத்து வசதிகளை உணவு ஆணையாளர் திணைக்களம் சொந்தமாக வைத்திருக்கிறது.

(இ) சுங்கப் பிணைய முறை.

(1) திறைசேரியினால் 1987 ஆம் ஆண்டில் சீனியுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 1990 இல் அரிசிக்கும் நீடிக்கப்பட்டது. இதன்கீழ் வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடும் கம்பனிகள் மொத்தத் தேவை அளவு அரிசியையும், சீனியையும் இறக்குமதி செய்து, இருப்பை நிச்சயப்படுத்தும் வகையில் சுங்கத் திணைக்களத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் அவர்களின் குபங்களில் களஞ்சியப் படுத்த அனுமதிக்கப்பட்டது.

(2) இத்திட்டத்தின் கீழ் பாரிய நிதியப் பொறுப்புடன் இடுக்கண் காப்புக் களஞ்சியத் தொகைகளை இறக்குமதி செய்து தொடர்ச்சியாகப் பேணும் பொறுப்பிலிருந்து திறைசேரி விடுவிக்கப்பட்டது.

(3) சுங்கப் பிணையாளர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் ஆவன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) ஏலவே தீர்மானிக்கப்பட்ட குறைந்த மட்ட இடுக்கண் காப்புக் களஞ்சிய அளவு எப்போதும் பேணப்படல் வேண்டும்.

(ஆ) களஞ்சிய சாலைகளைப் பராமரிக்குமிடத்து சுகாதாரத் தரங்களுக்கு இணக்கமாக இருத்தல் வேண்டும்.

(இ) களஞ்சிய மட்டங்கள் பற்றிய வாராந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உள்ளூர் விவசாயிகளைக் காக்கும் பொருட்டு அரசுடன் இணங்கப்பட்ட விலைகளுக்குக் குறைந்த விலைகளுக்கு அரிசியை விற்பனை செய்ய முடியாது.

(உ) உணவு ஆணையாளரால் வகுக்கப்பட்ட தர நிர்ணயங்களையே அவர்கள் கடைப்பிடித்தல் வேண்டும்.

(4) மேற்கூறிய நிபந்தனைகளுக்கு அமைய நன்கு செயற்படாத பிணைமுறிகளை ரத்துச் செய்யவும் புதிய பிணையாளர்களைச் சேர்க்கவும் காலத்திற்குக் காலம் பிணையாளர் பட்டியல் காலத்திற்குக் காலம் திருத்தப்படுகிறது. தற்போது ஐந்து அரிசிப் பிணையாளர்களும் நான்கு சீனிப் பிணையாளர்களும் இருக்கின்றனர். பிணையாளர்களின் பட்டியல் வருமாறு.

**1996 இல் அரிசிப் பிணையாளர்கள்.**

(1) திருவாளர்கள் அந்தரே அன்ட் சிஎல்ஈ. எஸ். ஏ
(2) திருவாளர்கள் ஒறோ இன்டர்நாஷனல்
(3) திருவாளர்கள் வொயெஸ்ட் அல்பைன் இன்டர் றேடிங்
(4) திருவாளர்கள் ஈஸ்வரன் பிரதர்ஸ்ஃபூட் (பிரை) லிமி
(5) திருவாளர்கள் செனிவிரத்ன றேடிங் கோ (பிரை) லிமி.

**சீனிப் பிணையாளர்கள்**

1. திருவாளர்கள் செரி ஃபட் ஸ்டவ்ஸ் கோ. லிமி
2. திருவாளர்கள் லூயிஸ் டிரிட்டஸ் சுகர்
3. திருவாளர்கள் ஈ. டீ. அன்ட் எவ் மான் (ஹொங்கொங்) லிமி
4. திருவாளர்கள் மெற்றல்மான் கோ. லிமி.

(5) முன்பு நடந்ததுபோல் அரசே அரிசியையும் சீனியையும் இறக்குமதி செய்ய வேண்டின் அரசுக்கு வருடாந்தம் அண்ணளவாக 36 பில்லியன் ரூபா செலவாகும். அரிசி, சீனி இறக்குமதிக்குத் தனியார் துறையினர் 36 பில்லியன் ரூபாவை முதலீடு செய்தனர் என்பது கீழ் உள்ள அட்டவணையிலிருந்து புலனாகும். ஆகையால் அரசு இத்தொகைப் பணத்தை நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் திசைதிருப்ப முடிந்தது.

(6) கடந்த தசாப்தத்தில் 1994, 1995 இலேயே மிக அதிக அரிசி உற்பத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. அரிசிப் பிணையாளர்களால் இறக்கமதி செய்யப்பட்ட அரிசி நத்தை வேகத்திலே நகர்ந்தது. இதனால் பிணையாளர்களுக்கு பாரிய நட்டங்கள் கிடைத்தன. உண்மையில் சில பிணையாளர்கள் 1994, 1995 காலப்பகுதியில் தமது பிணையக் களஞ்சியங்களிலிருந்து மறு ஏற்றுமதி செய்தனர். அரிசிக்கும், சீனிக்கும் 1994 வரை 22 பிணையாளர்கள் செயற்பட்டனர். 1996 இல் அது 5 ஆகக் குறைந்தது. பிணையங்களில் நட்டமடைந்து தவித்தவர்கள் இலங்கையில் தமது செயற்பாடுகளை மூடி விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசி, சீனி இறக்குமதி.

| ஆண்டு | அரிசி தொகை | சீனி தொகை |
|---|---|---|
| 1991 | 131,000 | 358,000 |
| 1992 | 237,000 | 356,422 |
| 1993 | 209,000 | 396,040 |
| 1994 | 58,434 | 491,000 |
| 1995 | 9,456 | 416,909 |
| 1996 | 341,000 | 381,000 |
| 1997 ஜுன் வரை | 112,700 | 302,871 |

**(03) அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை ஸ்திரப்படுத்துவதில் தலையீடு**

**(அ) சந்தை விலைகளை ஸ்திரப்படுத்துதல்**

(1) சாதாரண நிலைகளின் கீழ் அறுவடை காலங்களில் அரிசியின் விலை குறைந்ததுடன் அருந்தல் மாதங்களில் கூட முனையும். உலகச் சந்தையின் போக்குக்களின்படி சீனி விலைகள் மாறும். இந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை ஸ்திரப்படுத்தும் பொருட்டு அவற்றிற்குச் செலுத்த வேண்டிய சுங்கவரிகள் உணவு ஆணையாளரின் சிபாரிசு மற்றும் விவசாய அமைச்சின் ஆலோசனை என்பவற்றிள் அடிப்படையில் திறைசேரியால் தீர்மானிக்கப்படுகிறது. சுங்கவரி தீர்மானிக்கப்படும்போது உலக சந்தையின் அரிசி, சீனி விலைகள், உத்தரவாத விலை, உள்ளூர் அரிசி உற்பத்தி, உள்ளூர் சந்தையில் விலை மாற்றங்கள் என்பன கருத்தில் கொள்ளப்பட்டன.

அரிசி சீனி என்பவற்றிள் வரி மாற்றங்கள்.

| அரிசி | | சீனி | |
|---|---|---|---|
| ஆண்டு | வரி | ஆண்டு | வரி |
| 1990 | 08% | 1993 நவம்பர் 11 | கி. விற்கு ரூ 6.50 |
| 1992 ஜுலை 30 | 12% | 1994 மார்ச் 08 | கி. விற்கு ரூ 5.00 |
| 1992 டிசம்பர் 01 | 16% | 1994 மே 11 | கி. விற்கு ரூ3.00 |
| 1993 ஜுலை 26 | 20% | 1994 நவம்பர் 26 | 18% |
| 1993 ஆகஸ்ட் 17 | 35% | 1997 ஆகஸ்ட் 11 | 25% |
| 1994 டிசம்பர் 13 | 20% | | |
| 1995 பெப்ரவரி 01 | 35% | | |
| 1996 ஏப்ரல் 15 | 0% | | |
| 1997 | ஜனவரி 31 | | 35% |

(2) 1995/96 பெரும் போகத்திலும் 1996 சிறுபோகத்திலும் உள்ளூர் அரிசி உற்பத்தி குறைவாக இருந்ததால் 1996 ஏப்ரல் 15 முதல் அரிசியின் இறக்கமதி வரி பூச்சியமாகக் குறைக்கப்பட்டது. அரிசியின் பற்றாக்குறையை நிரப்ப இறக்குமதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு இது செய்யப்பட்டது. மீண்டும் 1997 ஜனவரி முடிவில் 35% வரி விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) தகவல் திரட்டல்

(1) நாட்டின் விலை ஸ்திரப்பாட்டிற்கு சந்தை நிலை பற்றிய அறிவு இன்றியமையாதது. எமவே, உள்ளூர் சர்வதேச உணவு உற்பத்திகள், உள்ளூர் தேவைகள், இறக்குமதிகள், அறுவடை ஊகிப்பு, உலகச் சந்தை விலைகள், உரிய அதிகாரிகளிடமிருந்துதர நிர்ணயங்கள் பற்றிய தகவல்கள் திணைக்களத்தின் கணனித் தொகுதிகளின் மூலம் சேகரிக்கப்படுகின்றன.

(2) இறக்குமதிகள் வரி அகற்றல் போன்ற கொள்கைத் தீர்மானங்களை அரசு எடுக்க உதவும் வகையில் இந்த தகவல்கள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் உணவுப் பாதுகாப்புக் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

**04. சகல பகுதி மக்களுக்கும் இடையீடின்றிக் கோதுமை மாவு வழங்குவதை உறுதிப்படுத்தல்.**

(1) இடையீடின்றிய உணவு விநியோகத்திற்குத் திறமையான பரந்துபட்ட விநியோக அமைப்பு ஒரு முக்கிய அம்சமாகும். நாடு பூராவுக்குமான கோதுமை மாவு விநியோகம் திணைக்களத்தினாலேயே கையாளப் பட்டது. கரையோரக் கப்பல்கள், புகையிரதங்கள், லொறிகள் என்பவற்றால் திரிகோணமலை பிறிமா மாவாலையில் அரைக்கப்பட்ட மாவு நகர்த்தப்படுவதுடன் அதற்கான செலவுகள் வருமாறு.

புகைவண்டி, லொறி, கப்பல் மூலமாக கோதுமை மாவு நகர்வதற்கான செலவு (மெ. தொ. ஒன்றிற்கு ரூபாவில்)

| ஆண்டு | புகைவண்டி மூலம் | லொறி மூலம் | கப்பல் மூலம |
|---|---|---|---|
| 1992 | 182.30 | 516.00 | 710.45 |
| 1993 | 263.20 | 534.20 | 758.21 |
| 1994 | 263.20 | 584.20 | 903.73 |
| 1995 | 263.20 | 583.65 | 954.51 |
| 1996 | 240.00 | 670.00 | 780.00 |

(2) மிகவும் திறமையான நகர்த்தல் அமைப்பைத் திணைக்களம் மேற்கொண்டமையால் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதில் எதுவித இடையீடுகளும் ஏற்படவில்லை.

(3) சகல வழங்கீட்டு நிலையங்களிலிருந்தும் உணவுக் கையிருப்புப் பற்றிய தகவல் நாள்தோறும், வாரந்தோறும், மாதந் தோறும் சேகரிக்கப்பட்டு கையிருப்பு மட்டங்கள் பற்றாதிருக்குமிடத்து குறைநிரப்பு நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படுகிறது.

(4) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் (சீ. ஜீ. ஈ. எஸ்) உதவியுடன் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கான வழங்கல்கள் கையாளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீ. ஜீ. எஸ் மூலமான வடக்குக் கிழக்கிற்கான வழங்கல்கள்**

| ஆண்டு | கோதுமை மாவு | அரிசி |
|---|---|---|
| 1992 | 38,313 | 18116 |
| 1993 | 28,614 | 24447 |
| 1994 | 48,080 | ## |
| 1995 | 52,190 | ## |
| 1996 | 54,128 | |

##சீஜீஎஸ் மூலம் வழங்கப்பட்டன.

**உணவுத் திணைக்களக் களஞ்சியத்திலிருந்து எடுக்கப்பட்ட கோதுமை மாவு**

| ஆண்டு | தொகை (மெ. தொ) |
|---|---|
| 1991 | 536,618 |
| 1992 | 576,090 |
| 1993 | 601,328 |
| 1994 | 670,170 |
| 1995 | 737,437 |
| 1996 | 694,397 |
| 1997 ஜுன் வரை | 294,045 |

(5) 1994 இன் இறுதியில் ஏற்பட்ட மாவின் விலைக் குறைப்புடன் அச்சுப் பாண் ஒன்றின் விலை 3.50 ரூபாவாகக் குறைந்தது. 1994, 1995 இல் மாவின் நுகர்வு அதிகரித்ததற்கு இது குறிப்பிடத்தக்க ஏதுவாயிற்று. கீழ்த் தரப்பட்ட தரவுகள் இதனைக் காட்டுகிறது.

**தனி நபரின் கோதுமை மாவு நுகர்வு**

| ஆண்டு | பிரமாணம் கிலோவில் |
|---|---|
| 1991 | 25 |
| 1992 | 31 |
| 1993 | 32 |
| 1994 | 34 |
| 1995 | 41 |
| 1996 | 35 |

(6) எப்படி இருப்பினும் 1995 இன் பிற்பகுதியில் கோதுமை விலைக்கான உதவு தொகையில் ஒரு பகுதி அளவை வாபஸ்பெற அரசு எடுத்த தீர்மானம் (கோதுமை மாவின் மொத்த விலையை 13. 10. 95 முதல் 9.70 இலிருந்து 8.35 ரூபாவாகக் குறைந்தது), உதவு தொகையால் உருவாக்கப்பட்ட நெறி பிறழ்வைத் திருத்தவும் நெல்லின் விலை இறக்கத்தை ஓரளவுக்குத் தடுக்கவும் இதுவோர் வரவேற்கத்தக்க மாற்றமாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோதுமை மாவு, பாண் என்பவற்றின் விலை மாற்றங்கள்.**

செயற்பாட்டு கோதுமை மாவு

| தினம் | வழங்கும் இடத்தில் | மொத்த | சில்லறை | பாணின் விலை |
|---|---|---|---|---|
| | கிலோகிறாம் | கிலோகிறாம் | கிலோகிறாம் | 450 சிறாம் |
| 01. 01. 90 | 10.75 | 11.05 | 11.50 | 4.30 |
| 08. 02. 90 | 11.45 | 11.80 | 12.25 | 4.60 |
| 26. 03. 90 | 12.35 | 12.70 | 13.15 | 4.90 |
| 28. 05. 90 | 13.45 | 13.80 | 14.25 | 5.35 |
| 29. 12. 90 | 12.45 | 12.80 | 13.25 | 4.90 |
| 10. 01. 91 | 11.45 | 11.80 | 12.25 | 4.50 |
| 01. 10. 92 | 10.95 | 11.30 | 11.75 | 4.50 |
| 12. 06. 93 | 12.30 | 12.65 | 13.10 | |
| 03. 10. 93 | 12.40 | 12.75 | 13.20 | கட்டுப்பாட்டு |
| 01. 11. 93 | 12.50 | 12.85 | 13.30 | |
| 01. 07. 94 | 11.00 | 11.35 | 11.80 | |
| 29. 08. 94 | 6.65 | 7.00 | 7.45 | விலை |
| 22. 09. 95 | 7.55 | 7.90 | 8.35 | |
| 13. 10. 95 | 8.90 | 9.25 | 9.70 | |
| 17. 11. 95 | 11.15 | 11.50 | 11.95 | |
| 19. 04. 96 | 11.65 | 12.00 | 12.45 | |
| 20. 07. 96 | 13.15 | 13.50 | 13.95 | |
| 25. 08. 96 | 16.15 | 16.50 | 16.95 | |
| 10. 08. 97 | 18.15 | 18.50 | 18.95 | அகற்றப்பட்டது |

**உணவு ஆணையாளர் திணைக்களத்தின் அடுக்களை, வெதுப்பகம் பகுதி**

(1) நுகர்வோர்க்குச் சத்து நிறைந்த முழுமையான உணவை வழங்கத் திணைக்களம் ஒரு அடுக்களையையும் வெதுப்பகத்தையும் பராமரிக்கிறது. சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் கீழிருந்த இப்பகுதி 1990 இல் உணவு ஆணையாளர் திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டது.

(2) அரிசி, சோயா, குரக்கன் (விரல் தினை) போன்ற திணைத்தோன்றல்களின் மாக்களைக் கொண்டு போஷாக்கு மிக்க பாணைத் தயாரிக்கவும், வெதுப்பகக் கைத்தொழிலில் உள்ளூர் மக்களைப் பயிற்றுவிக்கவும் எவ். ஏ. ஓ. நிறுவனத்தின் வெளிநாட்டு நிதி உதவியுடன் ஒரு புதிய வெதுப்பகம் தாபிக்கப்பட்டது.

(3) குரக்கன், சோயா, அரிசிமாக் கலவை கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு வரையறைத் தொகை பாண் விற்பனை நிலையங்கள் மூலமும் நடமாடும் அலகின் மூலமும் விற்கப்படுகிறது.

(4) வெதுப்பகத் தொழிலில் ஈடுபட்டுள்ள உள்ளூர் இளைஞர்களைப் பயிற்றும் திட்டம் ஒன்றை திணைக்களத்தின் அடுக்களை வெதுப்பகப் பகுதி ஆரம்பித்துள்ளது. இத் திட்டத்திற்கு அவுஸ்திரேலிய அரசும் இலங்கையிலுள்ள அவுஸ்திரேலியா உயர் ஸ்தானிகரும் நிதி வழங்கினர். இத் திட்டத்தின் கீழ் முப்பது (30) இளைஞர்கள் 1995/1996 காலப்பகுதியில் பயிற்றப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) கோதுமை மாவை அடிப்படையாகக் கொண்டு பாண்டங்களைக் கொழும்பில் உற்பத்தி செய்யும் பாரிய அலகுகளில் ஒன்றாக இது விளங்குகின்றது. தினமும் சராசரியாக 600, 7000 பாண்களும் பணிஸ், கேக், பேஸ்றீஸ் போன்றவை 5000 உம் இங்கு தயாரிக்கப்படுகிறது. பொது வைத்தியசாலை, துறைமுக அபிவிருத்திச் சபை, இலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை, இலங்கை பொலீசு, மற்றும் 20 தனியார் துறை நிறுவனங்களுக்கும் இத் தயாரிப்புக்கள் வழங்கப்படுகின்றன.

(6) தரமான வெதுப்பகப் பாண்டங்களைத் தயாரிக்கவும், அவற்றை நியாயமான விலைகளில் அவற்றைச் சந்தைப் படுத்துவதற்கம் இவ் வெதுப்பகம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

வெதுப்பகத்தின் செயற்திறத்தை மேம்படுத்தும் நோக்கில் 1996 இல் 1.5 மில்லியனிற்கு ஒரு புதிய டீசல் வெதுப்பு உலை கொள்வனவு செய்யப்பட்டது. இந்த உலையின் சாதாரண கொள்வனவு 300 பாணும், பல வேறுவகை வெதுப்பகத் தயாரிப்புகளுமாகும். இந்த உலை திரவ எரிபொருளைப் பயன்படுத்துவதால் விறகின் பாவனை குறைந்துவிட்டது. பாவனையில் உள்ள விறகைப் பயன்படுத்தும் உலைகளுடன் ஒப்பீடாக இந்த உலையில் உஷ்ண நிலையைச் செவ்வனே கட்டுப்படுத்தக்கூடியதாக இருப்பதால் சேதங்களும் பழுதுகளும் குறைவாக்கப்பட்டுள்ளன.

(7) அடுக்களைப்பகுதி தினந்தோறும் 400 வரையிலான மதிய போசனப் பொதிகளைத் தயாரிக்கிறது. கொழும்பு நகரத்திலும் அதைச்சார்ந்த பகுதிகளிலும் ஏற்படும் வெள்ளம், ஊரடங்கு போன்ற திடீர் நிகழ்வுகளுக்கு ஈடுகொடுக்கும் பொருட்டு இந்த அடுக்களையும் வெதுப்பகமும் பேணப்படுகிறதே அன்றி இலாபம் ஈட்ட அல்ல.

(8) சராசரியாக இந்த அடுககளை, வெதுப்பக அலகு மாதாந்தம் அண்ணளவாக தற்போது 100,000 ரூபாவை மொத்த இலாபமாகப் பெறுகிறது. வருடாந்த இலாபங்கள் வருமாறு.

| ஆண்டு | இலாபம் | |
|---|---|---|
| 1992 | 352,300.00 | (நிகர) |
| 1993 | 14,170.00 | (நிகர) |
| 1994 | 874,674.49 | (நிகர) |
| 1995 | 11,153,216.97 | (நிகர) |
| 1996 | 17,006.41 | (நிகர) |
| 1997 | 700,000.00 | (மொத்த) |

நட்டத்தில் இயங்கிவந்த வெதுப்பகம் 1992 முதல் வருடத்திற்கு வருடம் இலாபத்தைக் காட்டத் தொடங்கியது. திணைக்களம் நிறுவனத்தின் அபிவிருத்திக்கு அதிக பணத்தைச் செலவிட வேண்டி இருந்ததால் 1996 இன் இலாபம் குன்றியது. ஊழியர்களின் சம்பளத்தை 35% ஆல் அதிகரித்தது. இயந்திரங்களைத் திருத்தியது, நீர்வினியோக அமைப்பை மேம்படுத்தியது என்பன இவ்வாண்டின் முக்கிய செயற்பாடுகளிற்சில என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) விசேட சேவை.

(1) தரக் கட்டுப்பாடு

(1) நாறாஹேன்பிட்டியில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலகு உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்களின் தர நிர்ணயங்கள் மீது அறிக்கை சமர்ப்பித்து அவை மனித நுகர்விற்கு ஏற்றவையா என்பது பற்றிய சான்றுகளையும் வழங்குகிறது. பூச்சி புழுக்கள் அரிசி, கோதுமை, மாவு, பருப்பு வகைகளைத் தாக்குவதைத் தடுக்கத் தேவையான சகல உபகரணங்களுடன் கூடிய புகையூட்டு பிரிவொன்று தரக்கட்டுப்பாட்டுப் பகுதியின் கீழ் இயங்குகிறது.

(2) வருடா வருடம் பொறுப்பேற்றுப் புகையூட்டப்பட்ட அரிசி, மாவு, கோதுமை அரிசி, ரவை, பருப்பு வகைகள் போன்ற உணவு வகைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பிட்டுள்ளன. உணவுத் திணைக்களத்தின் களஞ்சியங்களுக்கு மேலாக பிற தனியார் அரச நிறுவனங்களின் அரிசி, மாவு, பருப்பு வகைகளும் கொடுப்பனவுகளின் மேல் புகையூட்டப்பட்டன.

| ஆண்டு | தொகை (மெ. தொன்) | ஈட்டிய வருமானம் (ரூபா) |
|---|---|---|
| 1991 | 256,035 | 71,868,40 |
| 1992 | 262,093 | 3,873,221.70 |
| 1993 | 424,151 | 5,533,529.60 |
| 1994 | 36,866 | 12,041,420.60 |
| 1995 | 101,383 | 2.969,277.44 |
| 1996 | 51,075 | 1,108,977.00 |
| 1997 ஜுன் வரை | 25,133 | 916,538.00 |

(2) சத்துணவுத் திட்டம்

(1) மாவுடன் முழுமையான சத்தூடகங்களைக் கலந்து வலுப்படுத்துவது சம்பந்தமாக இத்திணைக்களம், திட்டமிடல், இன அலுவல்கள், தேசிய ஒன்றியைப்பு அமைச்சின் சத்துணவு அலகுடன் இணைந்து செயலாற்றியது.

(2) கோதுமை மாவில் இரும்புச் சத்து ஊட்டுவது பற்றிச் செயற்பட நியமிக்கப்பட்ட நிர்வாகசபையில் உணவு ஆணையாளர் ஒரு அங்கத்தவராவார்.

(3) இரும்புச் சத்துக் குறைபாட்டின் காரணமாக மக்களுக்கு இரத்தச் சோகை நோய்கள் ஏற்படுவதற்கான காரணிகள் பற்றி ஆராய ஒரு முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்த ஒரு பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கோதுமை மாவில் இரும்புச் சத்தை ஊட்டுவதால் மக்களுக்கு ஏற்படும் விளைவுகளை ஆராய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்திற்கும் திட்ட நிலையங்களுக்கும் வலுவூட்டப்பட்ட கோதுமை மாவை நகர்த்த இத் திணைக்களம் உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சர்வதேச முகாமைத்துவங்களுடனான தொடர்பு.

(1) சில சர்வதேச உதவி நல்கு முகாமைத்தும நிலையங்களுடன் இத் திணைக்களம் மனமார்ந்த தொடர்புகளைக் கொண்டுள்ளது. இலங்கைக்க நல்கும் உதவிப் பங்கீடு பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்கும், உணவுத் தேவைகளைக் கணித்தற் பொருட்டும் ஐக்கிய இமெரிக்க விவசாயத் திணைக்களம், ஐ. அ. உதவி நல்கு பகுதி, ஐ. அ. கோதுமைக் கூட்டிணைப்புக்கள், முதலிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் உணவு ஆணையாளரைச் சந்திக்க வருகை தருகின்றனர். சார்க் உணவுப் பாதுகாப்புச் சபையிலும், உணவுச் சந்தைப்படுத்தல் முகாமைத்துவங்களின் கூட்டிணைப்பிலும் உணவு ஆணையாளர் அங்கத்தவராக இருக்கிறார். எவ். ஏ. ஒ. நிறுவனத்துடனும் திணைக்களம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

(2) சார்க் நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களினால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின்படி அங்கத்துவ நாடுகளின் இடுக்கண் தேவைகளின்போது கொடுப்பதற்கென உணவு ஆணையாளர் 4000 மெ. தொ அரிசியை வைத்திருக்க வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ளார். இத்தொகை பிணையாளர்களின் இடுக்கண் காப்புக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டிருப்பினும் அவை இதுவரை பயன்படுத்தப்படவில்லை.

(4) செயல் வெற்றிகள்.

உணவுத் திணைக்களத்தால் உணவு கப்பற் சரக்கு நிலையில் கையாளப் படும் போதும் களஞ்சியப் படுத்தி வைத்தருக்கும் போதும், நகாத்தும் போதும் நிகழ்ந்த ஒழுங்கீனங்களாலும் கொடுப்பனவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கம்போது இது தெளிவாக தெரிகிறது. 1990 ஆம் ஆண்டில் இத்தகைய இழப்புக்கள் தடுமாற்றத்தைத் தரக்கூடிய 232,391,012.85 ரூபாவாயிற்று. தகந்த முகாமைத்துவ முறைகளைத் திணைக்களம் கடைப்பிடிக்க வெகுவாகக் குறைக்க முடிந்தது.

| ஆண்டு | இழப்புக்கள் (ரூபா) | முந்திய வருடத்துடன் ஒப்பிடும் போது இழப்பில் % குறைவு |
|---|---|---|
| 1990 | 232,391,012.85 | |
| 1991 | 116,335,977.56 | 99.76% |
| 1992 | 39,680,900.36 | 193.11% |
| 1993 | 18,433,844.65 | 115.31% |
| 1994 | 9,680,470.80 | 90.42% |
| 1995 | 18,177,415.80 | 90.00% |

1990 ஆம் ஆண்டின் இழப்புடன் ஒப்புநோக்கும் போது
1993 ஆம் ஆண்டின் இழப்பு 92.17% ஆல் குறைந்தும்
1994 ஆம் ஆண்டின் இழப்பு 96% ஆல் குறைந்தும் காணப்பட்டன.
இழப்புக்கான காரணங்களிற் கவனம் செலுத்தி சட்ட ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் உடனடி நடவடிக்கைகள் எடுத்து, நெருங்கி மேற்பார்வை செய்து, திருந்திய கணக்கியல் முறைகளை மேற்கொண்ட மையாலும், குறைவுகள் இழப்புக்களைக் குறைக்கக் கூடியதாக இருந்தது. இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவீட்டு அலகுகள், நியமங்கள், சேவைகள் திணைக்களம்.

இலங்கையில் எடைஅளவியல்களுக்கான உச்ச நிறுவனம் ஒன்று இருத்தல் வேண்டும் என்ற வெகுநாளைய அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்;டு அலகுகள், நியமங்கள், சேவைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்தத் திணைக்களம் ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி ஏழாமாண்டு ஜனவரி முதலாம் திகதி நிறுவப்பட்டது.

இச் சட்டம்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள், சேவைகள் சட்டம் 1946 இன் எடைகள் அளவைகள் உரிமைக் கட்டளைகளின் மாற்றீடாகும். ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதுகளில் நிலவிய பொருளாதார நிலைகளுக்கு ஏற்புடைத்தாக இருந்த பழைய உரிமைக் கட்டளைகள் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளின் முடிவில் குறைபாடுகள் கொண்டவையாகக் காணப்பட்டன. எடைகள் அளவைகள் உரிமைக் கட்டளைகளை எடை அளவியல் பற்றிய மேலும் விளக்கமான சட்டங்களால் மாற்றீடு செய்தல் பற்றிய வேண்டும் என ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதில் கௌரவ வர்த்தக கப்பற்றுறை அமைச்சரால் முன்மொழியப்பட்ட பிரேரணையை அமைச்சரவை ஏற்றது. நாட்டின் தேவைகளை ஆய்வு செய்து கட்ட ரீதியான எடை அளவியல் சர்வதேச நிறுவனத்தின் (சஎஅசநி) சிபார்சுகளின் அடிப்படையிலான வரைச்சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அது ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி மூன்றின் முடிவில் தயார் நிலையில் இருந்தது. இருப்பினும் ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி நான்கின் முடிவிலேயே இது பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவாக முன்வைக்கப்பட்டது. இந்த மசோதா 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள், சேவைகள் சட்டமாக மாறிற்று. அது ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று ஏழு ஜனவரி ஒன்று முதல் செயற்படலாயிற்று.

இச்சட்டம் கீழ்க்காணும் விடயங்களைக் கட்டுப்படுத்தும்.

1. இலங்கையின் அளவீட்டு அலகுகளின் அமைப்பு சர்வதேச நிர்ணய (சநி) அளவெனச் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளல்.
2. அளவீட்டு அலகுகள், நியமங்கள், சேவைகள் திணைக்களம் எனப்படும் திணைக்களம் ஒன்றை நிறுவுதல்.
3. "தேசிய அளவைப் பரிசோதனை நிலையம்" ஒன்றை நிறுவுதல்.
4. இலங்கையில் அளவை நிர்ணயங்களை ஏற்படுத்தி அவற்றைப் பேணிப் பிரசித்தப்படுத்தல்.
5. சட்டத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள கருமங்களைச் செயற்படுத்த வேண்டிய நிர்வாக அமைப்பை வரையறை செய்தல்.
6. வர்த்தகத்திற் பயன்படுத்தப்படும் அளவு கருவிகளைப் பரீட்சிப்பதை கட்டளை உரிமை ஆக்கல்.
7. கைத்தொழில், மருத்துவம், பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்புத் துறைகளில் பயன்படுத்தப்படும் அளவு கருவிகளின் மதிப்பாய்வுகளை கட்டளை உரிமை ஆக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தன்னிச்சையாக அளவு கருவிகளை மதிப்பாய்வு செய்தல்.

9. சட்டத்தின் தண்டனைகள் பற்றிய பகுதிகளை அமுலாக்குவதன் மூலம் நுகர்வோரைப் பாதுகாத்தல்.

10. பொதிசெய்யப்பட்ட பாண்டங்களைக் கட்டுப்படுத்தல்

11. சட்டத்தின் கீழ் ஒரு நிதியத்தை ஏற்படுத்தல்

12. அளவு கருவிகளை விற்பவர்கள், உற்பத்தி செய்பவர்கள், திருத்துபவர்களைப் பதிவு செய்தல்.

13. அளவு கருவிகளின் அமைப்பு வடிவங்களை அங்கீகரித்தல்.

## 01. சநி அமைப்பிற்கான சட்டரீதியான அங்கீகாரம்.

வணிக நடவடிக்கைகளின் போது சகல பகுதியினராலும் பயன்படுத்தப்படும் அளவை அலகு அமைப்புக்களின் ஒருமைத்துவத்தின் தேவை எப்போதுமே எடை அளவியற் சரித்திரத்தின் முற்பகுதியில் அடையாளம் காணப்பட்டதுடன் அதுவே ஒரு அளவை அலகு அமைப்பினைத் தோற்றுவிப்பதற்கான மூல உந்துசக்தியாக அமைந்தது. ஐயப்பாடுகளை ஏற்படுத்தாத இசைவினைவுடைய அலகு அமைப்பின் தேவை கடந்த இரு சத வருட காலத்தில் விஞ்ஞான, கைத்தொழில் தேவைகளுக்குப் பெரிதும் வேண்டப்பட்டன. மேலும் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாகக் கைத்தொழில் உற்பத்தி, நிர்மாணவேலைகள், சுகாதாரம், பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற துறைகளிலும் இசைவினையுடைய அலகு அமைப்பொன்றின் தேவை வியாபித்தது. அத்தகைய அலகு அமைப்பிற்கான உலகளாவிய ஏகோபித்த தேவை சர்வதேச நிர்ணய அலகுகள் (சநி) எனப்படும் பலசாதகமான பண்புகளைக் கொண்ட ஒரு அமைப்பைச் சர்வதேசச் சமூகம் ஏற்கும்படி உந்தியது.

நடைமுறையில் இருந்த (பேரரசு) அமைப்புடன் இணையாக சநி அலகுகள் அமைப்பும் 1974 இல் இலங்கையிற் பயன்படுத்தப்பட்டது. தேசிய மெற்றிக் மாற்றச் சட்டத்தின் அமுலாக்கல் நிறுவனமான தேசிய மெற்றிக் மாற்ற அதிகாரசபையினால் இந்தப் பேரரசு அமைப்பு 1974 முதல் 1983 ஆன காலத்தில் அற்றுப் போக்கப்பட்டது. அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் பகுதி தேமெமாஅ இங்கு வேண்டிய பணிகளைப் புரிந்தன. எனினும் புதிய சட்டம் செயற்படும்வரை அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழ ஜனவரி முதற்தேதி வரை பேரரசு அலகு அமைப்பு சட்ட ரீதியான அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது.

பொதுவாக மெற்றிக் மயப்படுத்தும் திட்டம் வெற்றிநடை போட்டது. எனினும் இன்னும் பல முக்கிய துறைகளில் சட்ட ரீதியாக இனங்காணப்படாத அலகுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திணைக்களம் அத்தகைய பிரயோகங்களை இனங்கண்டு மெற்றிக் அல்லாத அலகுகளை இன்னும் பயன்படுத்தும் துறையினருடன் கலந்தாலோசித்து அவற்றை அகற்ற முனையும்.

## 02. அளவீட்டு அலகுகள், நியமங்கள், சேவைகள் திணைக்களத்தை நிறுவுதல்.

உள்ளக வர்த்தகத் திணைக்களத்தின் அளவைத் தரங்கள் சேவைகள் பிரிவின் அலுவலர் வளங்களைப் பயன்படுத்தி ஆயிரத்தித் தொளாயிரத்துத் தொண்ணூற்று ஏழு ஜனவரி முதலாம் திகதி இத் திணைக்களம் நிறுவப்பட்டது. புதிய சட்டத்தின் பாரிய செயற்பரப்பை நோக்கு மிடத்து சேவைகளின் தேவைகளுக்கு தற்போதைய அலுவலர்கள் எண்ணிக்கை போதுமானதெனக் கருதமுடியவில்லை. எனினும் அளவைத் தரங்கள் சேவைகள் பிரிவின் தொடர்ச்சியான சேவைகள் ஈட்டப்பட்டுள்ளன. படிப்படியான முன்னேற்றத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. தேசிய அளவைப் பரிசோதனைக் கூடத் தாபனம்.

எடை அளவியல் விஞ்ஞான நீதிமயத் துறைகளுக்குத் தேசிய அளவைப் பரிசோதனைக் கூடமே கேந்திர நிறவனமாக அமைகிறது. நீதித்துறை ஏற்கும் எல்லா அலகுகளின் மூலத் தரங்கள் இந்த நிறுவனத்திற்தான் பேணப்படல் வேண்டும். தரங்களைப் பேணிப் பரப்பும் வளமையான வழிவகைகள் பற்றிச் சட்டத்திற் பேசப்படுகிறது. தேசிய தரங்களைச் சர்வதேசத் தரங்களுடன் இணைப்பதன் மூலம் அவற்றை விஞ்ஞான, வர்த்தக, கைத்தொழிற் துறைகளின் அதிமுக்கிய தேவைகளுக்கு நகல் பண்ணக்கூடிய மூல அளவுகளை இந்த நிறுவனம் பேண இருக்கிறது. இந்தத் திணைக்களம் நிறுவப்பட்டதுடன் அதுவரை செயற்பட்டுவந்த அளவைத் தரங்கள் சேவைகள் பிரிவின் தரங்கள் பரிசோதனைக்கூடம் "தேசிய அளவைப் பரிசோதனைக் கூடம்" என்ற பெயரில் சட்ட ரீதியாக இயங்குகிறது. எனினும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கத்தக்க வழிமுறைகள் இன்னும் நிறுவப்படவேண்டி இருக்கின்றன. இது அடுத்த மூன்று வருடங்களின் முக்கிய பணியாக இருக்கும். இப் பணிகளைச் செவ்வனே செய்யக் குறிப்பிடத்தக்க அளவுவிஞ்ஞான வல்லுனர்களும் விசேட பயிற்சிகளும் வேண்டப்படுகின்றன. இத்தேவைகளின் அளவுகள் தற்போது மதிப்பிடப்படுகின்றன.

## 04. தேசிய அளவீடுத் தரங்களை நிறுவி, அவற்றைப் பராமரித்து வியாபிக்கச் செய்தல்.

தெசிய அளவீட்டுத் தரங்களை நிறுவுவதே தேசிய அளவைப் பரிசோதனைக் கூடத்தின் முக்கிய பணியாகும். விஞ்ஞானம் மற்றும் சட்டத் தேவைகளைத் திரிவு இன்றித் கடைப்பிடிக்கவேண்டின் இச் சட்டத்தில் வரைவிலக்கணம் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு அலகிற்கும் மூலத் தரங்கள் நிறுவப்படவேண்டியது அவசியமாகும். இவைபோன்ற எழுபது அலகுகள் இருக்கின்றன. அலகுகளின் பெருக்கங்களுக்கும் உபபெருக்கங்களுக்கும் தரங்கள் நிறுவப்படுவதுடன் அவற்றை நிரைப்படுத்தவேண்டியும் இருப்பது உண்மையிலேயே ஒரு பாரிய பணிப் பொறுப்பாகும். எனினும் பல உன்னத கைத்தொழில்மய நாடுகள் கூட இந்த நிலையை எய்தவில்லை. குறைந்த பட்சம் வர்த்தகம், கைத்தொழில், சுகாதாரம் சுற்றாடல் பாதுகாப்பு போன்ற முக்கிய துறைகளுக்கு வேண்டிய அலகுகளுக்காவது தரங்களையும் அளவை நிரைப்படுத்தல்களையும் நிறுவுவது மிகவும் அவசியமாகும்.

எடைகள், அளவுகள் ஒழுங்குச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மூலத் தரங்களே தொடர்ந்தும் அளவை அலகுகள், தரங்கள், சேவைகள் சட்டத்தின் கீழும் மூலத் தரங்களாகப் பயன்பட்டு வருகின்றன. நிறுவப்பட்ட தரங்களினதும் அவற்றின் மூலம் எய்திய அளவைச் செயல் வல்லமைகளும் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

### தேசிய தரங்கள் நிறுவனம்

| அளவுரு | | தற்போதைய தரங்கள் | தற்போது எய்தக்கூடிய வழுவாமை/ஐயப்பாட்டுநிலை |
|---|---|---|---|
| 1. | இயந்திரவியல் | | |
| | நீளம் மீ | சீமான் ஸ்டபிலைசர் ஹீ/நி லாசர் இன்பெரோ மீற்றர் | $1\times10^{-9}$ |
| | பிண்டம் கிகி | பீஜபீஎம் இல் பிண்ட மதிப்பாய்வு செய்யப்பட்ட முன்னோடி வடிவக் கில்லோ கிறாம் | $1\times10^{-8}$ |
| | அமுக்கம் பீஏ | துணை உயிர்திறமற்ற 30எம்பீஏ வரையிலான பாரத்தைப் பயன் படுத்தும் பரீட்சை | $5\times10^{-4}$ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | 200எம்பீர வரையிலான அமுக்கத்தை அளக்கக்கூடிய பரீட்சிக்கப்பட்ட மானிகளைப் பயன்படுத்தி | $3\times10^{-3}$ |
| செறிவு | தர ஹைட்றோமீட்டர்கள் | $1\times10^{-3}$ |

2. மின்னியல்

| | | |
|---|---|---|
| டீசீ வோல்ட்ஏஜ் | என்பீஎல் ஐக்கிய அரசுகளில் மதிப்பாயப்பட்ட 12 தரக் கலக் கொத்து வோல்ட்ஏஜ் தோற்றுவாயும் 1000வோ வரையிலான பகுப்புக் கருவியும் | $5\times10^{-6}$ $1\times10^{-5}$ |
| தடை ஆற்றல் | தரமான தடை அமைவுகள் 0.0001 ஓம் முதல் 1மெகா ஓம் வரை | $1\ 10^{-6}$ |
| "கப்பாசிற்றன்ஸ்" | தரங்கள் நிறுவப்படவில்லை மதிப்பாயப்பட்ட கப்பாசிற்றன்ஸ் மானிகள் மட்டும் பயன்படுகிறது | $1\ 10^{-6}$ |

### 06. முன்கூட்டியே பொதி ஆக்கல் கட்டுப்பாடு

முன்கூட்டிப் பொதி செய்யப்பட்ட பொருட்களைப் பரீட்சிப்பது பற்றி எடைகள், அளவுகள் ஒழுங்குச் சட்டத்தின் கீழ் முன்னேற்பாட்டு நிபந்தனைகள் எதுவும் இல்லை.

புதிய சட்டத்தில் இதற்கான முன்னேற்பாட்டு நிபந்தனைகள் உள. எனினும் சட்டத் தண்டனை நடவடிக்கைகள் எடுப்பதற்கு விபரமான விதிமுறைகள் தேவைப்படுகின்றன. சர்வதேச சிபார்சுகளின் அடிப்படையிலான விதிமுறைகள் இவ்வருடத்தில் முன்வடிவமைக்கப்பட்டுள்ளன.

### 07. வடிவமைப்பு அங்கீகாரத் திட்டம்.

அளவை கருவிகளின் வடிவமைப்பு அங்கீகாரத் திட்டம் இச்சட்டத்தின் ஒரு புதிய அம்சமாகும். சர்வதெச சட்டரீதியான அளவியல் நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்தைச் செயற்படுத்துவதே நோக்கமாகும். சர்வதேச சட்டரீதியான அளவியல் சிபார்சுகளின் அடிப்படையிலான விபர விதிமுறைகள் முன்வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

### 08. நிதியம்.

இச் சட்டத்தில் ஒரு நிதியத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள் உள. இச் சட்டம் சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு வேண்டிய நிதியை இந்த நிதியத்திலிருந்து பெற உதவும் வகையில் தேர்வாய்வுகள் மதிப்பாய்வுகளுக்கெனக் கிடைக்கும் நிதியில் அறுபத்தாறு சதவீதத்தை இந்த நிதியம் பெறமுடியும். இந்த நிதியத்திற்கான பிரேரணைகளும் மதிப்பீடுகளும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரத்தை எதிர்பார்த்து இருக்கிறது.

### 09. தேர்வாய்வுச் செயற்திட்டங்கள்.

தொடர்ச்சி அறாத வகையில் புதிய திணைக்களம் தேர்வாய்வுச் செயற்திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. ஜுலை மாதம் வரையில் தேர்வாய்வு செய்யப்பட்ட அளவை கருவிகளின் எண்ணிக்கையிலும் பண வரவிலும் 10% வளர்ச்சி காணப்பட்டதாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுப்பாய்வுகள் பகர்கின்றன. எடைகள், அளவீடுகள் ஒழுங்குச் சட்டத்தின் கீழ் இயங்கிய அளவீட்டு அலகுகள் நியமங்கள், சேவைகள் பிரிவு மற்றும் புதிய சட்டத்தின் கீழ் இயங்கிவரும் திணைக்களம் முதல் ஆறுமாதச் செயற்பாட்டுப் பெறுபேறுகளை ஒப்புநோக்காகக் கீழே காண்க.

**1990,1997 ஜுன் மாத முடிவு வரை அளவை கருவிகள் தேர்வாய்வுகள். மற்றும் கண்டுபிடிப்புக்கள்.**

**1990 முதல் 1996 வரை எடைகள் அளவீடுகள் ஒழுங்குச் சட்டத்தின் கீழ்**

| வருடம் | துப்பறியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை | இலச்சினை இடப்பட்ட உருப்படிகளின் எண்ணிக்கை | வரவு (ரூபா) |
|---|---|---|---|
| 1990 | 1046 | 1,333,697 | 3,721,117 |
| 1991 | 359 | 1,377,634 | 5,740,117 |
| 1992 | 361 | 1,442,032 | 5,928,024 |
| 1993 | 404 | 1,389,583 | 7,510,790 |
| 1994 | 243 | 1,254,490 | 7,006,911 |
| 1995 | 101 | 1,236,894 | 7,567,743 |
| 1996 | 366 | 1,432,584 | 7,421,801 |

1977 இல் அளவீட்டு அலகுகள், சேவைகள் சட்டத்தின் கீழ்

| | | | |
|---|---|---|---|
| 1997 | 131 | 824,572 | 4,866,054 |

ஜன-ஜுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க புத்தாக்குநர்களுக்கான ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு நிறுவப்பட்டு உள்நாட்டு, சர்வதேச வாணிப உணவு அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

இலங்கைப் புத்தாக்குநர்களுக்கான ஊக்குவிப்புக் கட்டளைச் சட்டத்தின் 10ம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளவாறு ஆணைக்குழுவின் நோக்கங்கள் பின்வருமாறு.

(அ) இலங்கைப் பிரஜைகள் புத்தாக்கம் புனைவதையோ சிருஷ்டிப்பதையோ ஊக்குவித்தல்.

(ஆ) புத்தாக்குநருக்குத் தொழில்நுட்ப நிதி, சட்டரீதியான உதவியளித்தல்.

(இ) இச் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆணைக்குழு மீது சுமத்தப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட சகல அதிகாரங்கள், தொழில்கள், கடமைகள் ஆகியவற்றைச் செய்தல் நிறைவேற்றுதல், பிரயோகித்தல்.

(ஈ) இப் பிரிவின் (அ) (ஆ) (இ) பந்திகளிற் குறிக்கப்பட்டுள்ள நோக்கங்களை எய்துவதற்குச் சாதகமாக அல்லது தேவையான ஏனைய நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் செய்தல்.

### ஆணைக்குழுவின் செயல் நிறைவேற்றம்.

1996 மே நடுப்பகுதி தொடக்கம் இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவைக் (இபுஆகு) உருவகித்துக் காட்டிய மேல்நோக்கிய வேலைத் தொகுதியிலுள்ள புதிய முயற்சிகளின் அறிமுகத்தையும் தரமான தொழிற்பாடுகளில் தொடர்ச்சியையும் இது உள்ளடக்கியது.

பொதுத் தொழிற்பாடுகள் பின்வருமாறிருந்தன.

1. இதுவரை காலமும் இபுஆ வினால் தாபிக்கப்பட்டு வந்த பாடசாலை முறையில் இளம் புத்தாக்குநர் கழகம்.

2. வேலைக் களங்கள் கருத்தரங்குகளைக் கொண்ட கல்விரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள்.

3. உதவி வழிகாட்டுதல் மூலம் புத்தாக்குநர்களுக்குத் திறந்து விடப்பட்ட சேவைகள்.

4. 1996 ஜனாதிபதி பரிசளிப்பு வைபவத்தையும் 1997 ஜனாதிபதி பரிசளிப்பு வைபவத்திற்கான முன்னீடான முயற்சிகள் மீது பின்பற்றிச் செல்லல்.

5. வெளிநாட்டுக் கண்காட்சிகள் உட்பட கண்காட்சிகளில் பங்கு பற்றல்.

6. மும்மொழிகளில் செய்திக் கடிதப் பிரசுரிப்பு மேம்பட்டுநின்ற பிரசுர வேலை.

7. இலங்கை ஆக்கத் தனியுரிமை விவரக்கொத்தின் பிரசுரம் மூலம் பொதுமக்களுக்கு ஆக்கத் தனியுரிமைத் தகவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறப்பட்ட மேல்நோக்கு புதிய முயற்சிகள், இபுக தொழிற்பாட்டு அடிப்படையின் விஸ்தரிப்பு, கண்டுபிடிப்புகளை வர்த்தக மயமாக்குவதற்கான புதிய திசையமைப்பும், அமைச்சுக் கிடைப்பட்ட, பல் நிறுவன ஆலோசனைச் செயல் குழுவின் (ரிசிசி) அறிமுகமும். இவற்றைவிட பரந்த அடிப்படையி லான வரவு செலவிலும் இபுஆ நிதியின் உருவாக்கத்திற்கான ஆரம்ப உடன்படிக்கைப் பேச்சிலும் விளைந்த முயற்சிகளே இவை.

இபுஆ அதன் தொழிற்பாடுகளை தெளிவாகவும் வழிகாட்டுதலுடனும் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் உதவும் வகையில் இபுஆ.குழுவிற் கான சட்டத்தை அளிப்பதற்கு அடிப்படை முன்தேவையாக அதன் கொள்கையை ஒன்று சேர்த்தலேயென இபுஆ உணர்ந்தது. இதன் விளைவாக 1997 யின் போது இபுஆ தனது கொள்கையைத் தெளிவுபடக் கூறியது - இதனை வரவு செலவுத் திட்டத்தினைக் கையோடு கொண்ட நிகழ்ச்சித் திட்டத் தொகுதி உடனடியாக தொடர்வதாயுள்ளது. செயற்படுத்தப்பட்டு வரும் மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு.

1. "தொடர்பு நிலையங்களின்" தொழில்களை தேர்ந்தெடுக்கப் பட்ட இளம் புத்தாக்குநர் கழகங்களுடன் சேர்தல்.

2. புத்தாக்கங்களுக்கான விளம்பரம்

3. தொழில்நுட்ப கூட்டிணைப்புக் குழு.

4. இபுஆ சிறப்புத்திறமை குழாம்

5. இபுஆ செயற்பாட்டு நிதி

6. செலுத்தி முடியாதுள்ள புத்தாக்கங்களுக்கான வருடாந்த பரிசுகள்.

7. இபுஆ குழுவினால் வர்த்தகமயமாக்கல்

## நிறுவனக் கட்டிடம்.

இதுவே வேறானதொரு நிகழ்ச்சித் திட்டமாகக் காட்டுகிறது. அத்தகைய தன்மை இதுவரை காலமும் கள நிர்வாக முறை இன்றியும் அதன் உறுதியான நிலையை முன்னேற்றரீதியாக மேற்கொள்ளும் பணிகளில் கட்டம் கட்டமாக நிறுவ வேண்டியிருப்பதாலும் உருவாக்கப்பட்டது.

மேலேயுள்ளவாறு நிகழ்ச்சித் திட்டத்தினதும் கொள்கையினதும் வெற்றிகரமான விளக்கக்கூற்று இதுவரைகாலமும் கைகூடாத இபுஆ குழுவிற்கான விதிகள் ஒழுங்குவிதிகளின் உருவாக்கத்திற்கான முறைகளாகஇந்துள்ளன. நடைபெற்றுக் கொண்டு வருகின்ற ஒழுங்குவிதி மீதான செயற்பாடு, கௌரவ உள்நாட்டு, சர்வதேச, வாணிப, உணவு அமைச்சரின் அங்கீகாரத் தைப் பெற்ற பின்னர், 1998 முற் பகுதியில் கைக்கொள்வதற்கான இம் முழுநிறைவான பொருளடக்கம் இபுஆ குழுவிற்கான சாதனமாக அமையும்.

## நிறைவேற்றங்கள்.

பின்வருமாறிருந்த புதிது புனைதல்களின் முன்னேற்றம் தொடர்பான காட்சி மீது 1996 யில் இபுஆ குழுவின் தாக்கம் பல முனைகளிலிருந்தது. அவை பின்வருமாறு.

1. "தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில்" தொடர்பு நிலையங்கள்.

ஒவ்வொரு கல்விப் பகுதிக்கும் ஒரு தொடர்பு நிலையத்தை வைத்திருப்பதற்கு வடிவமைக்கப்பட்டது. இதன்படி, ஏறக்குறைய 225 தொடர்பு நிலையங்கள் தீவெங்கிலுமுள்ள அமைப்பில் இருக்கும். இது இபுஆ குழுவின் கீழ் நிர்வாக அமைப்பாக சேவையாற்றும் இதன் கீழான தொடர்பு மூன்று மடங்கானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. தொடர்பு நிலையமாக நியமனஞ் செய்யப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக்கும் இபுஆ குழுவிற்கும் இடையிலான தொடர்பு.

ii. இத்தகைய தொடர்பு நிலையங்களுக்கும் இணைக்கப்பட்ட பாடசாலைகளிலுள்ள பிற இனம் புத்தாக்குநர் கழகங்களுக்குமிடையில்.

iii. கிராம எல்லைக்குள் உள்ள புத்தாக்குநர்களுடன் தொடர்பு இதன் விளைவாக இத்தகைய புத்தாக்குநர்கள் இபுஆ குழுவை அடையவும் நேர் எதிர்மாறாக அடையவும் உதவும்.

## 2. இபுஆ சிறப்பறிவாளர் தொகுதி.

வெவ்வேறு விஞ்ஞான துறைகளிலிருந்தான சிறப்பறிவாளர் பட்டியலே இது. பதிவுசெய்யப்பட்ட தொகுதியினராக அவர்கள் இருப்பதை புத்தாக்கம் ஒன்றினை ஏற்குந் தரம் அதன் மதிப்பிடுகையைத் தீர்மானிப்பதற்கு விரைவாக வெளிப்படுத்துவதற்கு உதவும்.

## 3. தொழில்நுட்ப ஒத்துழைப்புக் குழு (ஐரிசிசி)

நான்கு அமைச்சுக்களிலிருந்தும் பெயர் குறிப்பிட்டோர் அங்கத்தவராக உள்ள பல நிறுவனங்களிலிருந்தும் பிரதிநிதிகளை இக் குழு கொண்டுள்ளது.

1. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
2. கொழும்பு பல்கலைக்கழகம்
3. மொறட்டுவ பல்கலைக்கழகம்
4. இலங்கை நேர்ட் நிலையம்
5. இலங்கை மூலவளங்கள், சக்தி விஞ்ஞான அதிகாரசபை (நரெஸா)
6. ஆக்கவுரிமைகள் வியாபாரக் குறிகள் திணைக்களம்.
7. நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி கிளாக் நிலையம்
8. தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம்.

புத்தாக்கங்கள் முன்னேற்றுவதிலும் புத்தாக்குநர்களுக்கு ஊக்குவிப்புகளை வழங்குவதற்கும் தேவைப்பட்ட முழுச் சேவை வரிசை தொடர்பாக கருத்தளவில் ரிசிசி அடிப்படைப் பங்கினை வகிக்கிறது. வர்த்தக ரீதியான பெறுமதியுடனான நிறைவேற்றங் களையும் மூலமுன்மாதிரிகளையும் விளைவிக்கும். தேர்ந்தெடுக்கப் பட்ட புத்தாக்கங்களுக்கு சேவையாற்றும் நோக்கத்திற்கென பரந்துபட்டதும் ஆராய்ச்சி ஆய்வுகூடங்களிலுள்ள மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்கள், வேலைக்களங்கள் சிறப்பறிவுத்திறம் உபகரணம் ஆகியவற்றை ஏற்படுத்தும் முறையே ரிசிசி.

## 4. வர்த்தக மயமாக்கல்.

1996 யில் இத் துறையில் பின்வருவனவற்றைப் பெறவதற்கு இபுஆ குழுவினால் முடியுமாகவிருந்தது.

i. விவசாய முன்னேற்றங்களுக்கான உலர் தட்டின் மூல முன்மாதிரியைப் பூர்த்தி செய்தல்.

ii. உலர் தொகுதி உயிர் மாற்றியல் சீரணிப்பு தொழில்நுட்பவியலைப் பெருக்குவதற்கு வடமேற்கு மாகாணம், வட மத்திய மாகாணத்தில் மாகாண நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலேயுள்ள (1) வர்த்தகரீதியாக தனித்திருக்கக்கூடிய பொருளுக்கான உதாரணமாக இருக்குமிடத்து குறைந்தவிலை கொண்ட உர பதிலீடு உயர்ந்த தர இயற்கை உரத்திற்கான தேசிய தேவைக்கு சேவையளிப்பதாக உள்ளது. இபுஆ குழுவினால் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்ட இரு நிகழ்ச்சித் திட்டங்களும் கல்விரீதியான விளக்க விளைவுக்கு அதிக தகுதியைக் கொடுக்கின்றது. தொழில்நுட்பவியலைக் கையாளுவது மெதுவான ஒழுங்கான வேகத்திலிருந்தாலும், தொழில்நுட்பவியலைக் கையாளுவது உரத்தேவை தொடர்பாக விவசாய சமுகத்திற்கு அதிகளவு நன்மை கிடைக்கும் என்பதே எதிர்பார்ப்பாகும். ஆகவே இபுஆ குழுவினாலான இவ் முயற்சி தேசிய தேவையொன்றிற்கு சேவையளிக்கும் முதற் படியாவதுடன் ஒரு புறம் வெளிநாட்டு நாணயமாற்றில் பெருந்தொகையான பணத்தைச் சேமிப்பதற்கும் மறுபுறம் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் உரிய ஆற்றலைக் கொண்டதாயிருக்கும். பின்னையது விவசாய சமூகத்தினருக்கு வரவைப் பெருக்கும் முறையாகத் தன்னைக் காட்டுகின்றது.

மேற்கூறப்பட்ட விவரத்தின் பிரகாரம், இபுஆ 1996 யில் ஆரம்பித்த முயற்சிகள் மீது 1997 யிலும் தொடர்ந்து செயற்பட்டுள்ளது. ஆகவே 1996 நிறைவேற்றங்களை சர்வதேச புலமைச் சொத்து அபிவிருத்தியின் பிரதான ஓட்டத்துடன் இணைவதற்கு இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்லும் கருத்துள்ள முயற்சிகளைக் கருதலாம். நவீன அபிவிருத்தியும் நவீனமயமாக்கலும் இன்று புத்தாக்கங்களிலிருந்தும் புதுக் கண்டுபிடிப்புகளிலிருந்தும் அதிகளவு பலத்தைப் பெறுகின்றதென்பது பொதுவாகத் தெரிந்ததொன்றாகும். இப் போக்கிற்கு இலங்கையை இணைப்பதே இபுஆ வின் முயற்சிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 1994 | | 1995 | | 1996 | | 1997 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| 4000000.00 | 3032870.77 | 5000000.00 | 3667612.96 | 5000000.00 | 3993359'13 | 5000000.00 | 1765682.84 |
| 800000.00 | 486947.09 | 900000.00 | 179851.51 | 1200000.00 | 1134943'00 | 1000000.00 | 244862.10 |
| 4800000.00 | 3519817.86 | 5900000.00 | 3847464.47 | 6200000.00 | 5128302.13 | 6000000.00 | 2010544.94 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியாய வியாபார ஆணைக்குழு

நியாய வியாபார ஆணைக்குழு 1987 இன் 1 இல. நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பொதுமக்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் அல்லது செயற்படக்கூடிய வாய்ப்புள்ள ஏகபோக உரிமைகள், ஒன்றிணைப்புக்கள, போட்டி முறிப்பு நடவடிக்கைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தவும், தேசிய விலைக் கொள்கை ஒன்றை உருவாக்கி அதனை அமுல் செய்யவுமே இந்த நியாய வியாபார ஆணைக்குழு நிறுவப்பட்டது.

1987 இன் 1 ஆம் இல. நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் முதலில் 1990 இன் 46 ஆம் இல. கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தால் திருத்தப்பட்டபோது இந்த ஆணைக்குழுச் சட்டத்தின் 18 முதல் 26 வரையிலான பிரிவுகள் ரத்துச் செய்யப்பட்டன. எனினும் அதே சட்டத்தின் கீழ எந்த பொருளின் விலை உயர்வைச் சோதனை செய்யவும் அவை நியாயமற்றவையாகத் தென்படுமிடத்து போட்டியை ஊக்குவிக்க சுங்கவரிச் சிராக்கல்களை வர்த்தகத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சருக்குக் சிபார்சு செய்யவும் இந்த ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நியாய வியாபார ஆணைக்குழுவின் இரண்டாவது திருத்தம் 1993 இன் 57 ஆம் இல நியாய வியாபார ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தின் வாயிலாக நிகழ்ந்தது. இதன் பிரகாரம் ஒரு நபரின் அல்லது ஒரு கூட்டிணைப்பு நிறுவனத்தில் ஒன்றிணைப்பு நிலையை ஏற்படுத்தவோ உருவாக்கவோ முனையும் வகையில் அவற்றின் சொத்துக்கள், முதல்கள், பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்னதாக அவைபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

### ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்.

சந்தைமயமான பொருளாதாரச் சூழ்நிலைக்கு உந்து சக்தியாக இருக்கும் போட்டிமயமான வியாபபரச் சூழலை உத்தரவாதப்படுத்துவதே ஆணைக் குழுவின் முக்கிய குறிக்கோளாகும். போட்டியின் விளைவாக நுகர்வோருக்குத் தேவைப்படக்கூடிய சகல பொருட்களும் விரும்பிய அளவிலும், தரத்திலும், மிகவும் சாதகமான விலைகளுக்குக் கிடைக்கும். ஆணைக் குழுவின் குறிக்கோள்களாவன.

அ) பொது மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் அல்லது செயற்படக்கூடிய ஏகபோக உரிமை நிலைகளை ஆராய்ந்து அவற்றைக் கட்டுப்படுத்தல்.

ஆ) பொது மக்களின் நலன்களுக்கு எதிராக செயற்படக்கூடிய சாத்தியமுள்ள ஒன்றிணைப்புக்கள்/கொள்வனவுகளை ஆராய்ந்து கட்டுப்படுத்தல்.

இ) பொது மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்படக்கூடிய போட்டி முறிப்பு நடைமுறைகளை ஆராய்ந்து கட்டுப்படுத்தல்.

ஈ) கைத்தொழில் தயாரிப்புகளின் விலை மட்டங்களைப் பேணுதல்.

உ) குறிப்பிட்ட பண்டங்களுக்கு விலைகளை நிர்ணயித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழுவின் பணிகள்.

### 1. விலை மீளாய்வுகள்.

1990 இன் 46 ஆம் இல. கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின்படி எநித ஒரு பொருளின் விலையை மீணாயவும், விசாரணைகள் நடத்தவும் அந்த மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட பொருளின் விலை நியாயமற்றதென ஆணைக்குழு தீர்மானித்த போட்டியை ஊக்க இறக்குமதிகளுக்கு இடம் கொடுக்க வேண்டும் எனக் கருதுமிடத்து அப்பொருட்களின் இறத்குமதிஞக்கான சுங்கவரிச் சீராக்கல்களைச் சிபார்சு செய்து கௌரவ அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியும்.

### 2. விலைக் கட்டுப்பாடு.

1990 இன் 46 ஆம் இல. கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்படி உணவு, மருந்துச்சரக்கு வகைகள் போன்ற "குறிப்பிட்ட பொருட்களின்" விலைகளை நிர்ணயிக்கும்படி ஆணைக்குழு கேட்கப்படலாம்.

### 3. ஏகபோகம் பற்றிய ஆராய்வு

எந்த ஒரு பொருளின் மொத்தச் சந்தைப் பங்கின் 1/3 இற்குக் குறையாத சந்தைப்பங்குகளைக் கொண்ட நிறுவனங்கள் இருக்குமிடத்து அந்தப் பொருள்களை வழங்குவதில் ஒரு ஏகபோக நிலை உருவாகக் கூடும் என்று கருதப்படுதிறது. ஆணைக்குழுவினால் ஆராயப்பட வேண்டிய வெவ்வேறு பொருட்களுக்கான நியமிக்கப்பட்ட சதவீதங்களை வர்த்தகத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் வர்த்தமானியில் பிரசுரிக்கவேண்டும் என்பது நீதித்துறையின் ஒரு கட்டாய தேவையாகும். ஏகபோகங்கள் பற்றி ஆராய்வதற்கென 47 வகைப் பாண்டங்களும் சேவைகளும் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கான நியமித்த சதவீதங்கள் வர்த்தமானப் படுத்தப்பட்டுள்ளன.

### 4. ஒன்றிணைப்பு, கைப்பற்றல் பற்றிய ஆராய்வு

சட்டத்தின் வரைவிலக்கணங்களுக்கு அமைய ஒரு ஒன்றிணைப்பு நிலையை ஏற்படுத்தும் எல்லா ஒன்றிணைப்பு/கைப்பற்றல்கள் பற்றியும் எழுத்துமூலம் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பது ஒரு கட்டாய தேவை யாகும். ஆராய்வுகளின் பின் இந்த உத்தேச ஒன்றிணைப்பு பொதுமக்களின் நலனுக்கு எதிராகச் செயற்படமாட்டாது எனக் காணும் ஆணைக்குழு அதனை அங்கீகரிக்கக்கூடும்.

### 5. போட்டி முறிப்புக்கள் பற்றிய ஆராய்வு

ஒரு நபரோ அவரைச் சார்ந்தவர்களோ வர்த்தக நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்கும் வழிவகைகள் தனித்தோ, கூட்டாகவோ இலங்கையில் பொருட்களின் உற்பத்தி, வழங்கல், கைப்பற்றல் அல்லது சேவைகளின் வழங்கல், கைப்பற்றல் ஆகிய செயற்பாடுகளில் போட்டி களை மட்டுப்படுத்தும், திரிபுபடுத்தும், தடைசெய்யும், அல்லது அப்படிப்பட்ட நோக்கினதாக, அல்லது அப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்த வல்லனவாக இருக்கும், நிலையில் போட்டி முறிப்பு நிலை நிலவுவதாகக் கருதப்படும். இச் சட்டத்தின் உத்தேச திருத்தங்களுடனும், நியாய வியாபார ஆணைக்குழு (நிவிஆ), உள்நாட்டு வர்த்தக திணைக்களத்துடன் (உவதி) இணைவதுடனும் இந்த நிலைகள் மேலும் விருத்தி அடையயும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது நடக்காததால் இதன் 9 ஆம் வருடத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. பொது மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் ஏகபோகங்கள் ஒன்றிணைப்புக்கள், போட்டி முறிப்பு நடவடிக்கைகள் என்பவை எதிர்பார்க்கும் தாக்கங்களை ஒட்டுமொத்தமாக பொருளாதாரத்தில் ஏற்படாவண்ணம் ஆராய்ந்து கட்டுப்படுத்துவதே ஆணைக்குழுவின் முக்கிய பொறுப்பாகும்.

**ஆணைக்குழுவின் செயற்பாடுகள் - 1996 ஆம் ஆண்டு.**

**6.1 விலைக் கட்டுப்பாடு**

அரசு தொடர்ந்தும் நட்புடைமைச் சந்தைப் பொருளாதாரத்தைக் கடைப்பிடித்ததுடன் விலைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொருட்களில் எந்தவித மாற்றமும் இருக்கவில்லை. ஆய்வுக்கான காலத்தில் புதிதாக ஒரு தயாரிப்பும் விலைக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படவில்லை எனினும் மருந்துச்சரக்கு வகைகள் தொடர்ந்தும் விலைக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தன. 77 இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட, மற்றும் 07 உள்நாட்டு உற்பத்தியாளரால் தயாரிக்கப்பட்ட 5000 மட்டிலான மருந்துச் சரக்கு வகைகளின் விலைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்க/மாற்றப்பட்டன. நாட்டின் மருந்துச் சரக்குத் தேவைகளில் அண்ணளவாக 40%ஐ அரசாங்க மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்கிறது. உச்சச் சில்லறை விலைகளை நியமிப்பதில் உடன்பாடு காணப்பட்ட (165%) வாய்ப்பாடு மாற்றமின்றி நிலைபெற்றது. அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட பாதுகாப்பு அறவீட்டு உயர்வால் மட்டுமே ஒரு மாற்றம் செய்யப்பட்டது. தனியார்துறை இறக்குமதியாளர்களின் விலைகள் மேற்கண்ட வாய்ப்பாட்டின் அடிப்படையில் நியமிக்கப்பட்டன. அரசாங்க மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 48 வகைப் பொதுப்பாவனை மருந்துகளின் விலைகளைக் குறைத்து நுகர்வோருக்கு நன்மை செய்தது. அமகூ ஏனைய இறக்குமதியாளர்களுக்கு ஒரு முக்கிய போட்டியாளராகச் செயற்பட்டது.

விலை மாற்றங்களுக்கு நாணயப் பெறுமதி மாற்றங்களும் சீ. ஐ. எவ் விலை மாற்றங்களுமே முக்கிய காரணங்களாகும்.

| விலைக் கட்டளை இல | வர்த்தமானி மேற்கோள் | மருந்துத் தொகை |
|---|---|---|
| 20/02/96 இன் 01/96 | 20/02/96 இன் 911/03 | 124 |
| 20/02/96 இன் 02/96 | 22/02/96 இன் 912/11 | 71 |
| 05/03/96 இன் 03/96 | 07/03/96 இன் 913/10 | 74 |
| 08/03/96 இன் 04/96 | 15/03/96 இன் 914/22 | 88 |
| 11/03/96 இன் 06/96 | 16/03/96 இன் 914/23 | 52 |
| 18/03/96 இன் 07/96 | 19/03/96 இன் 915/03 | 105 |
| 25/03/96 இன் 08/96 | 27/03/96 இன் 916/10 | 46 |
| 26/03/96 இன் 09/96 | 28/03/96 இன் 916/14 | 47 |
| 10/04/96 இன் 10/96 | 16/04/96 இன் 919/04 | 71 |
| 11/04/96 இன் 11/96 | 16/04/96 இன் 919/05 | 41 |
| 15/04/96 இன் 12/96 | 16/04/96 இன் 919/06 | 27 |
| 26/04/96 இன் 13/96 | 29/04/96 இன் 921/01 | 14 |
| 29/04/96 இன் 14/96 | 30/04/96 இன் 921/04 | 84 |
| 15/05/96 இன் 15/96 | 20/05/96 இன் 924/01 | 80 |
| 16/05/96 இன் 16/96 | 21/05/96 இன் 924/06 | 84 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 03/06/96 இன் 17/96 | 06/06/96 இன் 926/17 | 60 |
| 18/06/96 இன் 18/96 | 24/06/96 இன் 929/04 | 83 |
| 21/06/96 இன் 19/96 | 25/06/96 இன் 929/05 | 126 |
| 27/06/96 இன் 21/96 | 01/07/96 இன் 930/06 | 75 |
| 09/07/96 இன் 21/96 | 11/07/96 இன் 931/11 | 54 |
| 16/07/96 இன் 22/96 | 19/07/96 இன் 932/14 | 59 |
| 24/07/96 இன் 23/96 | 31/07/96 இன் 934/09 | 60 |
| 11/07/96 இன் 24/96 | 17/06/96 இன் 928/02 | 03 |
| 16/07/96 இன் 25/96 | 01/08/96 இன் 934/11 | 95 |
| 15/08/96 இன் 26/96 | 19/08/96 இன் 937/04 | 62 |
| 19/08/96 இன் 27/96 | 22/08/96 இன் 937/12 | 52 |
| 02/09/96 இன் 28/96 | 06/09/96 இன் 939/32 | 45 |
| 06/09/96 இன் 29/96 | 10/09/96 இன் 940/08 | 103 |
| 12/09/96 இன் 30/96 | 17/09/96 இன் 941/05 | 49 |
| 27/09/96 இன் 31/96 | 03/10/96 இன் 943/21 | 80 |
| 27/09/96 இன் 32/96 | 22/08/96 இன் 937/12 | 73 |
| 01/10/96 இன் 33/96 | 05/10/96 இன் 943/28 | 43 |
| 18/10/96 இன் 34/96 | 25/10/96 இன் 946/12 | 154 |
| 28/10/96 இன் 35/96 | 30/10/96 இன் 947/09 | 90 |
| 29/10/96 இன் 36/96 | 31/10/96 இன் 947/16 | 56 |
| 30/10/96 இன் 37/96 | 01/11/96 இன் 947/18 | 83 |
| 31/10/96 இன் 38/96 | 07/11/96 இன் 948/17 | 106 |
| 15/11/96 இன் 39/96 | 07/11/96 இன் 948/18 | 66 |
| 11/11/96 இன் 40/96 | 14/11/96 இன் 949/15 | 20 |
| 20/11/96 இன் 41/96 | 26/11/96 இன் 951/10 | 98 |
| 26/11/96 இன் 42/96 | 18/11/96 இன் 951/14 | 96 |
| 04/12/96 இன் 43/96 | 09/12/96 இன் 953/02 | 95 |
| 27/12/96 இன் 44/96 | 06/01/97 இன் 957/02 | 104 |
| 17/01/97 இன் 45/96 | 20/01/97 இன் 959/01 | 66 |
| 27/01/97 இன் 46/96 | 30/01/97 இன் 960/16 | 119 |
| 30/01/97 இன் 47/96 | 06/02/97 இன் 961/09 | 82 |
| 31/01/97 இன் 48/96 | 06/02/97 இன் 961/09 | 33 |
| 07/02/97 இன் 49/96 | 10/02/97 இன் 962/05 | 91 |
| 10/02/97 இன் 50/96 | 11/02/97 இன் 962/06 | 94 |
| 13/02/97 இன் 51/96 | 18/02/97 இன் 963/06 | 29 |
| 14/02/97 இன் 52/96 | 19/02/97 இன் 963/11 | 46 |
| 17/02/97 இன் 53/96 | 20/02/97 இன் 963/13 | 96 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6:2 மருந்து வகைகளின் விலைக் கட்டுப்பாடு நீக்கல்.**

அமைச்சரவையின் பணிப்புரைக்கமைய கீழ்க்காணும் உள்நாட்டில் தயாரிக்கப் படும் பிரதான மருந்து வகைகளின் விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதுடன் அவை 01/02/96 இன் 05/96, 11/06/96 இன் 24/96 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்டன.

| உற்பத்தியாளர் | மருந்துவகை பற்றிய விபரம் |
|---|---|
| அஸ்டன் லிமீட்டெட் | கொடியீன் பொஸ்பேட் 25 மிகி/5மிலி சிரப்<br>குளோறோபினிராமைன் 2 மிகி/5மிலி சிரப் (ஃபெனமைன்) |
| அஸ்டன் லிமிட்டெட் | ஹைறட்றோகோட்டிசோன் 1% களிம்பு (அஸ்டோகோட்)<br>கொற்றிமொக்ஸ்சாசோல் 480 மிகி. வில்லைகள் (அஸ்றிம்)<br>கொற்றிமொக்ஸ்சாசோல் 120 மி. கி<br>ஓறல் சஸ்பென்சன் (அஸ்றிம்) |

**6:3 வாழ்க்கைச் செலவுக் குழு.**

**(உணவுப் பாதுகாப்புக் குழுவின் கூட்டங்கள்.)**

ஆணைக்குழு இக் கூட்டங்களுக்குத் தொடர்ந்தும் சமூகமளித்து உள்சாட்டு வெளிநாட்டுச் சந்தைகளில் ஏற்பட்ட சீனி விலை மாற்றங்களைப் பற்றிய வாராந்த அறிக்கைகளைச் சமாப்பித்தது. அமைச்சில் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் நடக்கும் இக்கூட்டங்களில் தலைவர் தாமாகவே பங்குபற்றினார்.

காய்கறிகளின் அசாதாரணமான விலை உயர்வுகள் பற்றி ஆராயும்படி உணவுப் பாதுகாப்புக்குழு ஆணைக்குழுவிடம் கேட்டுக் கொண்டது.

குறைவாகவே உள்ள வளங்களைப் பயன்படுத்தி ஆணைக்குழு மரக்கறிகளின் விலை நுகர்ச்சிகள் பற்றிய ஆய்வொன்றை நடத்தியது. பொருளாதாரத் துறையினரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**7. 1987 இன் 01 ஆம் இல. நியாய வியாபார ஆணைக்குகுச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட விசாரணைகள்.**

**7.1 ஏகபோக உரிமை விசாரணைகள்**

**7.1.1 கோழித்தீனி.**

முன்னைய பிரதான பொருளாதாரவியலாளரின் ஆராய்வுகளின்படி இலங்கை கிறெயின் எலிவேற்றோ்ஸ் லிமி. தனது ஏகபோக உரிமையை துர்ப்பிரயோகம் செய்ததென முடிவெடுக்கப் போதுமான சாட்சியங்கள் இல்லையென்று 55% பங்கைக் கைப்பற்றுவதற்கு முன் 1991 டிசம்பர் 13 இல் ஆணைக்குழு செய்த ஆணையில் நடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள், குறிப்பாக உள்ளூர் சோளப் பயிரீட்டில், தரங்கள், விலைமட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. அறிக்கையும் ஆணைக்குழுவின் அவதானிப்புக்களும் மேற்கொண்டு செய்யவேண்டிய நடவடிக்கைகளுக்காக உணவு, வர்த்தக, உள்நாட்டு வெளிநாட்டு வியாபார அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7.1.2 கோழித் தீன், ஒரு நாள் வயதுடைய குஞ்சுகள், பதனிடப்பட்ட கோழி இறைச்சி சம்பந்தப்பட்ட ஏகபோகநிலை, போட்டி முறிப்பு நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.**

கோழித் தீனி, ஒருநாள் வயதுடைய குஞ்சுகள், பதனிடப்பட்ட கோழி இறைச்சி வழங்கல்கள் சம்பந்தமாக ஏகபோக நிலை உடன்கூட/அல்லது போட்டி முறிப்பு நடைமுறைகள் நிலவுவதாகப் பல முறைப்பாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்து ஆணைக்குழு இவை சம்பந்த மாக ஒரு ஆரம்ப நிலை ஆய்வை குறிமொழித் துலக்கலாக நியாய வியாபர ஆணைக்குழுச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுத்தது. இதன் பிரகாரம் பொதுமக்களிடமிருந்து பிரதிநிதித்துவம் கோரி மும்மொழிகளிலும் விளம்பரங்களை ஆணைக்குழு பிரசுரித்தது.

ஒரு விரிவான ஆய்வின் பின் கோழித் தினித் துறையில் ஏகபோக உரிமை நிலையை அனுபவிக்கும் சிலோன் கிறெயின் ஏலிவேற்றேஸ் லிமி. அதன் பொது முகாமையாளரால் நியாய வியாபார ஆணைக் குழுவுடன் 1991 இல் ஒப்பமிடப்பட்ட உடன்படிக்கைக்கு அமையச் செயற்படாததால் அதுபற்றிய விளக்கம் கோரப்பட்டுள்ளது. சிலோன் கிறெயின் எலிவேற்றேஸ் லிமி. இன் பொது முகாமையாளரின் பதிலின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

**7.1.3 வெறிநீர்மம்/ குடிவகை சம்பந்தப்பட்ட ஏகபோக அல்லது போட்டி முறிப்பு நடைமுறைகள் பற்றிய விசாரணைகள்.**

திருவாளர்கள் டபிள்யு. எம். மென்டிஸ் அன்ட் கொம்பனியின் முறையீடு ஒன்றின் மேல் ஆணைக்குழு ஒரு பூர்வாங்க ஆய்வை நடத்தத் தீர்மானித்தது. பொருளாதாரவியலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் படித்தபின் வெறிநிர்மங்கள/ குடிவகைகளின் வழங்கல் விநியோகத்தில் விநியோகத்தில் ஒரு ஏகபோக நிலை உடன்கூட/ அல்லது போட்டி முறிப்பு நடவடிக்கைகள் நிலவக் கூடும் என ஆணைக்குழு கருதி நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் விசாரணைக்கான ஆரம்ப நடவடிக்கைகளைச் செய்தது. இதன் பிரகாரம் பொதுமக்களிடமிருந்து பிரதிநிதிதுவம் கோரி மும்மொழிகளிலும் விளம்பரங்களை ஆணைக்குழு பிரசுரித்தது. விசாரணைகள் தொடர்கின்றன.

**7.2 ஒன்றிணைப்புக்களும் கைப்பற்றல்களும்.**

கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு ஒன்றிணைப்பு நிலையை ஏற்படுத்தும் சகல கொள்வனவுகள்/ஒன்றிணைப்புக்கள் ஆகியவை ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும் என்பது சட்டரீதியான ஒரு கட்டாய தேவையாகும். இக்காலத்தில் ஒன்றிணைப்புக்கள் கைப்பற்றல்கள் ஒன்றும் அறிவிக்கப்படவில்லை எனவே இத்தகைய விசாரணைகள் எதுவும் நடாத்தப்படவில்லை.

**7.3 போட்டி முறிப்பு நடவடிக்கைகள்.**

**7.3.1 உள்நாட்டுச் சந்தையில் சீனப் பென்சில்களைக் கொணர்ந்து குவித்தல்.**

சிலோன் பென்சில் கம்பனியின் இந்த முறைப்பாடு 1987 இன் நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் இல. 1 இன் 14 ஆம் பிரிவின் கீழ் ஆராயப்பட்டு உள்ளூர் கைத்தொழிலை ஊக்கச் சுங்கவரி அதிகரிப்புக்கனை ஆணைக்குழு சிபார்சு செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.3.2 எம். ரநீ. வி. செய்த முறைப்பாடுகள்.

அதிகாரமின்றி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளை எம். ரீ. வீ மறு ஒளிபரப்புச் செய்கிறது என்னும் எம்.ரீ. வி கம்பனியின் முறைப்பாடு கட்டளைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் ஆராயப்பட்டது. இது 14 ஆம் பிரிவிற்குள் அமையாது என்றும், புலமைத்துவச் சொத்துச் சட்டத்தின் கீழ் இதனைக் கவனிக்கலாம் என்றும் ஆணைக்குழ கருத்தைத் தெரிவித்தது.

7.3.3 உவால்ரர் தொம்சன் செய்த முறைப்பாடுகள்.

கொக்கோ கோலாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள காரணத்தால் சில பத்திரிகைகளும் ஒலிபரப்பு நிலையங்களும் பெப்சி விளம்பரங்களை ஏற்க மறுத்துள்ளன, என்று இக்கம்பனி ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

1987 இன் 01 ஆம் இல. வியாபார ஆணைக்குழுச் சட்டத்தினதும், 1979 இன் 01 ஆம் இல. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினதும் உரிய பிரிவுகளை ஒப்புநோக்கி ஆராய்ந்தபோது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட நடைமுறைகள் எனும் பகுதிக்குள் அடங்கும் கருத்தை ஆணைக்குழு கொண்டிருந்தது.

8. கொள்கை விடயங்கள்.

8.1 உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்துடன் நியாய வியாபார ஆணைக்குழுவின் கடமைகளை ஒன்று சேர்த்தல்.

நுகர்வோருக்கு செயற்திறனுடன் சேவை செய்ய உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்துடன் நியாய வியாபார ஆணைக்குழுவின் கடமைகளை ஒன்று சேர்த்தலை வலியுறுத்திச் சிறப்புக் கடமைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. உணவு, வர்த்தகம், உள்நாட்டு வெளிநாட்டு வியாபார அமைச்சின் அடுத்த ஆலோசனைச் செயற்குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்பட இருக்கிறது.

8.2 1987 இன் நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் இல 01 இற் திருத்தங்கள்

ஆணைக்குழுவினாலும் அமைச்சினாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் 1990 இன் கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டம் இல 46 இன்படி வாபஸ் பெறப்பட்ட 18 முதல் 26 வரையிலான பிரிவுகளை மீண்டும் செயற்படுத்த அமைச்சரவை கொள்கையளவில் அங்கீகரித்துள்ளது. இந்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சட்ட வரைஞர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

9. கருத்தரங்குகளும் பயிற்சித் திட்டங்களும்.

நுகர்வோரின் விழிப்புணர்வுகளைப் பலப்படுத்த "இலங்கை நுகர்வோர் மன்றங்களின் கூட்டமைப்பை" ஏற்படுத்துவதில் உணவு, வர்த்தக, உள்ளூர் வெளியூர் வியாபார அமைச்சு, உள்ளூர் வர்த்தகத் திணைக்களம் என்பவற்றுடன் ஆணைக்குழு இணைந்து செயற்பட்டது.

இன்டிபெண்ட்ன்ற் ரெலிவிசன் நெற்வேக் (ஐ. ரீ. என்) இனால் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்ட ஜீவ ஒளிபரப்பான "வினிவித எனும் குழுக் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்குபற்றும்படி தலைவருக்கு அழைப்புக் கிடைத்தது. இதன் நிகழ்ச்சியில் நியாய வர்த்தக ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சம்பந்தமான கொள்கைகள் மற்றும் நுகர்வோர்களின் பிரச்சனைகள் பற்றிய பார்வையாளர்களின் நேரடிக் கேள்விகளுக்கெல்லாம் விடை பகர வேண்டி இருந்தது. பொதுமக்களிடையே நுகர்வோரின் கருமங்கள் பற்றிய அறிவை ஊட்டும் நோக்கில் தலைவர் பல ஒளி, ஒலிபரப்பு நிகழ்ச்சிகளிலும் பத்திரிகைகளிலும் பங்குகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.2 சர்வதேசம்.

ஜே. ஐ. ச. ஏ இனால் ஜப்பானில் நடந்த மூன்று வாரப் பயிற்சி நெறியில் தலைவர் திரு. டீ. ஜே. பத்திரன பங்கு கொண்டார். எல்லாச் செலவுகளும் ஜப்பானிய அரசினாலேயே ஏற்கப்பட்டது. ஈண்டு ஜப்பானிய அரசு வழங்கிய தொழில்நுட்ப உதவியை நாம் மெச்சுகிறோம் எனம் பதிவு செய்கிறோம்.

10. அலுவலர்.

10.1 1996 டிசம்பர் 31 இல் இருந்தவாறு அலுவலர் நிலை.

| | பதவியணி | உண்மை நிலை |
|---|---|---|
| செயலாளர் நாயகம் | 01 | 01 |
| பிரதான பொருளாதாரவியலாளர் | 01 | 01 |
| பிரதான கணக்காளர் | 01 | பூச்சியம் |
| சட்ட அலுவலர் | 01 | பூச்சியம் |
| சிரேட்ட பகுதிக் கணக்காளர் | 01 | 01 |
| சிரேஉஷ்ட பொருளாதாரவியலாளர் | 01 | பூச்சியம் |
| சபையின் செயலாளர் | 01 | 01 |
| பகுதிக் கணக்காளர்கள் | 02 | 02 |
| உள்ளகக் கணக்காய்வாளர்/பகுதிக் கணக்காளர் | 01 | 01 |
| நிர்வாக, நிதித் துணை அலுவலர் | 01 | பூச்சியம் |
| புள்ளிவிபர அலுவலர்/ விலைக்கட்டுப்பாட்டுத் தொடர்பு அலுவலர் | 01 | 01 |
| பொருளியலாளர் | 01 | 01 |
| விசாரணை அலுவலர் | 01 | 01 |
| செயலாளர்கள் | 08 | 04 |
| சாரதிகள் | 02 | 01 |
| அலுவலக ஊழியர்கள் | 03 | 02 |
| | 27 | 16 |

01.01.97 முதல் 31.08.97 வரையிலான முன்னேற்ற அறிக்கை

பொதுமக்களின் நலனுக்கு எதிராகச் செயற்படும் ஒன்றிணைத்தல், போட்டி முறிப்புச் செயற்பாடுகள், ஏகபோக நிலை என்பவற்றைக் கட்டுப்படுத்துவதே 1987 இன் நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டம் இல 01 இன் கழ் நியாய வர்த்தக ஆணைக்குழு நிறுவப்பட்டது. விலைக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஒரே ஒரு வகைப் பாண்டம் (மருந்துச் சரக்கு வகை) மாற்றம் எதுவுமின்றி இருக்கிறது. எனினும் இக்கால எல்லைக்குள் புதிதாக ஒரு தயாரிப்பும் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவில்லை. இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டதுமான மொத்தம் 5000 வரையிலான மருந்துச் சரக்குகளின் விலைகள் தொடர்ந்தும் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

தொழில்சார் அலுவலர்களின் பாரிய தட்டுப்பாட்டுக்கு ஆணைக்குழு முகங் கொடுத்துக் கொண்டிருப்பினும் அது தொடர்ந்தும் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் விலை நிர்ணய விசாரணைகளையும் இரு ஏகபோக நிலை ஆராய்வுகளையும் இக்கால எல்லைக்குள் தொடர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. விலைக் கட்டுப்பாடு

### 1.1 இறக்குமதி செய்யப்பட்ட மருந்துச் சரக்குகள்.

மருந்துச் சரக்குகளின் விலைகள் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததுடன் மேற்குறிப்பிட்ட கால எல்லைக்குள் கீழ்க்காணும் விலைக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

| விலைக் கட்டளைஇல. | வர்த்தமானி மேற்கோள் | மருந்துத் தொகை |
|---|---|---|
| 18/02/97 இன் 01/97 | 21/02/97 இன் 963/22 | 41 |
| 19/02/97 இன் 02/97 | 22/02/97 இன் 963/24 | 66 |
| 20/02/97 இன் 03/97 | 23/02/97 இன் 964/01 | 30 |
| 07/03/97 இன் 04/97 | 10/03/97 இன் 966/01 | 51 |
| 10/03/97 இன் 05/97 | 12/03/97 இன் 966/08 | 102 |
| 13/03/97 இன் 06/97 | 14/03/97 இன் 966/17 | 90 |
| (07/97 மட்டல் வர்த்தமானி) | | |
| 03/04/97 இன் 08/97 | 07/04/97 இன் 970/03 | 108 |
| 24/04/97 இன் 09/97 | 07/05/97 இன் 974/10 | 28 |
| 05/05/97 இன் 10/97 | 08/06/97 இன் 974/13 | 85 |
| 29/05/97 இன் 11/97 | 02/06/97 இன் 978/03 | 76 |
| 30/05/97 இன் 12/97 | 06/06/97 இன் 978/24 | 49 |
| 03/06/97 இன் 13/97 | 07/06/97 இன் 978/25 | 82 |
| 04/06/97 இன் 14/97 | 09/06/97 இன் 979/04 | 51 |
| 05/06/97 இன் 15/97 | 10/06/97 இன் 979/10 | 110 |
| 06/06/97 இன் 16/97 | 11/06/97 இன் 979/14 | 41 |
| 09/06/97 இன் 17/97 | 12/06/97 இன் 979/18 | 53 |
| 10/06/97 இன் 18/97 | 13/06/97 இன் 979/26 | 75 |
| 07/07/97 இன் 19/97 | 24/07/97 இன் 985/20 | 85 |
| 09/07/97 இன் 20/97 | 25/07/97 இன் 985/22 | 55 |
| 10/07/97 இன் 21/97 | 26/07/97 இன் 985/32 | 89 |

### 1.2 உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மருந்தாக்கங்கள்.

மேற்குறிப்பிட்ட கால எல்லைக்குள் பின்வரும் விலைமாற்றப் பிரேரணைகள் ஆணைக்கு ழு லால் ஆராயப்பட்டன. அவை அஸ்டன்ஸ் லிமி (இரு விலை மாற்றங்கள்) காமா பாமசூட்டிக்கல்ஸ் (பிரை) லிமி.,ஹைறாகோட்ஸ் (பிரை) லிமி, கிளாக்சோ வெல்கம் (சிலோன்) லிமி, பீ. வை. கே. குல்டென் லிமி, ரெகசிற் அன்ட் கோல்மன் ஒவ் சிலோன் லிமி என்பனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. 1987 இன் நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டம் இல 01 இன் 11 ஆம் பிரிவின் கீழான விசாரணைகள்.**

**2.1 கோழித் தீனி, ஒரு நாள் வயதுடைய குஞ்சுகள், பதனிடப்பட்ட கோழி இறைச்சி சம்பந்தமான ஏகபோக நிலை, போட்டி முறிப்பு நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.**

ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பயனாக சிலோன் எலிவேற்றேஸ் விமி., இன் பொது முகாமையாளர் கலாநிதி. சின் உறவ் சீயொங் அவர்கள் 1991 இல் நியாய வர்த்தக ஆணைக்குழு வழங்கிய "இணக்கக் கட்டளையில் பிரசுரிக்கப்பட்ட திருத்தஸ்களுக்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

கோழித் தீனியின் விலைகளை நியாயமான மட்டத்தில் வைத்திருக்கவும், உள்ளூரில் விளையும் சோளத்தைக் கொள்வனவு செய்யவும், தீனியின் தரத்தைப் பேணவும் வழி செய்யும் வகையில் புதிய "இணக்கக் கட்டளைகள்" உரிய காலத்தில் வெளியிடப்படும்.

**2.2 வெறிநீர்மம்/குடிவகை சம்பந்தமான ஏகபோக அல்லது போட்டி முறிப்பு நடைமுறைகள் பற்றிய விசாரணைகள்.**

மேற்படி விசாரணைகள் சம்பந்தமான ஆணைக்குழுவின் பத்திரிகை விளம்பரங்கள் சம்பந்தமாக தொடர்பு கொண்டவர்களின் வாக்குமூலங்களை ஆணைக்குழு பதிய ஆரம்பித்துள்ளது.

**2.3 ஒன்றிணைப்புக்களும் கைப்பற்றல்களும்.**

கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு ஒன்றிணைப்பு நிலையை ஏற்படுத்தும் சகல கொள்வனவுகள்/ஒன்றிணைப்புக்கள் ஆகியவை ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும் என்பது சட்டரீதியான ஒரு கட்டாய தேவையாகும். எனினும் இக் கால கட்டத்தில் ஒன்றிணைப்புக்கள் கைப்பற்றல்கள் ஒன்றும் அறிவிக்கப்படாததால் விசாரணைகள் எதுவும் நடாத்தப்படவில்லை.

2.4 போட்டி முறிப்பு நடவடிக்கைகள்.

கப்பற்துறையில் இறக்குதுறைக் கையாள்கைக் கட்டணங்கள், மின்சார உபகரணப் பகுதிகளைத் தொகுத்தல், பயன்படுத்தப்பட்ட போத்தல்களின் இறக்குமதி ஆகியன சம்பந்தமாகப் பல முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ளன. நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ முறையான ஆராய்வுகள் நடாத்த வேண்டுமா என்பதை முடிவு செய்ய பூர்வாங்க விசாரணைகள் நடாத்தப்படுகின்றன.

**3. கொள்கை விடயங்கள்.**

**3.1 உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்துடன் நியாய வியாபார ஆணைக்குழுவின் கடமைகளை ஒன்றுசேர்த்தல்**

இந்த இரு நிறுவனங்களையும் ஒன்றிணைப்பதற்கான உத்தேசம் இன்னும் பாராளுமன்ற ஆலோசனைச் சபையின் பரிசீலனையில் இருக்கிறது.

**3.2 1987 இன் நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் இல 01 இற் திருத்தங்கள்.**

உத்தேசத் திருத்தங்கள் இன்னும் பாராளுமன்ற ஆலோசனைச் சபையின் பரிசீலனையில் இருக்கிறது.

**4. உணவு இடர்காப்புச் செயற்குழுக் கூட்டங்கள்.**

4.1 ஆணைக்குழுலின் தலைவரும் பிரதான பொருளாதாரவியலாளரும் தொடர்ந்தும் இந்த வாராந்தக் கூட்டங்களில் பங்குபற்றுவதுடன் உள்ளூர், சர்வதேசச் சந்தைகளில் ஏற்படும் விலை மாற்றங்கள் பற்றிய அறிக்கைகளைநும் சமர்ப்பிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4.2 மரக்கறி வகைகள்.**

உணவு இடர்காப்புச் செயற்குழுக் கூட்டங்களில் மரக்கறி வகைகளின் உயர்ந்த விலைகள் தொடர்ந்தும் ஒரு பாரிய விடயமாக இருக்கிறது. சென்ற வருடம் மரக்கறி வகைகளில் விலை நகர்வுகள் பற்றி ஆணைக்குழு நடாத்திய விரிவான ஆராய்வுகளின் அடிப்படையில் மரக்கறி வகைகளின் உயர்ந்த விலைகளுக்கான முக்கிய காரணங்களை ஆணைக்குழு சாராம்சமாக வழங்கியதுடன் இந்த விலை மாற்றங்களை மட்டுப்படுத்துவதற்கான குறுகிய கால/மத்திமகால வழிவகைகளையும் முன்வைத்தது.

**5. கருத்தரங்குகளும் பயிற்சித் திட்டங்களும்.**

ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு "மட்டுப்படுத்தப்பட்ட வியாபார நடைமுறைகள் போட்டிகள் பற்றிய தேசிய சட்டங்களை அமுல் செய்தல் "சம்பந்தமான உயர்மட்டப் பயிற்சிகளை வழங்க முதல் முறையாக இது சம்பந்தமான சர்வதேச கருத்தரங்கு/தொழிற் பேட்டை ஏப்ரல்/ மே மாதங்களில் நடாத்தப்பட்டது. சர்வதேச அபிவிருத்திக்கான ஜேர்மன் ஆதாரநிலையம்(டீஎஸ்ஈ), வர்த்தகம் அபிவிருத்திக்கான ஒன்றுபட்ட நாடுகளின் கருத்தரங்க நிறுவனம் (அங்றாட்), நியாய வர்த்தக ஆணைக்குழு என்பன கூட்டாக ஜேர்மன் சமஷ்டி வணிகக் கூட்டணி அலுவலகம், ஜேர்மன் சமஷ்டி கூட்டரசின் பொருளாதார அமைச்சு என்பவற்றின் உதவிகளுடன் இந்த ஐந்து நாள் கருத்தரங்கை/தொழிற்பேட்டையை ஒழுங்கு செய்தன. இத்துறையிற் செயற்படும் ஆணைக்குழுவின் அலுவலர்களும் ஏனைய பங்குபற்றியோரும் இத்துறை பற்றிய தமது அறிவை மேலும் வலுப்படுத்த இது மிகவும் துணை செய்தது.

**6. அலுவலர்.**

**6.1 1997 ஆகஸ்ட் 31 இல் இருந்தவாறு அலுவலர் நிலை**

| | பதவியணி | உண்மை நிலை |
|---|---|---|
| செயலாளர் நாயகம் | 01 | பூச்சியம் |
| பிரதான பொருளாதாரவியலாளர் | 01 | 01 |
| பிரதான கணக்காளர் | 01 | 01 |
| சட்ட அலுவலர் | 01 | பூச்சியம் |
| சிரேஷ்ட பகுதிக் கணக்காளர் | 01 | பூச்சியம் |
| சிரேஷ்ட பொருளாதாரவியலாளர் | 01 | பூச்சியம் |
| சபையின் செயலாளர் | 01 | 01 |
| பகுதிக் கணக்காய்வாளர் | 02 | 01 |
| உள்ளகக் கணக்காய்வாளர்/பகுதிக் கணக்காளர் | 01 | பூச்சியம் |
| நிர்வாக, நிதித் துணை அலுவலர் | 01 | பூச்சியம் |
| புள்ளிவிபர/விலைக் கட்டுப்பாட்டு அலுவலர் | 01 | 01 |
| பொருளியலாளர் | 01 | 01 |
| விசாரணை அலுவலர் | 01 | பூச்சியம் |
| செயலாளர்கள் | 08 | 02 |
| சாரதிகள் | 02 | 02 |
| அலுவலக ஊழியர்கள் | 03 | 02 |
| மொத்தம் | 27 | 12 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியாய வியாபார ஆணைக்குழு
## நிதிச் செயற்பாடு 1989 தொடக்கம் 1997 ஆகஸ்ட் வரை

| | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. விற்பனைத் தொகை | | | | | | | | | |
| 2. விற்பனைத் தொகைவரி | | | | | | | | | |
| 3. விற்பனைகளின் ஆகுசெலவு | | | | | | | | | |
| 4. i. மொத்த இலாபம் | | | | | | | | | |
| ii. மொத்த இலாப சதவீதம் | | | | | | | | | |
| 5. பிற வருமானம் | | | | | | | | | |
| i. கிடைத்த வட்டி | | | | | | | | | |
| ii. சில்லறைவருமானம் | 269 | 796 | 227 | 20 | 26 | 29 | 28 | 39 | 21 |
| iii. திறைசேரிக்கொடை | 2907 | 3500 | 3500 | 2600 | 2850 | 3900 | 3300 | 3620 | 2475 |
| 6. செலவுகள் | | | | | | | | | |
| i. நிர்வாகசெலவுகள் | 1536 | 3922 | 3442 | 3062 | 3435 | 3568 | 2994 | 3850 | 2971 |
| ii. விற்பனை விநியோக செலவுகள் | | | | | | | | | |
| 7. சுத்த இலாபம் சுத்தஇலாபம் (வட்டிக்கு முன்னர்) | 1371 | 374 | 285 | (442) | (560) | (354) | (763) | (198) | (475) |
| i. செலுத்தியவட்டி | | | | | | | | | |
| ii. சுத்தஇலாபம் (வரிக்கு முன்னர்) | | | | | | | | | |
| iii. சுத்தஇலாபம் (வரிக்குப் பின்னர்) | | | | | | | | | |
| iv. திரட்டிய நிதிக்கு உதவியது | | | | | | | | | |
| 8. i. மூலதன உதவுதொகை | 1395 | 2110 | 2323 | 2367 | 1713 | 2462 | 1719 | 2379 | 2404 |
| ii. மூலதன இலாபக் கொள்வனவு | | | | | | | | | |
| iii. விரைவு முதல்களின் விகிதம் | | | | | | | | | |
| 9. ஊழியர்களின் எண்ணிக்கை | 28 | 23 | 18 | 17 | 20 | 20 | 19 | 16 | 12 |
| 10. பணியாளர் ஒருவருக்கு இலாப சம்பாத்தியம் | | | | | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்

**1. நோக்கங்களுரும்.**

தற்போதுள்ள மிகப் பழமையான பொதுக் கட்டுத்தாபனமான கட்டுறபு மொத்த விற்பனனை நிறுவனம் (கூ. மொ. வி. நி) 1949 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கம் பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்டது.

1.1 நிறுவனத்தின் பொது நோக்கங்களாவன :

1.1.1 கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளைப் பெற்று வழங்கல்

1.1.2 இறக்குமதியாளர்கள் சகல பொருட்களினதும் மொத்த விற்பனை சில்லறை விற்பனை வணிகர்களாகவும் நடாத்துதல்.

1.1.3 நிதி அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் அமைச்சரால் அங்கீகரிக்கப்படும் எத்தகைய விவசாய அல்லது கைத்தொழில் முயற்சி அல்லது வங்கித் தொழில் அல்லது கப்பற்சேவை உட்பட அத்தகைய வர்த்தகம் அல்லது தொழில் நடாத்துதல்.

1.1.4 நிறுவனத்தின் நோக்கங்களுக்கு ஒத்த அல்லது அவந்நைப் பெரிதும் ஒத்த நோக்கங்களைக் கொண்ட கம்பனியாக எத்தகைய வியாபாரத்தையும் நடத்துகின்ற அல்லது ஈடுபட்டுள்ள எத்தகய பகிரங்;க கம்பனியிடமும் முதலீடு செய்தல் அல்லது பங்குகளைக் கொள்வனவு செய்தல் அல்லது வைத்திருத்தல்.

1.2 19977 யில் வர்த்தகம் தாராளமயமாக்கப்பட்டதையடுத்து, கூ. மொ. வி. நிறுவனத்திற்கு அளிககப்பட்ட சகல தனியுரிமைகளும் படிப்படியாக நீக்கப்பட்டுள்ளதுடன் 1989 செப்டெம்பரில் உணவுத் திணைக்களத்திடமிருந்து கூ. மொ. வி நிறுவனத்கிற்குக் கையளிக்கப்பட்ட கோதுமை இறக்குமகிகளைத் தவிர தற்சமயம் வேறெந்தப் பண்டத்திலும் தனியுரிமை நிலையைக் கூ.மொ. வி நிறுவனம் அனுவிப்பதில்லை.

**2. வர்த்தக வருமானம்**

2.1 கடந்த ஆண்டுகளுக்கான மொத்த வர்த்தக வருமானம் பின்வருமாறு:

| | பொது வர்த்தகம் மி.ரு பா | உணவுத்திணைக்கனம் மி.ரு பா | மொத்தவியாபாரம் மி.ரு பா |
|---|---|---|---|
| 1993 | 5.1 | 7.4 | 12.5 |
| 1994 | 5.1 | 6.7 | 11.8 |
| 1995 | 4.8 | 5.3 | 10.1 |
| 1996 | 4.5 | 9.1 | 13.6 |
| 1997 (1/2ஆண்டு) | 2.7 | 4.5 | 7.2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2 தொடக்கத்திலிருந்து கூ. மொ. வி நிறுவனம் பெரும்பாலும் மொத்த விற்பனை வியாபாரத்தில் கவனஞ் செலுத்தி கிட்டத்தட்ட 80% பொது வியாபாரத்திற்கப் பொறுப்பாகவிருந்தது. எணினும் 1993 தொடக்கம் சில்லறை வியாபாரம் பொது வியாபாரத்தின் எநக்குறைய 60% மாகிஇப் போக்கில் திடீர் மாந்நமொன்நு எந்பட்டது.

2.3 1994 ஆகஸ்ட் தொடக்கம் 10 சில்லறைக் கடைகள் நவீனமயமாக்கப்பட்டவிடத்து 24 புதிய சில்லறை மொத்த விநபனைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

2.4 1995,1996 ஆம் ஆண்டுகளில் ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையும் 1997 ஆம் அரை ஆண்டின் போதிலுமான எற்றுமதியின் தொகையும் பெறுமதியும் கழே கொடுக்கப்பட்டுள்ளன.

| இனம் | 1995 | | 1996 | | 1997(1/2 ஆண்டு) | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (மெ/தொ) | பெறுமதி (மி.ருபா) | தொகசை (மெ. தொ) | பெறுமதி (மி.ருபா) | தொகை (மெ.தொ) | பெறுமதி (மி.ரு) |
| வெற்றிலை (கூடைகள்) | 26.591 | 16.56 | 18,228 | 12.6 | 8288 | 6.3 |
| ஈக்கிள் | 917 | 10.46 | 575.78 | 6.8 | 243 | 3.1 |
| இநப்பர் | 412 | 31.30 | 162 | 12.4 | 36 | 2.4 |
| பழப்புளி | 103 | 1.77 | 60 | 1.1 | 202 | 2.8 |
| தேங்காய் துருவல் | 24 | 1.12 | – | – | 24 | 1.7 |
| கறுவா இலைகள் | 14 | 0.23 | – | – | – | – |
| மட்பாண்டம் | – | – | – | (.006) | – | – |
| தேங்காய் விதைகள்5000 தேங்காய் | | 07 | – | – | – | – |
| எஸ்எம்எ பால் மா | – | 0.24 | – | – | – | – |
| கொப்றா | 400 | 12.23 | 12.5 | 5.2 | 115 | 5.8 |
| தேயிலை | 129.7 | 14.23 | – | – | – | – |
| கொரக்கா | 25.6 | 0.96 | 80 | 9.6 | – | – |
| கராம்பு | – | – | – | – | 22 | 1.4 |
| | | 89.68 | | 47.70 | | 23.50 |

மேலே காட்டப்பட்ட இனங்களிலான வீழ்ச்சி வின்வரும் காரணங்சளலாதனாகும்.

(அ) பாகிஸ்தானுக்கு எற்றுமதி செய்யப்பட்ட வெற்றிலைத் தொகைகள் ஆகாய விமானங்களில் கிடைக்கும் இடவசதியிலேயே பெரும்பாலும் தங்கியள்ளது. இதன் விளைவாக கூ. மொ. வி. நிறுவனத்ததால் ஏற்றுமதி செய்யப்பட்ட கூடைகளின் எண்ணிக்கை 1995 யில் மாதம் கிட்டத்தட்ட 2400 யிலிருந்து 1996 யில் கிட்டத்தட்ட 1300 ஆக விழ்ச்சியடைந்துள்ளது.

(ஆ) சர்வதேசச் சந்தையில் தாள் இறப்பரின் விலைகள் கடந்த 03 தொடக்கம் 04 மாதங்களின் போது எதிர்பாராத விதமாக வீழச்சியக்ஷடைந்தது. அந்த விதத்தில் உள்நலட்டுச் சந்தைக்குத் தேவையான இறப்பர் ஏற்றுமதிகளுக்கான விலைகளிலும் பார்க்க சிறந்து விலைகளைம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1995 யில் ஏற்றுமத செய்யப்பட்ட தேயிலை இதுவரை கோரப்படவில்லை.

## 3. வர்த்தகக் கையிருப்புக்கள் கொள்ளல்.

### 3.1 இறக்குமதிகள் (உணவுப் பொருட்களும் பலசரக்கும் பலசரக்குப் பொருட்களும்)

1995/1996 ஆம் ஆண்டுக் காலத்தின் போதானதும் 1997 ஆம் அரை ஆண்டின் போதும் இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பண்டங்கள் பின்ரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**இறக்குமதிகள்**

| பண்டம் | 1995 | | 1996 | | 1997 (அரை அண்டு) | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை மெ.தொ | பெறுமதி | தொகை கம.தொ | பெறுமதி | தொகை மெ.தொ | பெறுமதி |
| பெரிய வெங்காயம் | 6312.5 | 183.505 | 6481.61 | 1133.3496 | 3950 | 68.79 |
| பஸ்மதி அரிசி | 62.8 | 1.9064 | 43.93 | 171.7205 | 21.5 | 0.81 |
| கொத்தமல்லி | 495.299 | 14.7995 | 376.40 | 19.0036 | 197.911 | 12.70 |
| வெந்தயம் | 100 | 4.172 | – | – | 80 | 7.28 |
| சீரகம் | 206.904 | 19.8237 | 147.852 | 16.681 | – | – |
| பெருஞ்சரகம் | 192 | 6.2206 | 125 | 3.6474 | – | – |
| வெள்ளைப்பூடு | 64.2 | 3.6928 | 155 | 7.7697 | – | – |
| செத்தல்மிளகாய் | 2000 | 188.505 | 450 | 38.94 | – | – |
| முழுப் பச்சைப் பட்டாணி | – | – | 43.00 | 1.5923 | 21.5 | 9 |
| மஞ்கள் | 36.6 | 1.45 | – | – | – | – |
| கொண்டல்கடலை | 1000 | 6.296 | 200 | 10.119 | 307.5 | 11.7 |
| மஞ்சள் உடைத்த பருப்புவகை | | | | | | |
| டைசன் கொண்டல் கடலை | – | – | 86 | 2.9708 | – | – |
| சிவந்த உடைத்த பருப்புவகை | | | | | | |
| தகரத்திலடைக்கப் பட்ட மன் | 38896 | 51.262 | 86.148 | 123.83 | | |
| | | | 36.48 | 1.93 | | |

### 3.2 உள்நாட்டுக் கொள்வனவுகள்.

தற்சமயம் கூ. கமா. வி. நிறுவனமானது பலவகையவன வீட்டுப் பாவனைப் பொருட்கள், பல சரக்குகள், பால் உணவுப் பொருட்கள், மதுபானஙகள், விறைக்கப்பட்ட உணவுகள், எழுதுகருவிவகை, விளையாட்டுப் பொருட்கள் மின்சார உபகரணங்கள் துணைப் பொருட்கள் முதலியவற்றைக் கையாளுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய பொருள்வகைகளின் கொள்வனவுகளும் விற்பனைளும் கீழே கொடுக்கப்;பட்டுள்ளன.

| | கொள்வனவுகள் 1995 மி.ருபா | கொள்வனவுகள் 1996 மி.ருபா | கொள்வனவுகள் 1997 முதல். அரையரண்டு மி.ருபா |
|---|---|---|---|
| வீட்டுப்பாவனைப் பொருட்களும் | | | |
| பலசரக்குகளும் | 393 | 386 | 247 |
| பால் உணவு | 370 | 437 | 172 |
| மதுபானம் | 127 | 91 | 44 |
| விறைக்கப்பட்ட உணவு | 28 | 25 | 21 |
| பசைரக்குப் பொருட்கள் | 427 | 342 | 189 |
| தேயிலை | – | 83 | 20 |

3.3 விவசாய சந்தைப்படுத்தல்

3.3.1 பின்வரும் பிரதான நோக்கங்களுடன் விவசாய சந்தைப்படுத்தற் பகுதி உருவாக்கப்பட்டது

ஆ. பண்ணை பாவனையாளர் விலைகைள நிலைதாட்டுதல்

ஆ. வஞ்சகமான இடையீட்டாளரால் விவசாயி சுரண்டப்படுவதைத் தடுத்தல்.

3.3.2 கடந்த ஆறு (06) ஆண்டுகளாகச் செய்யப்பட்ட விவசாயப் பொருட் கொள்வனவின் மொத்தப் பெறுமதி பின்வருமாறு.

| | |
|---|---|
| 1992 | 323.8 |
| 1993 | 739.2 |
| 1994 | 1322.9 |
| 1995 | 287.13 |

2.3.3 1995/1997 யின் போது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1995 | | 1996 | | 1997 அரை ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | பெறுமதி | தொகை | பெறுமதி | தொகை | பெறுமதி |
| செத்தல் மிளகாய் | 426.2 | 42.4 | 1849 | 195 | 1674 | 117.8 |
| பாசிப்பயறு | 553.4 | 21.3 | 1061 | 37 | 323 | 9 |
| உருளைக்கிழங்கு | 278.9 | 8.9 | 620 | 18 | 36 | 10 |
| சீனி | – | – | – | – | – | – |
| பெரியவெங்காயம் | 1,525.0 | 25.2 | 1088 | 29 | – | – |
| அரிசி | 9,185,4 | 112.6 | 4886 | 88 | 1053 | 26 |
| கருமிளகு | 0.3 | 0.01 | – | – | – | – |
| கறுவா | 3.1 | 0.5 | 2.0 | 0.3 | – | – |
| கொம்புப்பயறு | 164.8 | 1.2 | 55.0 | 1.7 | 12 | 0.3 |
| மா | 7450.0 | 59.3 | 9314 | 119 | 5344 | 86 |
| காய்கறி | – | 14.2 | 1574 | 24 | 818 | 14 |
| பிறபொருட்கள் | – | 1.49 | – | – | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.3.4 காய்கறித் திட்டம்

1995 ஜூலையில் காய்கறி கொள்வனவை ஆரம்பித்ததை அடுத்து கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள 25 சில்லறைக் கடைகள் மூலமும் தற்பொது நாளொன்றிற்கு 4000 கி.கிராமை சராசரி விற்பனையாகக் கொண்டு காய்கறிவகை விற்கப்படுகின்றன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட பல கொள்வனவு நிலையங்கள் மூலம் கொள்;வனவுகள் செய்யப்படுகின்றன. இப் புதிய திட்டதிதின் மிகக் குறிப்படத்தக்க அம்சமென்னவெனில் கூ. மொ. வி. நி காய்கறிகளின் விற்பனை விலைகள் சாதாரண சந்தை விலைகளிலும் பார்க்கக் குறைவாகவுள்ளமையாகும். காய்கறி கொள்வனவு விபரங்கள் கீழெ கொடுக்கப்பட்டுள்ளன.

| | தொகை மெ.தொ | பெறுமதி மி.ரு பா |
|---|---|---|
| 24.07.95 – 31.12.95 | 970 | 13.2 |
| 1996 | 1574 | 24.2 |
| 30.06.97 | 888 | 14.3 |

### 3.4 கோதுமைத் தானிய கோதுமை மா செயந்;பாடுகள்.

கடந்த சில ஆண்டுகளாக கூ.மொ.வி. நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமைத் தானியத்தினதும் கோதுமை மாவினதும் தொகையும் பெறமதியும் காட்டப்பட்டுள்ளன.

| | 1995 தொகை மெ/தொ | 1996 தொகை மெ/தொ | 1997 ஆகஸ்ட் வரை தொகை மெ/தொ |
|---|---|---|---|
| கோதுமைத் தானியம் | 1,059,742 | 870,881 | 626,996 |

### 3.5 உணவல்லாத இனங்களின் வியாபாரம்.

இரும்புப் பொருட்களும் கட்டிடப் பொருட்களும், மின்சாரம் பொருட்களும், துணைப் பொருட்களும் எழுதுகருவிவகையும், காரியாலய தளபாடங்களம் விளையாட்டுப் பொருட்களும் பொன்ற உணவல்வாத பொருட் தொகுதியைக் கூ.மொ.வி.நிறுவனப் பொருள்வகை உள்ளடக்குகின்றது.

| | 1995 மி | 1996 மி | 1997 அரை ஆண்டு மி |
|---|---|---|---|
| எழுதுகருவிவகை இரும்புப் பொருட்களும் | 123 | 142 | 71 |
| மின்சாரப் பொருட்களும் | 105 | 122 | 54 |
| விளையாட்டுப் பொருட்கள் | 52 | 47 | 30 |

### 3.6 தனியுரிமை முகவர் கிட்டம்

மேல்நிலை தனியுரிமை முகவர்களை நியமிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் இதுவரை 97 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தனியுரிமை முகவர் திட்டத்தின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | 1995 | 1996 | 1997 முதல் அரையாண்டு |
|---|---|---|---|---|
| i | தனியுரிமை முகவர்களின் எண்ணிக்கை | 734 | 7917 | 7929 |
| ii | தனியுரிமை விற்பனைகள் (மி.ருபா) | 522 | 703 | 249 |

3.7 நெல் ஆலைத் திட்டம்.

1997 ஆகஸ்ட் 23 ஆந் திகதி லுனுகம்வெஹரவில் திறக்கப்படவிருக்கிம் நெல் ஆலைத் திட்டம் இந்தொ-ஸ்ரீ லங்கா கடன் உடன்படிக்கையின் கீழுள்ளது. திட்டத்தின் மீதான மொத்த முதலீடு ருபா 11.8 மி (எறக்குறைய) லுனுகம்வெஹர நாளொன்றிற்கு 32 மெ.தொ கொள்திறதிதைக் கொண்டிருப்பதுடன் ஆண்டொன்றிற்கான முழுக் கொள்திறமாக 19200 மெ.தொ.நெல் தேவைப்படும். இவ் ஆலை தரகர்களால் விவசாயிகள் சுரண்டப்படுவதை நீக்குவதுடன் கல், தூசு அற்ற சதொச பிராண்ட் அரிசி கூ. மொ.வி.றி சில்லறைக் கடைகள், தனியுரிமை முகவர் நிலையங்கள் மூலம் பாவனையாளர்களை அடையும். இத் திட்டத்தின் இரணடாவது கட்டம் அரிசி மா பொதிசெய்யப்படுவதை உள்ளடக்கம்.

4. மனித மூலவளங்கள்.

4.1 1994 ஆகஸ்ட் தொடக்கம் இன்றுவரை 3 ஆண்டுக் காலத்தின் போது 500 புதிய ஹழியர்கள் நிரந்தர ஹழியர் கோப்பில் சேர்க்கப்பட் டுள்ளார்கள். பொதிசெய்தற் செயற்பாடுகளுக்கென ஒப்பந்த தொழிலாளர்களாக வேலைவாய்ப்புகள் அனிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுப் பயனை மேம்;மடுத்தும் பொருட்டு செயல் நிறைவேற்று மதிப்பீடும் ஹக்குவிப்புத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டவிடத்து ஊழியர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5. நிதிச் செயற்பாடு

5.1 மொத்த விற்பனைத் தொகை 1995 யிலான ரூபா 9 பில்லியனிலிருந்து 1996 யில் ரூபா 13 பில்லியனாக அதிகரித்து உணவுத் திணைக்களச் செயற்பாடுகளின் அதிகரிப்பை முக்கிய காரணமாகக் கொண்டு 44% அதிகரிப்பைப் பதிவு செய்தது. எனினும் நிறுவனத்தின் இலாபத்தன்மை கீழே காட்டப்பட்டவாறு கடுமையாகக் குறைந்துது.

5.2 மொத்த செயல் நிறைவேற்றம்.

| | 1995 | | 1996 | | 1996 முதல் அரையாண்டு | |
|---|---|---|---|---|---|---|
| | மி.ரூபா | % | மி.ரூபா | % | மி.ரூபா | % |
| பொது வியாபாரம் | 4744 | 46 | 4588 | 33 | 2784 | 38 |
| கோதுமை மா | 5371 | 54 | 9176 | 67 | 4520 | 62 |
| மொத்த விற்பனைத் தொகை | 10115 | 100 | 13764 | 100 | 7304 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| மொத்த இலாபம் | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|
| பொது வியாபாரம் | 627 | 626 | 314 |
| கோதுமை மா | (4950) | (3253) | 25 |
| செயற்பாட்டு இலாபம் | | | |
| பொது வியாபாரம் | (149) | (302) | (222) |
| கோதுமை மா | (5011) | (4304) | (655) |

5.3 1997.06.30 யின் போது திறைசேரியிலிருந்து வரவேண்டிய உதவிப்பணம்.

| | மி.ரூபா |
|---|---|
| 1994–1997 வரை கோரப்பட்ட | |
| மொத்த உதவிப்பணம் | 11404.8 |
| „ பெறப்பட்ட „ | (10300.0) |
| | 1104.8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ.மொ.லி. நிதகிரிலிமை லிற்பனைகள் - 1997
சற்றைப்படுத்த பகுதி.





பெறுமதி மில்லியன் ருபாலில்

| மாதம் | ஜன | பெப். | மார். | ஏப்ரல் | மெ. | ஜுனி | ஜுலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டே. | நவம். | டிசெ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| த.உ. லிற்பனைாள் 1996 | 90 | 47 | 61 | 64 | 54 | 71 | 54 | 43 | 28 | 53 | 55 | 84 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1996-1996




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**1996 முதல் 1997 ஜுன் வரையிலான முன்னேற்றம்**

**01. ஏஅச இன் நோக்கங்களும் கடமைகளும்**

(அ) இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்து, ஊக்குவிக்கும் நோக்கில் 1979 இன் 40 ஆம் இல. ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஏஅச நிறுவப்பட்டது. அதன் முக்கிய பணிகளாவன:

(i) ஏற்றுமதிகளுக்கான கொள்கை நிலையை மேன்மேலும் மேம்படுத்துவதற்கான சிபார்சுகளை அரசாங்கத்திற்குச் செய்தல்.

(ii) ஏற்றுமதித் தொடர்புடைய தயாரிப்புக்களையும் சேவைகளையும் வியாபிக்கத் தூண்டுதல்.

(iii) ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்யவும் ஊக்கவும் விசேட சேவைகளையும் வழங்குதல்.

(vi) தேசிய ஏற்றமதி அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து அதன் அமுலாக்கலை மேற்பார்வை செய்தல்.

**02. ஏற்றுமதிச் செயற்பாடுகள் - பாரிய முனைப்புக்கள்**

(அ) ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வதிலும் ஊக்குவிப்பதிலும் ஏஅச ஈடுபட்டிருப்பதால் அதன் செயற்பாட்டை ஆராய்வதற்கு முன் ஏற்றுமதிச் செயற்பாடுகள் பற்றி ஆராய்வது அவசியமாகும்.

(ஆ) அட்டவணை 1 1994 – 1996 காலத்தின் ஏற்றுமதிச் செயற்பாடுகளையும் அட்டவணை 11 1997 இன் முதற் காலாண்டின் ஏற்றுமதிச் செயற்பாடுகளை 1996 இன் முதற் காலாண்டுடன் ஒப்பு நோக்காகத் தருகின்றன. இந்த அட்டவணைகளின்படி ஏற்றுமதிகளிலுள்ள பாரிய முனைப்புக்கள் வருமாறு:

(i) எஸ்டீஆர் அடிப்படையில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி விகிதம் 1995 இன் 12.01% உடன் ஒப்புநோக்காக 1996 இல் 12.23% ஆக இருந்தது.

(ii) 1995 இல் 14.21% ஆக இருந்த பாரம்பரிய ஏற்றுமதிகளின் வளர்ச்சி வேகத்துடன் ஒப்புநோக்கங்களால் 1996 இல் அது பெருக்கெடுத்து 12.237% ஆயிற்று. 1996 இன் முதற்காலாண்டின் (ஜன. முதல் மார்ச் வரை) மொத்த ஏற்றுமதி வளர்ச்சிச் சத விகிதம் 1995 ஐ விட 12.1% வளர்ச்சியையும் 1997 இன் சமகாலத்தில் அது 1996 ஐ விட 12.64% வளர்ச்சியைக் கண்டது.

(iii) தேயிலையின் செயற்பாட்டில் ஏற்பட்ட அபரிமித பெறு பேறுகளே அதாவது 1995 இன் 6.9% வளர்ச்சி விகிதத்துடன் ஒப்புநோக்காக 1996 இல் 34% வேகத்தைப் பதிவு செய்ததே பாரம்பரிய ஏற்றுமதிகளில் ஏற்பட்ட பெருக்கத்திற்கு முக்கிய காரணமாயிற்று. இப்பெருக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்டீஆர் 316 மில்லியனிலிருந்து எஸ்டீஆர் 421 மில்லியனாகும். 1996 இல் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சி 1997 இலும் தென்பட்டது. தெங்கு உற்பத்தித் துறையில் 1997 இல் ஏற்பட்ட அபரிமித செயற்பாடே இதற்கு முக்கிய காரணமாயிற்று. எனினும் 1997 இன் முதற் காலாண்டில் தேயிலைத்துறையில் வீழ்ச்சி முனையையே காட்டியது.

(iv) பாரம்பரியமற்ற பாண்ட ஏற்றுமதி வளர்ச்சி விகிதம் 1995 இன் 11.53% இல் இருந்து 1996 இல் 9.58% ஆக வீழ்ச்சி அடைந்தது (படம் 11). புடைவைகள் தயாரித்த ஆடைகள் உப விரிவின் வளர்ச்சி விகிதம் (1995 இன் 12.5% இல் இருந்து 1996 இல் 7.7% ஆகக் குறைந்ததும் மற்றும் உற்பத்தியாளர்கள் உப பிரிவின் வளர்ச்சி விகிதம் (1995 இன் 18.7% இல் இருந்து 1996 இல் 16.4% ஆகக்) குறைந்ததுமே இந்த வீழ்ச்சிக்கான இரு முக்கிய காரணங்களாயின. எனினும் பாரம்பரியமற்ற பாண்டத்துறையின் வளர்ச்சி விகிதம் 1996 இன் முதற் காற்பகுதியின் 9.9% உடன் ஒப்பு நோக்காக 1997 இன் ஒத்த காலப்பகுதியில் தனிச்சிறப்பு வாய்ந்த 21% ஐப் பதிவு செய்தது. இந்த மேல்நோக்கிய பெருக்குக்கு மீண்டும் அதே பாரிய காரணிகள் இரண்டுமே ஏதுக்களானதுடன், பெயரிட்டுக் கூறுமிடத்து உற்பத்தியாளர்களின் வளர்ச்சி 1996 இன் முதற் காலாண்டில் 11.5% ஆக இருந்து 1997 இன் ஒத்தகாலத்தில் 40.7% ஆகவும், புடவை, தயாரித்த ஆடைகள் பிரிவின் வளர்ச்சி 1996 இன் 8.5% இல் இருந்து 19.5% ஆகவும் உயர்ந்ததே முக்கிய காரணங்களாயின. பாரம்பரியமற்ற துறையின் செயற்பாட்டில் புடைவை, தயாரித்த ஆடைப்பிரிவினதும் உற்பத்தி உபபிரிவினதும் தாற்பரியங்கள் இந்த முனைப்புக்களின் மூலம் துலாம்பரமாகக் காட்டப்பட்டுள்ளது. (படம் 111) புடவை தயாரித்த ஆடைப்பிரிவு மட்டும் மொத்த ஏற்றுமதியில் 47% பங்கைப் பெறுவதுடன் உற்பத்திகள் பிரிவு 17% ஐக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றுமதிச் செயற்பாடு - 1994,1995 & 1996

| | பெறுமதி மில். ரூபாக்களில் | | | | | பெறுமதி மில். எஸ்டிஆர் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தயாரிப்புத் துறை/ஆண்டு | 1994 | 1995 | %வளர்ச்சி | 1996 | %வளர்ச்சி | 1994 | 1995 | %வளர்ச்சி | 1996 | %வளர்ச்சி | 1997 இன் x பங்கு |
| பாரம்பரிய ஏற்றுமதிகள் | | | | | | | | | | | |
| தேயிலை | 20063.07 | 24637.55 | 17.52 | 34007.50 | 30.27 | 200.31 | 316.88 | 0.04 | 424.68 | 34.02 | 15.05 |
| இறப்பர் | 3559.70 | 5675.31 | 59.43 | 5663.96 | -0.20 | 50.31 | 72.00 | 45.08 | 70.81 | -3.27 | 2.50 |
| தெங்கு | 37601.03 | 5188.00 | 37.04 | 0027.56 | 10.10 | 55.10 | 00.73 | 25.52 | 75.14 | 12.60 | 2.00 |
| மொத்தம்-பாரம்பரிய ஏற்றுமதிகள் | 28284'40 | 35500.95 | 25.51 | 45759.10 | 28.00 | 399.78 | 456.00 | 14.21 | 570.42 | 24.93 | 20.21 |
| பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் | | | | | | | | | | | |
| பிற ஏற்றமதிப் பயிர்கள் | 6168.13 | 6616.16 | 7.25 | 6981 | 4.16 | 87.18 | -2.59 | 85.91 | -2.39 | 0.95 | 44.13 |
| மீன் தயாரிப்புக்கள் | 3122.29 | 3647.86 | 16.83 | 40876.13 | 12.01 | 44.13 | 46.92 | 6.31 | 50.94 | 8.57 | 3.04 |
| வைரம். மணிக்கற்கள், ஆபரணம் | 12493.51 | 14115.98 | 12.99 | 15508 | -9.80 | 170.59 | 101.50 | 2.81 | 193.32 | 6.48 | 6.05 |
| புடைவைகள் தயாரித்த ஆடைகள் | 76504.28 | 94614.21 | 23.67 | 105100.95 | 11.15 | 1081.33 | 1210.90 | 1254 | 1310.1 | 7.72 | 46.44 |
| உற்பத்திகள் | 25721.94 | 35558.40 | 30.47 | 40319.55 | 20.15 | 363.50 | 431.62 | 18.72 | 302.01 | 16.45 | 1781 |
| பெற்றோலியத் தயாரிப்புக்கள் | 4000.11 | 4592.09 | 12.00 | 5749.40 | 25.20 | 57.50 | 50.00 | 2.72 | 71.07 | 21.35 | 2.54 |
| மீன் ஏற்றமதிகள் | 87041 | 978.61 | 12.43 | 1294.04 | 32.23 | 12.30 | 12.50 | 2.31 | 16.13 | 28.16 | 0.57 |
| ஏனையவை ** | 1427.00 | 1674.10 | 17.26 | 1655.79 | -1.09 | 20.18 | 2153 | 6.70 | 20.64 | -4.14 | 0.73 |
| மொத்தம்-பாரம்பரியமற்ற | 13057035 | 150707.43 | 22.57 | 160005.45 | 13.00 | 1842.70 | 2055.27 | 11.53 | 2252.12 | 9.58 | 70.70 |
| மொத்த ஏற்றுமதிகள் | 158600'75 | 195298.30 | 23.09 | 220424.55 | 1504 | 2242.55 | 2511.88 | 1201 | 2822.54 | 12.37 | 100.00 |

குறிப்புக்கள்

** வர்க்கப்படுத்தப்படாத தயாரிப்புக்கள்

எஸ்டிஆர் விகிதங்கள்

1994 -> 1 எஸ்டிஆர் 70.75

1995 -> 1 எஸ்டிஆர் 77.75

1996 -> 1 எஸ்டிஆர் 80.22

(புள்ளிவிபரப்பிரவு/பீ அன்ட் பீ பிரிவு/ஏஅச என்பவற்றால் தயாரிக்கப்பட்டது பெறுவாய். இலங்கைச் சுங்கத் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றுமதிச் செயற்பாடு ஜனவரி - மார்ச் 1995,1996 & 1997

| | பெறுமதி மில். ரூபாக்களில் | | | | | பெறுமதி மில். எஸ்டிஆர் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தயாரிப்புத் துறை/ஆண்டு பாரம்பரிய ஏற்றுமதிகள் | 1995 | 1996 | % வளர்ச்சி | 1997 | % வளர்ச்சி | 1995 | 1996 | % வளர்ச்சி | 1997 | % வளர்ச்சி | 1997 இன் % பங்கு ஜனவரி-மார்ச் |
| தேயிலை | 5738.47 | 7460.80 | 30.01 | 8665.33 | 16.14 | 76.72 | 94.0 | 22.54 | 108.47 | 15.37 | 14'90 |
| இறப்பர் | 1902.62 | 1753.08 | -7.86 | 1645.93 | 24.12 | 15.60 | 16.01 | 2.61 | 19.74 | 23.30 | 2 71- |
| தெங்கு | 1167.13 | 1270.59 | 8.86 | 1577.11 | 24.12 | 15.60 | 16.01 | 2.61 | 19.74 | 23.30 | 2.71 |
| மொத்தம்-பாரம்பரிய ஏற்றுமதிகள் | 8808.22 | 10484.47 | 19.03 | 11888.37 | 13.39 | 117.76 | 132.11 | 12.19 | 148.81 | 12.64 | 20.44 |
| பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் பிற ஏற்றுமதிப் பயிர்கள் | 1152.52 | 1265.24 | 8.61 | 1587.76 | 25.69 | 15.41 | 15.92 | 3.31 | 19.87 | 24.86 | 2.73 |
| மீன் தயாரிப்புக்கள் | 904.27 | 1039.40 | 14.94 | 930.98 | -10.43 | 12.00 | 13.10 | 8.34 | 11.65 | -11.03 | 1.60 |
| வைரம்மணிக்கற்கள்,ஆபரணம் | 2566.49 | 3419.01 | 33.22 | 3243.77 | -513 | 34.31 | 43.08 | 25.56 | 40.60 | -5.75 | 5.58 |
| புடவைகள் தயாரித்த ஆடைகள் | 20122.67 | 23167.23 | 15.13 | 27888.77 | 20.38 | 269.02 | 291.93 | 8.51 | 349.09 | 19.58 | 47.85 |
| உற்பத்திகள் | 6413.29 | 7587.05 | 16.31 | 10749.27 | 41.67 | 65.74 | 95.01 | 11.51 | 134.55 | 40.73 | 18.48 |
| பெற்றோலியத் தயாரிப்புக்கள் | 916.20 | 930.45 | 14.00 | 1092.75 | 17.44 | 10.91 | 11.72 | 7.45 | 13.00 | 16.66 | 1.88 |
| மீன் ஏற்றுமதிகள் | 221.10 | 173.35 | -21.60 | 299.51 | 72.78 | 2.96 | 2.18 | -26.10 | 3.75 | 71.63 | 0.52 |
| ஏனையவை ** | 353.52 | 391.54 | 10.75 | 463.83 | 18.46 | 4.73 | 4.93 | 4.39 | 5.81 | 17.68 | 0.80 |
| மொத்த-பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் | 32550.06 | 3797.87 | 16.66 | 4625.64 | 21.82 | 435.16 | 478.48 | 9.95 | 579.00 | 21.01 | 79 |
| மொத்த ஏற்றுமதிகள் | 41358.28 | 48456.34 | 17.16 | 58145.01 | 19.99 | 552.92 | 610.59 | 10.43 | 727.81 | 19.20 | 100.00 |

குறிப்புக்கள்

**வர்க்கப்படுத்தப்படாத தயாரிப்புக்கள் எஸ்டிஆர் விகிதங்கள்

1995-> எஸ் டி ஆர் 74.8


1996-> எஸ் டி ஆர் 79.36

1997 -> எஸ் டி ஆர் 79.86

(புள்ளிவிபரப்பிரிவு,பீஅன்ட்பீ பிரிவு,ஏஅச என்பவற்றால் தயாரிக்கப்பட்டது)


(பெறுவாய். இலங்கைச் சுங்கத் திணைக்களம்)

மொத்த ஏற்றுமதிகள் 94, 95, 96




படம் 1


பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் 94, 95, 96




படம் 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகுதி வாரியாக ஏற்றுமதிகள் - 1996




படம் 3

### ஏற்றுமதிச் சேரிடங்களும் மொத்த ஏற்றுமதியின் % உம்




படம் 4

## 03. ஏஅச இன் பங்களிப்புக்கள்

(அ) பாரம்பரியமற்ற (பீஓஜ சம்பந்தமற்ற) ஏற்றுமதிகளை ஊக்குவித்து அபிவிருத்தி செய்வதிலேயே ஏஅச முக்கிய கவனத்தைச் செலுத்தியது. ஏஅச இனால் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி நடவடிக்கைகள் பாரம் பரியமற்ற ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கும் மொத்த ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கும் உதவி செய்தன. நவ்ற்றா மற்றும் கிழக்கு ஐரோப்பியச் சந்தைகளை அளாவி நிற்கும் தன்மையைக் குறைத்து ஆசிய ஜீஎஸ் நாடுகளுக்கு அதிக ஏற்றுமதிகளைச் செய்யவும் இது உதவியது படம் 111)

(ஆ) சகல பாரம்பரியமற்ற தயாரிப்புக்களின் ஏற்றுமதியாளர்களுக்கும் உதவும் அதே வேளையில் கீழ்க்காணும் தயாரிப்புக்கள் சம்பந்தமாக ஏஅச முக்கிய கவனத்தைச் செலுத்துகிறது:

(i) பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை (தேயிலைப் பொதிகளும்/பைகளும்), பெறுமதி கூட்டப்பட்ட தெங்குப் பொருட்கள் (உலர்த்தப்பட்ட தேங்காயும் தும்பும்), பழவகைகள், மரக்கறிவகைகள், பண்படுத்தப்பட்ட மலர்கள், வாசனைத் திரவியங்கள், அத்தியாவசிய எண்ணெய் வகைகள், மரமுந்திரி, மீன் வகைகள் (இறால், நீர்த்தொட்டி மீன்) மணிக்கற்களும் ஆபரணங்களும், வைரங்கள், தயாரித்த ஆடைகள், கைவண்ணப்பாண்டங்கள், பாதணிகள், அச்சுவேலைத் தயாரிப்புக்கள், தாதுத்தயாரிப்புக்கள், மின்னியற் தயாரிப்புக்கள், மட்பாண்டங்கள், பெறுமதி கூட்டப்பட்ட இரப்பர் தயாரிப்புக்கள், தோல் தயாரிப்புக்கள், கைத்தறிப் புடைவைகள்.

(i) ஏற்றுமதிகளை ஊக்குவித்து அபிவிருத்தி செய்ய ஏஅச எடுத்த நடவடிக்கைகள் அதன் செயற்பாட்டின் சிறப்புக்கூறுகள் என்பன வருமாறு:

## 04. தயாரிப்புக்கள்/கூழங்கல், சந்தை அபிவிருத்தி பற்றிய இணைத்த ஊக்குவிப்பு

ஆய்வுக்குரிய காலத்தில் இணைந்த தயாரிப்புக்கள், சந்தை அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை ஏஅச தொடர்ந்தும் செயற்படுத்தியது. அவற்றின் சிறப்புக் கூறுகளாவன:

### (i) பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை

ஜப்பான், ரூசியா, யூஎஸ்ஏ, மத்திய கிழக்கிலுள்ள புதிய கொள்வனவாளர்களுக்கு முப்பத்தி ஒன்பது (39) தேயிலைக் கம்பனிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ரூசியாவில் தேயிலையை ஊக்குவிப்பதற்கு ஏஅச, தேயிலை சிறிய உற்பத்தியாளர் அதிகாரசபை, பெருந்தோட்டத் துறை அமைச்சு என்பவற்றுடன் சேர்ந்து செயற்பட்டது. சிறிய சொந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள், எற்றுமதியாளர்கள் மன்றத்தின் இரு அங்கத்தவர்கள் யூஎஸ்ஏ, ஜோர்தான், ரூசியா என்பவற்றிற்கு தேயிலை ஏற்றுமதிசெய்ய உதவிகள் வழங்கப்பட்டன.

ஜேர்மனிக்கும் ஜப்பானிற்கும் ஆறு (06) தேயிலை ஏற்றுமதியாளர்களின் வர்த்தக விஜயத்தை ஒழுங்கு செய்ய உதவிகள் வழங்கப்பட்டதுடன் ஜப்பானிற்கும் ரூசியாவிற்கும் தேயிலை ஏற்றுமதி செய்வது பற்றிய இரு சந்தைப்படுத்தல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

### (ii) மலர்ச்செடி வளர்ப்பு

விசேடமாக ஜப்பானிய மலர்ச்செடிச் சந்தையில் பல வேகமான மாற்றங்கள் ஏற்பட்டு வருவதால் ஜப்பானியச் சந்தைக்கு உகந்த வகையிலான ஒரு மலர்ச் செடி உற்பத்திக் கோவையை அபிவிருத்தி செய்வது பற்றிய ஆய்வு ஆரம்பிக்கப்பட்டு முடிவுற்றுள்ளது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புக்கள் ஜப்பானுக்கு மலர்ச்செடிகளை ஏற்றுமதி செய்யும் கம்பனிகளுக்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொறியப் பிரமுகர்களின் வருகையின் தொடர் நிகழ்வாக 1997 ஜனவரி முதல் கொறிய அரசாங்கம் செடிகளின் இறக்குமதித் தடையில் (தொற்றுத் தடைக்காப்புக் கட்டுப்பாடுகள்) தென்னந்தும்புச் சக்கைகளில் வளர்க்கப்பட்ட பயிர்களுக்கு விலக்களித்துள்ளது. இது கொறியாவிற்கான மலர்ச்செடி ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்யும்.

ஒல்லாந்து தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அந்துாரியக் காட்டு மலர்ச்செடி வகைகள் பன்னிரண்டை ஒஆசிஸ் பயோடெக் பரிசோதனைக்கூடத்தில் பெருக்கி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வர்க்கங்களின் செயற்பாட்டைக் கணிக்க ஏஅச ஒரு பரீட்சார்த்த பயிர்ச்செய்கைத் திட்டத்தை அமுல் செய்யும்.

(iii) பழவகைகளும் காய்கறி வகைகளும்

கேந்திர விவசாயப்பண்ணைகளுக்கு உதவும் விசேட திட்ட அமைப்புக்கள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன. அண்ணளவாக துணிவாற்றலுடன் செயற்பட முற்படும் 100 விவசாயிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

சீஏஆர்பீ யின் நிதி உதவியுடன் கமத்தொழிற் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட காய்கறிவகைகளின் விதைப்பெருக்கத் திட்டத்தில் 10 காய்கறி வர்க்கங்கள் பற்றிய பூர்வ மதிப்பீடுகள் முடிவடைந்துள்ளன.

பழவகை விருத்தித் திட்டங்களின் கீழ் ஆக்கப்பட்ட பப்பாசி விதைகள் பரீட்சார்த்தப் பயிரீட்டிற்காக விநியோகிக்கப்பட்டுள்ளன. பழவகை விருத்தித் திட்டத்தின் ஒரு புது அன்னாசி வர்க்கமும் பயிரீட்டிற்காகப் பரீட்சிக்கப்பட்டது. இக்காலாண்டில் வாழை மரங்களின் ஆக்க மூலப் பண்படுத்தல் முறைப் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன. இப் பரிசோதனைகள் முடிந்ததும் செடிகள் வர்த்தக ரீதியில் பயிரிடும் பொருட்டு விவசாயிகளுக்கு விநியோ கிக்கப்படும்.

இலங்கை பழ, காய்கறி உற்பத்தியாளர்கள், தயாரிப்பாளர்கள், ஏற்றுமதியாளர்கள் கழகம் 1997 மே யில் விவசாய வர்த்தகமும் முதலீடும் பற்றிய ஒரு கருத்தரங்கை நடாத்த நிதி உதவி வழங்கப்பட்டது.

(iv) மர முத்திரி

மரமுந்திரிக்கான ஒரு குறுகிய கால வழங்கல் அபிவிருத்தித் திட்டமாக அதாவது இலங்கை மரமுந்திரிக் கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்ட கிருமிகள் நோய்களின் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு வேண்டிய இரசாயணப் பாண்டங்களின் கொள்வனவிற்கு ஏஅச ரூபா 317,500/- வரையிலான உதவிகளைச் செய்தது.

(v) பதனிடப்பட்ட உணவு

பதனிடப்பட்ட உணவுகளை ஏற்றுமதி செய்யும் 122 நிறுவனங்களின் தரங்களை ஜப்பானிய சந்தைக்கு உகந்தவாறு மேம்படுத்த 'ஜெற்றோ' உபதேசக நிறுவனம் ஆலோசனைச் சேவைகளை வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(vi) வாசனைத் திரவியங்களும் மூலிகைகளும்**

சீபீஜ தயாரிப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சீபீஜ உபதேசகர்களினால் வாசனைத் திரவியக் கலவைகள், வாசனைத் திரவிய கப் சியூல்கள், அசேதனத் தேயிலை என்பன பற்றிய சந்தைப்படுத்தல் மதிப்பீட்டு ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டு அவை சர்வதேச சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டன.

புதிய தயாரிப்புக்களான கறுவா வில்லைகள், களிப்புக்களாகவும் பானங்களாகவும் ஆக்கப்பட்ட மூலிகைத் தயாரிப்புக்கள் முறையே மெக்ஸ்சியோ விற்கும் இத்தாலிக்கும் பரீட்சார்த்த சந்தைப்படுத்தலுக்காக அனுப்பும் பொருட்டு அபிவிருத்திகள் செய்ய ஏற்றமதியாளர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டன.

**(vii) காளான்**

பொலநறுவையைச் சேர்ந்த பன்னிரண்டு (12) தொழிலதிபர்களும் மாத்தளையைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரும் காளான் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள உதவிகள் செய்யப்பட்டன.

1997 இன் இரண்டாம் காலாண்டில் காலி, மாத்தறையில் 12 காளான் பயிர்ச் செய்கைகளை ஆரம்பிப்பதற்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

**(viii) மீன்பிடித் தயாரிப்புக்கள்**

இறால் பண்ணை உற்பத்திகளில் வெண்புள்ளி நோய் ஏற்பட்டு பாதிப் புக்கள் எற்பட்டன. இறால் பண்ணைத் தடாகங்களில் தண்ணீரை மீளப் பாச்சுதல், தண்ணீரின் முகாமைத்துவம், உணவூட்டுதல் என்பவை பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி அப்பண்ணைகளை மறுசீரமைக்க உதவப்பட்டது. கடல் உணவுக் கைத்தொழில் ஐக்கிய அமெரிக்காவின் இடர்கள் பற்றிய ஆய்வுகள், முக்கிய கட்டுப்பாடுகள் (எச்ஏசீசீபீ) சம்பந்தமான இன்போபிஷ் ஆலோசகர்களின் தொழிற்பேட்டை ஒன்று நடாத்தப்பட்டது. 86 உற்பத்தியாளர்கள் பங்குபற்றினர்.

நன்நீர் மீன்வளர்ப்பு கடல் தயாரிப்புக்களின் ஏற்றுமதி என்பன பற்றிய தொழில்நுட்ப உதவிகள் மூன்று (03) எழில் மீன் ஏற்றுமதியாளர்கள்/ வளர்ப்போரிற்கும் 4 கடல் மீன் ஏற்றுமதியாளர்களுக்கும் வழங்கப்பட்டன.

**(ix) மணிக்கற்களும் ஆபரணங்களும்**

ஒளிரும் மணிக்கற்கள் ஆபரணங்கள் கண்காட்சியை ஏஅச கூட்டாக நடாத்தியது. முதற் தடவையாக ஆடைகளுக்கான ஆபரணங்களுக் கான ஒரு விசேட காட்சி மாடம் ஏஅச இனால் அமைக்கப்பட்டது. கடுமட்பாண்டத்தால் ஆன ஆடை அணிமணிகளுக்கான ஆணைகளைப் பெறுவதில் ஒரு கம்பனி வெற்றி கண்டது.

நியூயோக்கில் நடந்த கீர்த்திமிகு அமெரிக்காவின் ஆபரணங்கள் எனும் கண்காட்சியில் ஏஅச வின் அனுசரணையுடன் பங்கு கொண்ட இலங்கை வடிவமைப்பாளர் ஒருவருக்கு வடிவமைப்புக்கான "அமெரிக்காவின் ஆபரணங்கள் பரிசு" கிடைத்தது.

மணிக்கற் செதுக்கல் நிலையத்தினால் நடாத்தப்பட்ட மணிக்கல் இனங்காணல் பாட நெறியைப் பத்து (10) நபர்கள் வெற்றிகரமாக முடித்துள்ளனர். மணிக்கற் செதுக்கல் நிலையத்தினால் 2 ஆபரண ஏற்றுமதிக் கம்பனிகளின் அலுவலர்களுக்கு கற்பதிப்புப்பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரணங்களில் முதலீடு செய்வது பற்றிய கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. ஜெற் றோவுடனும் ஜப்பானிய தூதரகத்துடனும் முதலீட்டுச் சபையுடனும் கலந்துரையாடல்கள் நடக்கின்றன.

மணிக்கற் கைத்தொழிலின் தேவைகளை மதிப்பிட பயிற்சித் தேவை மதிப்பீடு நடாத்தப்பட்டது. சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டுத் தேசிய மணிக்கல் ஆபரண நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

கம்பஹாறா மாவட்டத்தின் கல்லொளுவவில் ஆபரண உற்பத்தியாளர்களின் தரவு திறன்கள் உற்பத்திக் கட்டுப்பாடுகள் பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**(x) அச்சீட்டுப் பகுதி**

அச்சீட்டுக் குறிவரைக் கணிப்பீட்டு நிறுவனத்தை அமைக்க வேண்டிய நிதிகளைப் பெறுவதில் ஏஅச நெதர்லாந்தைச் சேர்ந்த இன்கிறின் நிதியேற்பாட்டு நிறுவனத்துடன் சேர்ந்து பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முடித்துள்ளது. இன் நிறுவனத்திற்கு நெதர்லாந்துக் கம்பனி ஒன்றினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட குறிவரைக் கணிப்பீட்டு உபகரணங்கள் இலங்கை வந்து சேர்ந்துள்ளன. இன் நிறுவனத்தை அமைப்பதற்கான பூர்வாங்க ஒழுங்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. நவீன அச்சீட்டு நுட்பங்களை நெதர்லந்தில் பயில ஆறு அச்சு வேலை அலுவலர்களுக்கு அனுசரணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(xi) தோற் தயாரிப்புக்கள்**

தோற் தயாரிப்புத் துறையிலுள்ள மூன்று தொழிற்றுறைத் தயாரிப்பாளர்கள் இந்தியாவில் ஒரு தொழில்நுட்ப முன்னேற்றத் திட்டத்திற் பங்குபற்ற உதவிகள் வழங்கப்பட்டன. ஏனைய ஏற்றுமதியாளர்களுக்கும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தோற் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான பயிர்ச்சிப் பாட நெறிகளின் பாடத்திட்டத்தை அமைத்து முடிக்க இந்திய தோற் தயாரிப்பு நிறுவனத்தின் உபதேசகர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்தார். இந்த முயற்சியில் கைஅசக்கு ஏஅச உதவியது.

**(xii) தயாரித்த ஆடைகள்**

அபிவிருத்தி செய்ய வேண்டிய ஒரு சந்தையாக இனங்காணப்பட்ட தென் அமெரிக்காவிற்கு தயாரித்த ஆடைகளை ஏற்றுமதி செய்வது பற்றிய சந்தைப்படுத்தல் மதிப்பீடொன்று நடாத்தப்பட்டது. சுவீடன் சந்தையில் ஊக்குவிக்கும் பொருட்டு கோதன் பொக்கிலும் ஸ்டொக்வெறம்மிலும் ஒழுங்கு செய்யப்பட்ட சிறு சந்தையிலும் சந்தைத் தூதிலும் வைக்கும் பொருட்டு மாதிரித் தயாரித்த ஆடைகளிற்குவடிவமைப்புச் செய்து அபிவிருத்தி செய்யப்பட்டன.

தயாரித்த ஆடை ஏற்றுமதியாளர் குழு ஒன்று சுவீடனின் உபதேசக நிறுவனம் ஒன்றைச் சந்தித்து 4 வருடத்திட்டம் ஒன்றை ஏற்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரித்த ஆடைச் சந்தைப்படுத்தல் பற்றி சுவீடனில் பெப்ரவரியில் நடந்த தூதைத் தொடர்ந்து உருமறைப்புத் தயாரித்த ஆடை ஏற்று மதிக்கான பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்றுமதியாளர் ஒருவர் செய்து வருகிறார். 22 மில். ரூபா பெறுமதியான எனைய ஏற்றுமதிகள் பற்றிய ஆணைகள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளும் நடைபெறுகின்றன.

சீபிஐ உதவித் திட்டத்தின் கீழ் நெதர்லந்தில் நடக்கும் கருத்தரங்கில் பங்குபற்ற மூன்று தயாரித்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

**(xiii)** கைத்தறிப் புடைவைகள்

ஜப்பானில் நடந்த உலக புதுப்பாணிகளின் வர்த்தகத்தில் முதற்தடவையாக வீட்டுப்பாவனைப் புடவைகளை முன்வைக்க ஏஅச ஒழுங்கு செய்தது. 8 தயாரித்த ஆடை ஏற்றுமதியாளர்களுடன் மூன்று (3) கைத்தறிப் புடவை நிறுவனங்களும் பங்கு கொண்டன. (தயவு செய்து இணைப்பு 1 ஐப் பார்க்கவும்)

தெற்கு அபிவிருத்தி சபைக்கென (தெஅச) ஒழுங்குசெய்யப்பட்ட கைத்தறிப் புடவைகள் பயிற்சி வடிவமைப்பாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் முடிவுற்றுள்ளன.

**(xiv)** பாதணிகள்

ஐரோப்பிய சந்தைகளின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வடிவமைப்புக்களை அபிவிருத்திசெய்ய பதின்நான்கு (14) பாதணி உற்பத்திக் கம்பனிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

ஜேர்மன் அரசின் உதவிகளுடன் ஒரு பாதணிப் பயிற்சிப் பாடசாலையை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

**(xv)** இறப்பர் தயாரிப்புக்கள்

1996 டிசம்பரில் யூஎஸ்ஏ க்கான வர்த்தகத் தூதில் பங்கு கொண்ட இரு இறப்பர் உற்பத்திக் கம்பனிகளுக்கு யூஎஸ்எ யில் கொள்வனவு செய்யும் வாய்ப்புடைய இரு கொள்வனவாளர்களிடமிருந்து இரு தயாரிப்பு மாதிரிகள் கிடைத்துள்ளன. இக் கம்பனிகள் மாற்று மாதிரிகளை அபிவிருத்தி செய்ய ஏஅச உதவியது.

அடிப்படையாக விரிமையப் பாலைப் பயன்படுத்தி முகமூடிகளைத் தயாரிக்கும் ஒரு உற்பத்தியாளர் அவற்றை யூஎஸ் சந்தைகளில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

**(xvi)** மட்பாண்டத் தயாரிப்புக்கள்

மட்பாண்டங்களைத் தயாரிக்கும் மூன்று கம்பனிகள் தமது உற்பத்திச் செயல்வன்மைகளை மேம்படுத்துவதற்கு வேண்டிய தொழில்நுட்ப உத விகள் கிழக்கு ஐரோப்பிய நிதி உதவிகளுடன் மேற்கொள்ளப்பட்டன.

**(xvii)** பொது

கொழும்பில் பெப்ரவரியில் ஐஎஸ்ஓ/ரீசீ 34/எஸ்சீ 8 - விவசாய உணவுத் தயாரிப்புத் தொழில்நுட்ப உப செயற்குழுக் கூட்டத்தில் ஏஅச பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் அதில் தேயிலை ஏற்றுமதியாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை கறுப்பு தேயிலைக்கான கோரிக்கைகள், தேயிலையில் அடங்கும் நார் மற்றும் கஃபெயின் அளவுகள், பொதிகள் பற்றிய வரையறைகள், கிருமிநாசினிகளின் பாவனை என்பன பற்றிய பல பயனுள்ள உள்ளீடான தகவல்களைப் பெற்று அவற்றை ஏற்றுமதியாளர்களிடையே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மகாவலி சீ பிரதேசத்தில் அரிசித் தவிட்டெண்ணெய் தயாரிக்கும் முயற்சியில் சீனக்கம்பனி ஒன்றுடன் ஒரு கம்பனி கூட்டு முயற்சியை ஏற்படுத்த உதவிகள் வழங்கப்பட்டன.

வர்த்தக ரீதியிலான விவசாயிகள் தமது அறுவடைகளை ஏற்றுமதி யாளர்களுக்கும் பாரிய வர்த்தக நிலையங்களுக்கும் விற்பனை செய்வது பற்றிய தொடர்புகளை ஏற்படுத்தும் திட்டங்கள் மகாவலி அமைப்பில் மேற்கொள்ளப்பட்டன. இது சம்பந்தமாக தொடர்புகளை ஏற்படுத்த ஏற்றுமதியாளர்களுடனும் பாரிய வர்த்தக நிலையங்களுடனும் கலைந்துரையாடல்கள் பல நடாத்தப்பட்டன.

இறப்பர் தும்புச் சேர்க்கையால் அமைந்த புதுவகையான கூடைக் கவசங்களைத் தயாரிக்கும் ஒரு ஏற்றுமதியாளர் ஒரு வெளிநாட்டுக் கொள்வனவாளருடன் தொடர்புகொள்ள• ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பிறிதொரு கொள்வனவாளர் தும்புக்குற்றி உற்பத்தியாளருடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் இரு புதிய புவித்துணி உற்பத்தியாளர்கள் ஒரு ஏற்றுமதியாளருடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர்.

எற்றுமதியாளர்களின் சுய ஏற்றுமதி முயற்சிகளுக்கான உதவி அமைப்பின் கீழ் எழுபத்தைந்து (75) ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இந்த வகையில் 3.5 மில். ரூபா மீளக் கொடுக்கப்பட்டன. தாதுப் பொருட்களைக் கொண்டான உள்ளூர் உற்பத்திகளுக்கான தொழில்நுட்பத்துறைகளில் உதவ ஒரு ஆலோசகர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

## 05. வர்த்தக விழாக்களில் பங்குபற்றல்

ஆய்வுக்கான காலத்தில் தயாரிப்புகளுக்கான விசேட மற்றும் பொதுவான 60 வர்த்தக விழாக்கள் ஏஅச வினால் ஒழுங்கு செய்யப்பட்டன. (1996 இல் 38 விழாக்களும் 1997 இன் முதல் 6 மாதங்களில் 22 விழாக்களும்) இவற்றின் விபரங்கள் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளன.

## 06. தொடர்புகளை ஊக்கும் திட்டங்கள்/கொள்வனவாளர் விற்பனையாளர் சந்திப்பு/கொள்வனவு நல்லெண்ணத் தூதுகள்

(எ) 1996 இல் மலேசியாவிலிருந்தான உள்நோக்கிய கொள்வனவு நல் லெண்ணத்தூது ஏஅச வினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இத் தூதுக் குழுவில் 7 கம்பனிகளைச் சார்ந்த 7 பிரமுகர்கள் அடங்கினர். பரிசுப்பொருட்கள், பொம்மைகள், சுகாதார சாதனங்கள், தரை ஓடுகள், பீவீசி குழாய்கள், தோல் உற்பத்திகள், தானியங்கி ஊர்திகளின் உதிரிப்பாகங்கள், வாசனைத் திரவியங்கள் போன்ற தயாரிப்புக்களில் ஆக்கபூர்வமான ஆர்வங்கள் காட்டப்பட்டன. இத் தூதுக்குழுவிற்கு ஒரு சிறிய கண்காட்சியும் 23 ஏற்றுமதிக் கம்பனிகளுக்கான விஜயங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன.

(பி) 1996 இல் ஐரோப்பியாவிலிருந்தான உள்நோக்கிய கொள்வனவு நல்லெண்ணத் தூது ஒழுங்கு செய்யப்பட்டதுடன் அதில் 9 கொள்வனவாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கையின் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி) கௌரவ உணவு, உள்நாட்டு, சர்வதேச வர்த்தக அமைச்சரின் ஆதரவுடன் எகிப்து, ஈரான், சீனா என்பவற்றிற்கு வர்த்தக நல்லெண்ணத் தூதுகள் மேற்கொள்ளப்பட்டன. இவை குறிப்பிடத்தக்க புதிதாகத் தோன்றிவரும் சந்தைகள். இந்த நல்லெண்ணத் தூதுகள் இலங்கையின் ஏற்றுமதித் துறைகளில் பின்வருமாறான பாரிய தாக்கங்கள் ஏற்படுத்தியுள்ளன:

(i) 1995 இல் 1295 மில். ரூபாவாக இருந்த ஈரானுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் 54% அதிகரிப்பு ஏற்பட்டு அது 1996 இல் 1,995 மில். ரூபா ஆயிற்று. 1995 இல் 5,900 மெ.தொ. ஆக இருந்த ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதிகள் 1996 இல் 10,000 மெ.தொ ஆக அதிகரித்தது.

(ii) சீனாவிற்கான நல்லெண்ணத் தூதின் நேரடி விளைவாக அரிசித் தவிட்டிலிருந்தான எண்ணெய்த் தயாரிப்பு 5 மில்லியன் ரூபா முதலீட்டுடன் கூட்டு முயற்சியாக ஆரம்பிக்க வழி அமைத்தது.

(iii) 1995 இல் 176 மில். ரூபாவாக இருந்தது. சீனாவிற்கான இலங்கையின் மொத்த எற்றுமதிகள் 1996 இல் 680 மில். ரூபாவாக அதிகரித்தது.

(vi) 1995 இல் முறையே 54 மில். ரூபாவாகவும் 21 மில். ரூபாவாகவும் இருந்த சீனாவிற்கான பாதணி, இறப்பர் தயாரிப்புக்களின் ஏற்றுமதிகள் 1996 இல் 42 மில். ரூபாவாகவும் அதிகரித்தன. மேலாடை ஏற்றுமதிகளும் 8 மில். ரூபாவிலிருந்து 1996 இல் 24 மில். ரூபாவாக அதிகரித்தது.

(டி) ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட கொள்வனவுக் குழு ஒன்று கொறியாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்தது. அவர்கள் இலங் கையிலுள்ள முக்கிய பகட்டு வண்ணமலர்ச் செடி நாற்றங்கால்களுக்கு விஜயம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. 20,000 இளம் பகட்டு வண்ணமலர்ச் செடிகளை வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கொறியாவின் தேவைகளைப் பூர்த்திசெய்ய 22 வகைப் பகட்டு வண்ணமலர்ச் செடிகளை இல்ங்கையில் வளர்ப்பதை இந்த நல்லெண்ணத் தூதுக் குழு சிபார்சு செய்தது.

(இ) இலங்கைக்கு விஜயம் செய்த சுவீடனின் வர்த்தகப் பிரமுகர் குழுவில் ஒருவர் தயாரித்த ஆடைகளில் நாட்டங் காட்டியதால் பெப்ரவரியில் சுவீடனுக்குச் செல்ல ஒழுங்கு செய்துள்ள தயாரித்த ஆடைகள் ஏற்றுமதியாளர்களுக்கு அவர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

(எவ்) ஹெயிம் டெக்ஸ்டில் வர்த்தக விழாவில் பங்குபற்றியபின்கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்துவரும் அறுவர் சுவீடனில் ஒரு சந்தைப்படுத் தல் ஆய்வை மேற்கொண்டிருக்கின்றனர். இந்தக்குழு ஐஎவ்ஈஏ, அஸ்கோ, அஃலென் போன்ற பல பல்துறைவணிக நிலையங்களுக்கு விஜயம் செய்து சுவீடன் சந்தையின் மதிப்புள்ள உள்ளக வியூகத்தை அறிய முடிந்தது.

(ஜி) ஐரீசீ/யூஎன்டீபீ இன் இணைந்த ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யூஎஸ் மட்பாண்டக் கொள்வனவாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த 5 கம்பனிகள் யூஎஸ்ஏ யிற்கு விஜயம் செய்ய உதவிகள் வழங்கப்பட்டன. இக்கம்பனிகள் சர்வதேச சந்தையில் மட்பாண்டங்களின் போக்குகள் பற்றியும் யூஎஸ் சந்தையின் வரையறுப்புக்கள், விருப்புக்கள் பற்றிய நேரடி அறிவுகளையும் பெற்றன.

(எச்) சிறிய கண்காட்சியொன்றும் தொழில் கூட்டமொன்றும் உட்பட பாத ணிகளுக்கான ஒப்பற்ற முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் டுபாயிலும் ஜெடாவிலும் நடாத்தப்பட்டன. 4சிம ஏற்றுமதியாளர்கள் உட்பட ஏழு (07) பாதணி ஏற்றுமதிக் கம்பனிகள் பங்குபற்றின. யூ. எஸ் டொலர் 100,000 பெறுமதி கொண்ட வர்த்தகக் கட்டளைகள் பெறப்பட்ட அதே நேரத்தில் யூ. எஸ். டொலர் 320,000 பெறுமதிக்கான மதிப்பீடு செய்யப்பட்ட கட்டளைகள் இணக்கஞ் செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐ) கொதென்பேர்க், ஸ்டொக்ஹோ மில் சிறிய கண்காட்சியில் பங்குபற்றுவதற்கு 5 உடை ஏற்றுமதியாளர்களுக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. இத் திட்டத்திற்கு எஸ்ஐடிஏ யினால் நிதியளிக்கப்பட்டது.

(ஜே) சிபிஐ உதவியளித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜேர்மனியில் கைன்ட் அன்ட் ஜுமென்ட் சந்தையில் மூன்று ஏற்றுமதியாளர்கள் பங்கு பற்றினர்.

(கே) ஜனவரி 25 தொடக்கம் பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலான காலத்தின் போது அஐஇ யிற்கு இறப்பர் பொருட்கள் மீதான சந்தைக் குழுவொன்று சென்றதும் ஐந்து ஏற்றுமதிக் கம்பனிகள் பங்கு பற்றின.

(எல்) ஆர்ஜென்ரீனாவிலிருந்தான முக்கிய உடை இறக்குமதியாளரொருவர் (சூஜான் எல் குக்) 3 நாட்களுக்கு இலங்கைக்கு விஜயஞ் செய்தார். கொள்வனவாளர் குறிப்பாக சுவெட்டர்கள்,ஷேட்கள், ஜீன்ஸ்கள், சப்பாத்துக்கள் பைகளில் ஆர்வம் கொண்டிருந்தார். 3 தொழிற் சாலை விஜயங்கள் உட்பட ஏஅச யினால் விரிவான நிகழ்ச்சித் திட்ட மொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

(எம்) லெபனன் (பியூவோர்ட் ரேடிஸ் கொ.) யிலிருந்து உடை கொள்வனவுக்காரருக்காக நான்கு (04) தொழிற்சாலை விஜயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

(என்) 1997 ஆம் ஆண்டின் 2 ஆம் காற்பகுதியின் போது இலங்கை உடை உற்பத்தியாளர்களுக்கும் ஹொங்கொங்கிலிருந்தான (இன்டர்குறுப் தூரகிழக்கு லிமிட்டெட்) உள்நோக்கிய கொள்வனவு குழுக்கும் இடையிலும் அவுஸ்திரேலியாவிலிருந்தான (அலன் அல்ஸ்டன்கொ) கொள்வனவுக் குழுக்களுக்கும் விளையாட்டு உடைகள், ஸ்கீ உடைகள் உற்பத்தியாளர்களுக்கும் இடையில் தொழில் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

(ஓ) ஐ. இ. யில் மெசர்ஸ் சவ்றக்ஸ் கேசர் லிமிட்டெட் என அழைக்கப்படும் உடைகளுக்கான விஜயஞ் செய்யும் கொள்வனவுகாரருக்கு இருபத்திநான்கு தொழிற்சாலை விஜயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் இலண்டன் மான்செஸ்டரில் உடைகளுக்கான ஒப்பந்த முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது. ஏழு ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றினர்.

(பி) காசாளருக்கான சந்தைப்படுத்தல் ஒழுங்குகள் தொடர்பாக காலி, மாத்தறையில் இரு கொள்வனவுகாரர் விற்பனையாளர் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

07. ஒற்றை நாட்டு வர்த்தகக் கண்காட்சிகள்

கௌரவ உள்நாட்டு, சர்வதேச, வாணிப, உணவு அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் செயற்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க புதிய தொழிலாக இது இருந்தது. இலங்கை தேயிலைச் சபை, இலங்கை உல்லாசப் பிரயாண சபை, இலங்கை வங்கி, எயார் லங்கா லிமிட்டெட்டுடன் இணைந்து 1996 மார்ச் 1997 பெப்ரவரியில் இரு தனி நாட்டுக் கண்காட்சிகள் மொஸ்கோவிலும் பெல்கிறேடிலும் நடாத்தப்பட்டன. மொஸ்கோ சந்தையில் 37 ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றி ரூபா 178.3 மில்லியன் பெறுமதி கொண்ட முதற் தடவையான ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெற்றனர். அதே நேரத்தில் பெல்கிறேட் சந்தையில் 24 கம்பனிகள் தமது பொருட்களைக் கண் காட்சியில் வைத்து முன்னேற்றினர். சந்தையில் ரூபா 21.58 மில்லியன் பெறுமதியான கட்டணங்கள் பெறப்பட்டன. இந் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியமை இந் நாடுகளுடன் தொழில், வியாபார உறவுகளை முன்னேற்றுவதை விளைவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. ஏற்றுமதிக்கான ஜனாதிபதி விருது

1994, 1995 ஆம் ஆண்டுகளுக்கு ஓஅச யினால் ஏற்படுத்தப்பட்ட ஏற்றுமதிக்கான ஜனாதிபதி விருதளிப்பு வைபவமே இக் காலத்தின் போதான இன்னொரு முக்கிய சிறப்பம்சமாகும். இந் நிகழ்ச்சி 1997 ஜனவரியில் நடாத்தப்பட்டது. 1994 யிற்குப் பத்து விருதுகளும் அளிக்கப்பட்டன. அதே நேரத்தில் 1994 ஆம் ஆண்டிற்கு 23 சிறப்புச் சான்றிதழ்களும் 1995 யிற்கு 24 சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இரு ஆண்டுகளின் போது ஏற்கப்பட்ட முக்கிய பொருளும் சேவைத் துறைகளுமாக பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை, இறப்பர் பொருட்கள், உடைகள், மின்மப் பொருட்கள், மட்பாண்ட வகை, பழம் காய்கறிகள், நீர்வாழ் பொருட் காட்சி சாலை மீன், எழுதுகருவிவகைகள், பொதிசெய்தற், தெங்குப் பொருட்கள், உயிருள்ள, விறைக்கப்பட்ட கடலுணவு, பதனிடப்பட்ட வாசனைச் சரக்குகள், கைத்தறி ஆடைகள், மரத்தாலான பொருட்கள், வெட் டுப் பூக்கள், சிலைவகை, ஆலோசனைச் சேவைகள் இருந்தன.

## 09. மாகாணங்களில் ஏற்றுமதிசார்பான சிமமுயற்சிகளின் முன்னேற்றமும் அபிவிருத்தியும்

(ஏ) இது இக் காலத்தின் போது பொறுப்பேற்கப்பட்ட இன்னொரு குறிப் பிடத்தக்க புதிய தொழிலாகும்.

(பி) தெற்கு, மத்திய, வடமேற்கு மாகாணங்களில் மூன்று மாகாண காரி யாலயங்கள் உள்ளன. இவை ஏற்றுமதி சார்பான ஏற்றுமதித் தயாரான சிமமுயற்சிகளுக்கு சந்தை, பொருள் அபிவிருத்தி, ஆலோசனை உதவியை அளித்தன.

(சீ) ஆய்வாண்டுக் காலத்தின்போது ஏற்றுமதிச் சந்தைப்படுத்தல் உதவி உட்பட தகவலும் உதவியும் மத்திய மாகாணத்தில் ஏறக்குறைய 284 சிமமுயற்சிகளுக்கும் தெற்கு மாகாணத்தில் 138 முயற்சிகளும் வட மேற்கு மாகாணங்களில் 315 யிற்கும் வழங்கப்பட்டன. மத்திய மாகாணத்திலுள்ள இச் சில சிமமுயற்சிகள் யு. எஸ் டொலர் 41,000 பெறுமதியான ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெற்றுள்ளார்கள். ஏசு சபையின் முயற்சியின் கீழ் 1996 ஆம் ஆண்டின் போது வட மேற்கு மாகாணத்தில் சிறிய மத்திய ஏற்றுமதியாளர் சங்கமொன்று உருவாக்கப்பட்டது. ஏஅ சபையின் உதவியுடன் தையல், துணியில் படம் தீட்டுவோர் சங்கமொன்று உருவாக்கப்பட்டது.

(டி) இரண்டு வியாயாரச் சந்தைகள்– 1996 பெப்ரவரியில் மத்திய மாகாணத்தில் ட்ரேட் எக்ஸ்போ 96 1996 ஜுனில் தெற்கு மாகானத்திலுமாக ஏஅ சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இவற்றிற்கு முறையே 40, 57 சிம ஏற்றுமதியாளர்களுக்கு மேற்பட்டோர் பங்குபற்றினர்.

(ஈ) வளமுள்ள 172 யிற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் பங்குபற்றிய, திட்ட அமுலாக்கல், இன விவகார, தேசிய ஒன்றிணைப்பு, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, முதலீட்டுச் சபையுடன் இணைந்து 1996 ஜுன் மாத வியாபாரச் சந்தைக்கு சமாந்திரமாக தென் மாகாணத்திலும் முதலீட்டுக் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

(எவ்) பிலிப்பீன், ஜேர்மனி, ஜப்பானில் வியாபாரச் சந்தையில் பங்குபற்றுவதற்கு மத்திய மாகாணத்தில் ஐந்து சிம ஏற்றுமதியாளர்களும் பங்குபற்றுவதற்கு உதவியளிக்கப்பட்டனர்.

(ஜி) கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து மத்திய மாகாணத்தில் தோற் கண்காட்சியும் கருத்தரங்கொன்றும் ஒழுங்குசெய்யப்பட்டன. 35 சிம ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எச்) கண்காட்சிக்கென 1996 நவெம்பரில் இலண்டனில் இலங்கை வியாபார நிலையத்திற்கென சிம ஏற்றுமதியாளர்களின் பொருட்களைக் கொண்ட கப்பற்சரக்கு அனுப்பப்பட்டது. கப்பற்சரக்கின் பெறுமதி ரூபா 300,000/-

(ஐ) சிறைக் கைதிகள் சுய வேலைவாய்ப்புத் திறமைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு மாத்திரமன்றி ஏற்றுமதிகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்குடனும் பெறுமதியான தும்புப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு சிறைக் கைதிகளுக்கு பயிற்சியளிப்பதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

(ஜே) மர விளையாட்டுப் பொருட்கள், உலர் இலை வகைகள், ஐந்து கண்ணாடிப் படகுகளின் ஏற்றுமதிக்கென வெளிநாட்டுக் கொள்வனவுக் காரருடன் ஒப்பந்தஞ் செய்வதற்கு வட மேற்கு மாகாணத்திலுள்ள சிம ஏற்றுமதியாளர்கள் உதவியளிக்கப்பட்டனர்.

(கே) கையால் தயாரிக்கப்பட்ட வாழ்த்து மடல்கள் ஒவ்செட் அச்சடிக்கப்பட்ட வாழ்த்துமடல்களின் ஏற்றுமதிக்கென உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர் இணைப்பு உருவாக்கப்பட்டது. காலியிலுள்ள தொழிற் துறை உரிமையாளரிடத்தில் ஏற்றுமதியாளர் ஒருவரால் கையால் தயாரிக்கப்பட்ட 5000 மடல்களுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டது.

(எல்) தும்புப் பொருட்கள் மீதான மாகாணத்திற்கிடை தொழில்நுட்பவியல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென் மாகாணத்தில் ஜியோடெக்ஸ்டைல் உற்பத்தியாளர்களைச் சந்திப்பதற்கு 14 தும்பு ஆலைச் சொந்தக் காரர்களுக்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டன.

(எம்) சகல மூன்று மாகாணங்களிலுமான சிம ஏற்றுமதியாளர்களின் பயிற்சித் தேவைகள் அவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்ட வேலைகளுக்கான வடிவமைக்கும் நோக்குடன் மதிப்பீடு செய்யப்பட்டது.

## 10. ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள்

(அ) தற்போதுள்ள ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள் (ஏஉகி) ஆண்டின் போது புதுப்பிக்கப்பட்டன.

(ஆ) 1996 – 1997 ஆம் ஆண்டுக் காலத்தின்போது இரத்மலான, தம்பதெனிய, பொல்கவறவெலவில் நிறுவப்பட்ட ஏஉகி தொழிற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்தன. இவ் ஏஉகி முறையே குடைகள், நீடாலான தேயிலைப் பொதிகள், வாசனைச் சரக்குகளை உற்பத்தி செய்கின்றன. இவ் ஏஉகிராமங்களின் வருடாந்த விற்பனைத் தொகை ரூபா 17 மில்லியனாகி கிராமிய வட்டாரங்களிலுள்ள ஏறக் குறைய 3000 ஆட்களுக்கு தொழிலைக் கொடுக்கின்றது. நீடா லான தேயிலைப் பொதிகளையும் பதனிடப்பட்ட கஜு வையும் உற்பத்தி செய்வதற்கு 1996 யில் ஒரு புதிய ஏஉகி திஸ்ஸ மஹாராமாவில் நிறுவப்பட்டது. இத் திட்டததின் ஏற்றுமதி விற்பனைத் தொகை 1996 அக்டோபர் தொடக்கம் 1997 ஜுன் வரையிலுமான காலத்தின்போது கிட்டத்தட்ட ரூபா 14 மில்லியனாகும்.

(இ) தம்பதெனிய ஒஉ கிராமத்தின் உற்பத்தி வகையை பன்முகப்படுத்தக் கூடிய தன்மைகளை ஆராய்வதற்கு 1997 மார்ச்சில் ஐரோப்பியச் சந்தை வியாபாரக் கழகத்திலிருந்தான (ஈவெரிர) பேராளர் குழுவொன்று இலங்கைக்கு செய்த விஜயமே ஏஉ கிராமத்திலான சிறப்பம்சம்ஒன்றாகும். ஈஎவ்ரிர இவ் ஏஉகி உற்பத்தியில் பெரும் பங்கை கொள்வனவு செய்கின்றது. மேற்கொள்ளக்கூடிய பன்முகப்படுத்துகை தொடர்பான பின்னூட்டல் எதிர்பார்க்கப்படுகின் றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) வட மேற்கு மாகாணத்தில் குறிப்பாக தம்பதெனிய திட்டத்தில் ஏற்றுமதிக்கு உள்ள வளமுள்ள பொருட்களைப் பேராளர்களுக்குக் காட்டும் பொருட்டு உற்பத்திப் பொருள் கண்காட்சியூடாக வேலைக்களமொன்று நரமாலாவிலுள்ள ஈஎவ்ரிஏ பேராளர் குழுவிற் கென ஏஅச யினால் ஏற்படுத்தப்பட்டது.

## 11. வர்த்தகத் தகவல் சேவை தொடர்பான தொழிற்பாடுகள்

(அ) ஏஅச தனது மூலவளங்களை ஏற்றுமதியாளர்களுக்கு கணனிமயப்படுத்தப் பட்ட தரவுத் தள வசதிகள், ஆலோசனைச் சேவைகள், நூல்நிலைய வசதிகள் வகையில் பல முகப்பு தகவல் சேவைகள் நோக்கி வழிப்படுத்தியது.

(ஆ) உயலொக், கொம்ட்ரேட், ட்ரேட்ஸடட் டேற்றாஸ்டார் முதலியன போன்ற வெளிநாட்டு தரவுத் தளங்களுக்கு ஓன் - லைன் அணுகுதலை அளிப்பதற்கு கணனிப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தைப் பேணி அபிவிருத்தி செய்வதை ஏஅச தொடர்ந்தது.

(இ) ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகளைக் கைப்பற்றுவதற்குப் பயன்படும் இன்டநெற் ஈ- மெயில் வசதியைப் பாவித்து வர்த்தகம் தொடர்பான தகவலைப் பெறுவதற்கு அபிவிருத்தி செய்யப்பட்ட ட்ரேட்நெற் வெப் சைற் மூலம் க்ளோபல் இன்டநெற் மதிப்பிடப்பட்டது.

(ஈ) தகவல் பரப்பப்பட்ட செய்தி அறிக்கை சபை சேவைக்கு 60 பங்குவரியாளர்கள் சேர்க்கப்பட்டனர்.

(உ) ஏற்றுமதியாளர்களுக்கும் வளமுள்ள ஏற்றுமதியாளர்களுக்கும் நூல் நிலைய சேவைகள் அளிக்கப்பட்டன. 1996 ஆம் ஆண்டின்போது ஏறக்குறைய 51105 வர்த்தக விசாரணைகள் பெறப்பட்டன. அதே நேரத்தில் 7763 பேர்கள் நூல் நிலைய சேவைகளைப் பயன்படுத்தினர். மேலதிகமாக 4875 நேரடியாக வந்து பாவிப்போர் இருந்தனர்.

(ஊ) பல வீடியோ காட்சிகள் குறிப்பாக பெல்கிறேட் சந்தையையும் விஜயம் செய்கின்ற ஐரோப்பிய சுதந்திர வர்த்தகக் கழகத்தையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டன.

## 12. பிரசுரங்கள்

(அ) 1996 ஆம் ஆண்டின் போதும், 1997 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்தின் போதும் பின்வரும் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| ஏற்றுமதியாளர்களின் | – | 1 வெளியீடு |
| பிஸ்னஸ் லங்கா | – | 6 வெளியீடுகள் |
| எக்ஸ்போ நியூஸ் (ஆங்கிலம்) | – | 36 வெளியீடுகள் |
| எக்ஸ்போ | – | 20 வெளியீடுகள் |
| ஏற்றுமதியாளர்களின் கையேடு | – | 1 வெளியீடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. வியாபாரத் திறமையும் வாய்ப்பும் பண்டகசாலை வியாபாரமும்

(அ) பண்டகசாலை வியாபரத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கென "சுதந்திர துறைமுகம்" (சுங்கக் கட்டுபாடற்ற வலயம்) ஒன்றை நிறுவிப் பேணும் திட்டமொன்றினை ஆராய்வதற்கு டுபாய், டில்பெறி, லிவர்பூல், றொட்டர்டம், அம்ஸ்டர்டம் துறைமுகங்களுக் கான பண்டகசாலை வியாபாரம் மீதான ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான சிபாரிசுகள் அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

(ஆ) ஏற்றுமதியாளர்களுக்கு உள்ளக அமைப்பு வசதிகளை அளிக்கும் முயற்சியாக முன்னுரிமை அடிப்படையில் 278 கம்பனிகளுக்கு தொலைத் தொடர்பு வசதிகளை அளிப்பதற்கான ஏற்பாட்டை ஏஅஉ, இலங்கைத் தொலைத் தொடர்பிற்கு சிபாரிசு செய்துள்ளது. இக் கம்பனிகளுள் ஐம்பத்தி இரண்டு (52) கம்பனிகளுக்குத் தொலைத் தொடர்பு வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) இறக்குமதி நடைமுறைகளைச் சுருக்குவது மீதான வேலைப் படையினரின் இரு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் கப்பற்சரக்கை அகற்றுவதற்கு நடைமுறையிலுள்ள திட்டத்தைப் புதுப்பிப்பதற்கான உடன்பாடும் செய்யப்பட்டது.

(ஈ) பெப்ரவரி 20 ஆந் திகதி ஏஅ சபையின் கோரிக்கையின் பேரில் இங்கிலாந்து மேர்சி டொக்ஸ் அன்ட் ஹாபர்ல் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது. பண்டகசாலை வர்த்தகர்கள் சங்கமும் வர்த்தக வசதிக்குழு அங்கத்தவர்களும் இக்கருத்தரங்கிற்கு சமூகமளித்தனர். உருப்படி விநியோக நிர்வாகம் தொடர்பான பயனுள்ள நுண்ணறிவுத் திறங்களை கருத்தரங்கு அளித்தது.

(உ) வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கு ஈடிஐ பாவிப்பதன் நன்மைகள் பற்றி ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் உத்தியோகத்தர்களின் அறிவையும் விளக்கத்தையும் மேம்படுத்தும் பொருட்டு வர்த்தக வசதி மீது எஸ்கப் ஆலோசகர் ஒருவரின் சேவைகள் பெறப்பட்டன.

(ஊ) இறக்குமதி ஏற்றுமதி நடைமுறைகள் தொடர்பாக ஏற்றுமதியாளரின் நாட்டுக்கு நாடு பிரச்சனைகள் உரிய அதிகாரிகளுடன் சிநேகபூர் வமாகத் தீர்க்கப்பட்டன.

## 14. ட்ரேட்நெற் ஸ்ரீ லங்கா

ட்ரேட்நெற் ஸ்ரீ லங்கா 1996 யில் செயற்பாட்டிற்கு வந்தது. இது கௌரவ அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் ஆய்வாண்டின்போது அறிமுகப்படுத்தப்பட்ட இன்னுமொரு புதிய தொழிலாகும். இலங்கையில் முதன்முதலாக உலகளாவிய வலைச்சேவை கிராமிய சர்வதேச தொழில் சமூகத்தினருக்கு வர்த்தக முதலீட்டுத் தகவலைப் பரப்புவதற்கு நிறுவப்பட்டுள்ளது. எக்ஸ்போ 97 யிற்கென உருவாக்கப்பட்ட விசேட வலை அமைப்பு மூலம் ஸ்ரீலங்கா எக்ஸ்போ '97 வெளிநாடுகளில் மேம்படுத்தப்படுகிறது. இவ் வலையமைப்பு உற்பத்திப் பொருள் தொகுதிகளினதும் உற்பத்திப் பொருள் துறைகளினதும் குறிப்புக்களை உள்ளடக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 15. உலக வர்த்தகக் கூட்டிணைப்பு மன்றம் (டபிள்யுரிசிசி)

வர்த்தக அபிவிருத்தித் தொழில்களை குறிப்பாக வர்த்தக முன்னேற்றம் வர்த்தகத் தகவல் மீது கவனஞ் செலுத்தி கூட்டிணைப்பதற்கு ஏஅ சபையினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனமொன்றாக கொழும்பு உலக வியாபார நிலையத்தில் டபிள்யு ரி சி சி நிறுவப்படுகின்றது. அது நாட்டு கண்காட் சிகைளையும் முன்னேற்ற பணிக்குழுக்களையும் ஆரம்பித்து கூட்டிணைப்பதுடன் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களினதும் சேவைகளினதும் நிரந்தரக் கண்காட்சியொன்றினைப் பேணுவதுடன் வெளிநாட்டு விருந்தினர்கள் உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கான சைபர் வர்த்தக நிலையமொன்றினையும் அளிக்கும்.

### 16. ஏற்றுமதி அபிவிருத்திக்கான நிதியுதவி

(அ) ஏற்றுமதியாளர்களுக்கான நிதியுதவி ஏற்பாடு (கடன்கள்) நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக நிறுத்தப்பட்டது. 1996 யின் போதும் 1997 யின் முதல் ஆறு மாதங்களின் போதும் மொத்தம் ரூபா 6.6 மில்லியன் கொண்ட தொகை 4 திட்டங்களுக்குக் கொடுக்கப்பட்டன. விபரங்கள் இணைப்பு 11 யில் உள்ளன.

(ஆ) ஆய்வாண்டின் போது ஈடிஐஎஸ்எஸ் திட்டத்தின் கீழ் ஊக்குவிப்புக் கொடுப்பனவை ஏஅச தொடர்ந்தது. 200 உடை தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டம், இறப்பர் தொகை கழிப்புத் திட்டம் கைத்தொழிலுக்கான ஊக்குவிப்பு. 274 ஏற்றுமதியாளர்கள் தொடர்பாக மொத்தம் 104.94 மில்லியன் செலவழிக்கப்பட்டது. விபரங்கள் 11 ஆம் இணைப்பில்.

### 17. கொள்கைகள், ஊக்குவிப்புக்கள், திட்டமிடல் தொடர்பான தொழிற்பாடுகள்

(அ) ஏற்றுமதிகள் சர்வதேச ரீதியாகப் போட்டிகரமாக இருந்ததென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு கொள்கைச் சூழலைக் கண்காணிப்பதை ஏஅச தொடர்ந்தது. இச் செய்கை பின்வருவனவற்றை உள்ளடக்கின.

(i) நாணயமாற்று விகிதத்தையும் ஏற்றுமதிகளின் இலாபத் தன்மை மீதான அதன் தாக்கத்தையும் கண்காணித்தல்.

(ii) ஏற்றுமதியாளர்க்குச் சட்டரீதியாகவும் நிதிரீதியாகவும் கிடைக்கும் ஊக்குவிப்புத் தொகுதியைக் கண்காணித்தல்.

(ஆ) அரசாங்கத்திற்குச் செய்யப்பட்ட கீழே கூறப்பட்ட கொள்கைச் சிபாரிசுகள் 1997 வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டமையே விசேட குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

(i) ஏற்றுமதிச் செய்முறைக்கான மூலதனப் பொருட்கள் மீது சட்டரீதியான வரிகளை நீக்குவதற்கான திட்ட மாற்றங்கள்.

(ii) இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை வரியின்றி செலுத்துவதற்கான திட்ட நிர்வாகத்தில் மாற்றங்கள்.

(iii) ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டுக் கடன் வாங்கல் வசதிகள்.

(vi) முதலீட்டு வரிப்படி (ஐரிஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(V) நிதி பெறுவதில் ஏற்றுமதியாளர்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மீதான ஆய்வொன்றினை ஏஅச ஆரம்பித்து நடாத்தியதுடன் இரககாகூ உத்தரவாதங்களுடன் வர்த்தக வங்கிகளிலிருந்து கடன்களை சிபாரிசு செய்யும் அறிக்கையை சமர்ப்பித்தது. சிபாரிசுகளை செயற்படுத்துமாறு இரககூ கோரப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கையில் புதிய கொள்கையொன்றினை (தோட்டப் பண்ணையற்ற) உருவாக்குவதில் ஏஅசபையும் பங்குபற்றியது. இத் திட்டம் மேதகு ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(உ) ஏற்றுமதி அபிவிருத்தித் தொழில்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ள தனியார் அரசாங்கத்துறை நிறுவனங்களுடன் இணைந்து 1995 – 2000 தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் உருவாக்கப்பட்டது. இத் திட்டம் 1996 யில் முடிவு செய்யப்பட்டு உள்நாட்டு சர்வதேச, வர்த்தக, வாணிப, உணவு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மொத்தத் திட்டம் இரு பகுதிகளைக் கொண்டிருந்தது. முதலாவது நோக்கத்தையும் இலக்குகளையும் நடத்து முறைகளையும் கையாண்டவிடத்து ஏற்றுமதியாளர்காளால் எதிர்நோக்கப்படும் கட்டுப்பாடுகளையும் கட்டுப்பாடுகளைத் தீர்ப்பதற்கான சிபாரிசுகளையும் கூறி 26 பகுதிரீதியான திட்டங்கள் உட்பட 36 செய்கைத் திட்டங்களைப் பகுதி 2 கொண்டிருந்தது. உள்நாட்டு, சர்வதேச வாணிப உணவு அமைச்சரால் செய்யப்பட்ட பணிப்புரை மீது ஏஅச திட்ட காலத்தை 1998 – 2001 யிற்கு மாற்றி பூகோள சூழலில் ஏற்படும் மாற்றங்களை ஒன்றிணைத்து என் ஈடிபியைத் தற்போது மீளாய்வு செய்கின்றது. மீளாய்வு செய்யப்பட்ட திட்டம் 1997 ஆகஸ்டில் முடிவு செய்யப்படும்.

(ஊ) வெளிநாட்டு சந்தைப்படுத்தல் திட்டமும் முடிவு செய்யப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படும்.

### 18. ஏற்றுமதி வர்த்தக நிலையம்

ட்ரான்ஸ்வேர்க் வவுசில் அமைக்கப்பட்டுள்ள ஏற்றுமதி வர்த்தக நிலையம் கௌரவ உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக, வாணிப உணவு அமைச்சரின் அறிவுறுத்தல்களின் மீது நேரடி சந்தைப்படுத்தல் கண்காட்சி நிலையமாக மீளமைக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச தரவுத்தாரர்கள், இன்டர்நெற், ஈ-மெயில் பிற உள்நாட்டு தரவுத்தளங்களை அடைவதற்கு ஏற்பாடளிக்கும்.

### 19. விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

ஏஅப 71 உற்பத்திக் குறிப்பீட்டுடனான கருத்தரங்குகள்/வேலையாளர்களை ஏஅச நடாத்தியது. இவற்றின் விபரங்கள் இணைப்பு 111 யில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 20. விளம்பரமும் பொது உறவுகளும்

• நிறுவனத்தின் வேலைக்கான விளம்பரத்தை ஏஅச தொடர்ந்து கொடுத்தது. ஆண்டின் போது மொத்தம் 71 கட்டுரைகளும் செய்திகளும் வெளியிடப்பட்டன. தென் மாகாணத்தில் பத்திரிகையாளர் கருத்தரங்கொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது. ஏசு சபையின் தொழில்கள் 39 வினம்பரங்கள் மூலம் உள்நாட்டுப் பத்திரிகையிலும், வர்த்தக விவரக் கொத்திலும் வெளிநாட்டுப் பிரசுரங்களிலும் விசேட புதினப்பத்திரிகை குறைநிரப்புகளிலும் பிரசுரிக்கப் பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. சார்க் ரிபிஒ மாநாடு

(அ) சார்க் பிராந்தியத்திலுள்ள ரிபிஒ களுக்கிடையில் வர்தக தொழில்நுட்ப கூட்டுறவிற்கான பிராந்திய வர்த்தக இணைப்புகளையும் வாய்ப்புக்களையும் அதிக அளவு மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன் சார்க்கிலான சகல வர்த்தக முன்னேற்ற நிறுவனங்களினதும் மாநாடொன்றினை ஜரிதி யுடன் இணைந்து ஏஅச ஒழுங்கு செய்தது.

(ஆ) மாநாட்டில் பின்வரும் விழிப்புணர்வு பெறப்பட்டது

(i) ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மீதான வரி, சுங்கம், புள்ளி விபரங்கள் மீதான சகல தரவுகள், அபிவிருத்தித் திட்டங்கள், அரசாங்க வர்த்தகம், முதலீட்டுக் கொள்கைகள், உற்பத்தி சந்தைப்படுத்தல் தொடர்பான தகவலைப் பரிமாற்றம் செய்வதற்கு.

(ii) குறிப்பிட்ட ரிபிஒ களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வியாபாரச் சந்தைகள் தொடர்பான தகவலை அளித்தலும் பிராந் திய சந்தைகளில் சார்க் அங்கத்துவ நாடுகள் சுறுசுறுப்பாக பங்குபற்றுவதற்கும் ஊடருவுவதற்கும் அனுமதியளிப்பதற்கு.

(iii) உள்ளக, மேலதிக பிராந்திய வர்த்தக இணைப்புகளின் மேம் பாட்டிற்கான வளத்தை ஆராய்ந்து ரார்க் பிராந்தியத்தில் பேராளரின் அடிக்கடியான பரிமாற்றத்திற்கு வசதியளித்தல்.

(iv) சார்க் பிராந்தியத்தில் அடுத்த 12 மாதங்களுக்குள் ஒன்று அல்லது இரண்டு தொடர்பு முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கு செய்தல். இந்தியாவும் இலங்கையும் இதனை ஏற்படுத்தவுள்ளன.

(v) சார்க் பிராந்தியத்திற்கான வர்த்தக வரவு பகுப்பாய்வொன்றினை ஜரிசி நடாத்தும். இது எதிர்கால உள்ளக பிராந்திய வர்த்தக வளமுள்ள பொருள்வகையைக் கண்டுபிடிப்பதற்கு உதவும்.

(vi) சார்க் ரிபிஒகளுக்கிடையில் நிறுவனரீதியாக பின்னணி அமைப்பை உருவாக்கல். சார்க் ரிபிஒ களின் சங்கமொன்றின் உருவாக்கத்திற்கு வாக்களிக்கப்பட்டது.

(vii) இவ்வாண்டிற்கான சார்க் ரிபிஒ களுக்கான செயலகமாக அடுத்த சார்க் ரிபி ஒ மாநாடு வரை ஜரிசி யின் உதவியுடன் ஏஅச இருப்பதுடன் அடையப்பட்ட முடிவுகளையும் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபாரச் சந்தை பங்குபற்றல் 1996வியாபாரச் சந்தை பங்குபற்றல் 1996

| வியாபாரச் சந்தை | பொருள் | உதவிய கம்பனி களின் எண் ணிக்கை | இணக்கஞ் செய்யப் பட்டட கட்டணங் களின் பெறுமதி | ஏஅச செலவு மில்லியம் ரூபா |
|---|---|---|---|---|
| சர்வதேச உணவுச் சந்தை | பழங்கள், காய்கறிகள | 11 | 0.5 | 1.4 |
| டோக்கியோ மலர்காட்சி/ ஜப்பான் மலர் பூங்கா காட்சி | பூவியல் | 9 | 11.5 | 2.2 |
| உணவுப் பொருட்கள் '96 பரிஸ் | வாசனைச் சரக்குகள் அத்தியாவசிய எண்ணெய் காய் உலர் பழங்கள் சேதனப் பொருட்கள் | 9 | 98.0 | 2.8 |
| பயோ எவ்ரசிஎச் 96 பரிஸ் ஐரோப்பா | சேதன தேயிலை, வாசனச் சரக்குகள், மூலிகைகள், பருப்பு வகைகள், உலர் பழம், கஜு | 6 | 63.0 | 2.7 |
| டைமோடெக்ஸ் 96 - ஜேர்மனி | தெங்குப்பொருட்கள | 4 | 2.1 | 2.4 |
| இன்டர் கு - 96 | காட்சி மீன் | 12 | 30.0 | 2.25 |
| இனஹோ ஜெனிரா 96 - ஜேர்மனி | ஆபரணம் | 9 | 6.5 | 3.2 |
| ஜேடீலா 96 | ஆாரணம் | 8 | 5.0 | 2.7 |
| ஜேஏ கட்சி - அஜஇ | ஆபரணம் | 9 | 6.6 | 2.8 |
| டக்சன் ஜென் கனிப்பொருள் காட்சி - அஜஇ | இரத்தினக்கல், ஆாரணம் | 16 | 48.0 | 2.5 |
| சர்வதேச ஆபரணம் டோக்கியோ ஜப்பான் | ஆபாணம் | 9 | 40.0 | 1.8 |
| ஜிடிஎஸ் சர்வதேச சந்தை | பாதணி | 8 | 27.0 | 2.3 |
| ஹீம் ஆடைவகை சந்தை | கைத்தறிப்பொருள் | 8 | 11.3 | 2.3 |
| நெதர்லாந்து | | 8 | 15.0 | 2.5 |

1. டிசெம்பர் இறுதிவரை ஏற்றுமதிகள் ரூபா 82.19 மில்லியனை அடைந்தது.

2. முதற் தடவையாக பிளட்டினம் ஆபரணவகைக்கு கட்டளைகள் பெறப்பட்டன.

3. பல உடைக் கொள்வனவு காரியாலயங்கள் ஹொங்கொங்கில் நிறுவப்பட்டன. ஆகவே தொடர்புகளை நிறுவுவதற்கான வாய்ப்புக்களை அது அளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வியாபாரச் சந்தை | பொருள் | உதவிய கம்பனி களின் எண் ணிக்கை | இணக்கஞ் செய்யப் பட்டட கட்டணங் களின் பெறுமதி | ஏஅச செலவு மில்லியம் ரூபா |
|---|---|---|---|---|
| ஹொங்கொங் நாகரீக வாரம் | உடைகள் | 8 | 20.0 | 2.3 |
| முதல் சேகரிப்பு - வியாபாரச் சந்தை பேர்மின்ஹாம் | உடைகள் | 6 | 80.0 | 2.2 |
| ஹொங்கொங் சந்தை | தோற்பொருட்கள் | 6 | | |
| முதற் சந்தை - ஜேர்மனி | எழுதுகருவிவகை | 6 | 20.0 | 1.9 |
| நூறென்பேர்க் சர்வதேச விளையாட்டுப் பொருட்ள் ஜேர்மனி | கைப்பனிப் | 30 | 32.0 | 3.0 |
| அம்பினெற் '96 ஜேர்மனி | கைப்பனிப் பொருட்கள் | 10 | 34.5 | 3.0 |
| ஆசிய பசுபிக் தோற் சந்தை ஹொங்கொங் | தோல் | 04 | 12 | 1.5 |
| சியல் சர்வதேச உணவுச் சந்தை பிரான்ஸ் | செறமிக் ஓடுகள் மர, தோல் தளபாடம் | 11 | 24.2 | 3.9 |
| உணவு ஆக்கக் கூறுகள் ஐரோப்பா '96 பரிஸ் | உலர் பழங்கள், சேதன பொருட்கள் வாசனைச் சரக்கு கள், அத்தியாவசிய பொருட்கள் | 09 | 98.0 | 3.2 |
| செபிற் 96 - ஜேர்மனி | கணணிஅடிப்படைச் சேவைகள் | 07 | 120.0 | |
| சர்வதேச வியாபாரச் சந்தை - தென்கொரியா | வெட்டுப்பூக்கள் சிலைச் செடிகள் | 06 | 1.0 | |
| சர்வதேச இளவேனிற்கால வியாபாரச் சந்தை-டுபாய் | பொது | 10 | 3.7 | 1.7 |
| கைறோ சர்வதேச வியாபாரச் சந்தை | பொது | 08 | 28.5 | 2.26 |
| கறாறா வியாபாரச் சந்தை இத்தாலி | கிறனைட் | 03 | 6.9 | 1.25 |
| ஆசிய சர்வதேச பரிசுக் காட்தி சிங்கப்பூர் | பொது | 08 | 3.58 | 1.6 |
| மங்கற் சர்வதேச சந்தை-ஓமான் | பொது | 06 | 93.4 | 1.6 |
| 39 ஆவது டோகியோ சர்வதேச | பொது | 06 | 93.4 | 1.85 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வியாபாரச் சந்தை | பொருள் | உதவிய கம்பனி களின் எண் ணிக்கை | இணக்கஞ் செய்யப் பட்டட கட்டணங் களின் பெறுமதி | ஏஅச செலவு மில்லியம் ரூபா |
|---|---|---|---|---|
| பரிசுக் காட்சி - ஜப்பான் | | | | |
| சர்வதேச உணவுச் சந்தை - ஜேர்மனி | பொது | 06 | 9.45 | 2.4 |
| இலங்கை வாரம் 96 - மொஸ்கோ | பொது | 37 | 178.3 | 4.9 |
| ரஉயா | | | | |
| ஹறோகேட் பரிசுச் சந்தை '96 | பொது | 06 | 11.4 | 1.62 |
| இளவேனில் வியாபார சந்தை '96 | பொது | 06 | 3.0 | 2.4 |
| ஆசிய பசுபிக் சர்வதேச வியாபார சந்தை '96-பிலிப்பீன்ஸ் | பொது | 10 | 40.6 | 1.9 |
| இந்திய சர்வதேச வியாபாரத்தை புதுடில்லி இந்தியா | பொது | 07 | 5.7 | 0.7 |
| ஆபிரிக்க சர்வதேச வியாபாரக் கண்காட்சி (சாய்டெக்ஸ் 96) தென்னாபிரிக்கா | பொது | 08 | 13.2 | 2.4 |
| ஒஸ்லோவில் மினிகண்காட்சி கொதன்பேர்க், மானோ ஸ்டொக்ஹோம், நோர்வே, சுவீடன் | பொது | 09 | 2.57 | 0.5 |
| மொத்தம் | | 358 | 1289.02 | 79.33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியாபார சந்தை பங்குபற்றல் - 1997 ஜனவரி தொடக்கம்**
**ஜூலை வரை**

| வியாபாரச்சந்தை | பொருள் | ஏற்றுமதியாளர் எண்ணிக்கை | நாடு | உறுதிப்படுத்தப்பட் கட்டணங்களின் பெறுமதி | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1. சர்வதேச ஆபரணம் ஜப்பான் வியாபாரம் (சஜவி 97) ஜப்பான் | ஆபாணம் | 12 | ஜப்பான் | ரூ.30 மில் இரத்தினக் கற்கள் ஆபரணத்திற்கு ரூ.20 மில். | 12 கம்பனிகளில் 6 முதற்தடவையாக் பங்கு பற்றின |
| 2. முதல் எழுதுகருவி வகைச் சந்தை பொருட்கள் | எழுதுகருவி வகைப் | 05 | ஜேர்மனி | ரூ.27 மில். உறுதிப்படுத்தப்பட்டது. ரூ.25 மில். இனக்கஞ் செய்யப்பட்டது. | |
| 3. நூதென்போக் சர்வதேச விளையாட்டுப்பொருள் சந்தை | மரக்கைப்பணிப் பொருட்கள் | 8 கண்காட்சிகள் 6 அவதாணிப்புக்கள் | ஜேர்மனி | | |
| 4. ஹீம்டெக்ஸ்லல் சந்தை | கைத்தறிப் பொருட்கள் | 08 | ஜேர்மனி | | முதற் தடவையாக 3 சிம முயற்சிகள் பங்கு பற்றி பெறுமதி மிக்க அனுபவத்தைப் பெற்றன. |
| 5. ஹொங்கொங் பாணி கொள்வ | உடைகள் | 08 | ஹொங் கொங் | ரூ.2 மில். | சில தெரிவு செயயப்பட்ட கொள்வனவுக்காரருடன் ஒன்றுகொரு கூட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டன. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. டோமோடெக்ஸ் வியாபாரச சந்தை | கயிற்றுப் பொருட்கள் (விரிப்புக்கள், தள விரிப்பு) | 08 | ஜேர்மனி | | |
| 7. குடா உணவுச் சந்தை | பதனிடப்பட்ட உடைகள் | 09 | டுபாய் | ரூ.2மில் | |
| 8. பயோ வக் வியாபார சந்தை | சேதனப் பொருட்கள் | 08 | ஜேர்மனி | | |
| 9. எசென் சர்வதேச வியாபா1ர சந்தை | வாசனைச் சரக்குகள் | 06 | ஜேர்மனி | | |
| 10. உக்சன் இரத்தி னக்கற்கள் கணிப் பொருள் காட்சி | இரத்தினக் கற்கள் | 19 | | ரூ.60 மில்லியன் உடன் விற் பனைகள் ரூ.30 மில் கட்ட ணங்கள் | |
| 11. இன்றேர்ஜேன்ரா | ஆபரணம் | 10 | ஜேர்மனி | ரூ.20 மில் | |
| 12. அம்பீயென்ற் | ஆபரணம் | 10 | ஜேர்மனி | ரூ.20 மில் | |
| 13. டோக்கியோ சர்வதேச பரிசுக் காட்சி | பல்லினப் பொருட்கள் | 08 | ஜப்பான் மில்லியன் | ரூ.1.02 | முதன் முறையாக அறிமுகப்படுத்தப் பட்ட கையால் செய்யப்பட்ட எழுது கருவி வகை வாழ்த்து மடல்கள் வாம்ப் ஹோட்கள் |
| 14. பேவின் சந்தை | ஒடைகள் | 03 | ஜேர்மனி | ரூ.130 மில்லியன் | ரூ.60 மில் (ஏஅச செலவு) |
| 15. உலக பாணி வியாபாரச் சந்தை | உடைகள் | 8 உடை கள் 8 கைத்தறி ஏற்றுமதி யாளர்கள் | ஜப்பான் | ரூ.6 மில் | ரூ.150,000 (ஏஅச செலவு) |
| 16. ஜிடிஎஸ் சர்வ தேச சப்பாத் துச் சந்தை (இளவேனில்) | பாதனி | (சிமஏ உட்பட 7 ஏற்றும திகள் | ஜேர்மனி | ரூ.73 மில் உறுதிப்படுத தப்பட்டது. இணக்கப் பேச்சுவார்த் தையின் கீழ் ரூ.102 மில்லியன் | ரூ.0.75 மில் (ஜிரிஇசற்றினதும் பங்குபற்றும் ஏற் றுமதியாளர்களி னாலும் நித்யளிக் கப்பட்ட திட்டம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17. செபிற் 97 | எலெக்ட் ரோனிக்ஸ் | 4 ஏற்று மதியாளர்கள் | | | |
| 18. டோக்கியோ மலர், பூங்கா காட்சி | வெட்டுப் பூக்கள் இனத் தொகுதி | 6 எற்று மதியாளர் கள் | ஜப்பான் | | பங்குபற்றுவோ ரால் செலவு பொறுப்பேற்கப் பட்டது. |
| 19. உணவு ஆக்கக் கூறுச் சந்தை | வாசனைச் சரக்குகள் அத்தியாவ சிய எண் ணெய் உ. தே பதனி டப்பட்ட உணவு | 9 ஏற்று மதியாளர் கள் | சிங்கப் பூர் | யு.எஸ். டோ 325,000 யு.எஸ்.டொ 1000 சந் தையில் உடன் விற்பனை (ஏறக்குறைய ரூ.18.85 மில்.ஏறக்கு றைய ரூ.0.058 மில் உடன்பனம்) | ஆசியச் சந்தையின் தரத்தேவைகள் மீதான தகவலை ஏற்றுமதி வணிக நிலையங்கள் பெற்றன. |
| 20. ஹனோபர் கைத்தொழில் சந்தை | கைத்தொழிற் பொருட்கள் | 7 ஏற்று மதியாளர் கள் | ஜேர்மனி | | கைத்தொழில் அபி விருத்தி அமைச்ச ரின் கூட்டிணைப்பு டன் ஒழுங்கு செய் யப்பட்ட கைத் தொழில் கூட்டத் தில் பங்குபற்றப் பட்டது. |
| 21. அக்குவாரம்'97 | காட்சிமீன் | 6(5சிமமு உட்பட) | சிங்கப் பூர் | ரூ.2 மில் ஏற்றுமதிக் கட்டணங்கள் இணக்கஞ் செய்யப்பட் டன | இலங்கையில் கம் பிகள் கேஒஐ கார்ப் வகைக ளின் உற்பத்திக்கு கூட்டு முயற்சி களை உருவாக்கு வதற்கு ஜப்பானிய சீன முதலீட்டா ளர்கள் ஆர்வம் காட்டப்பட்டுள்ளது. |
| 22. உலக மலர் கண்காட்சி | வெட்டுப் பூக்கள் | 6ஏற்றும தியாளர் கள் | தென் கொரியா யா | ரூ.18 மில் | |
| மொத்தம் | | 189 | | ரூ.539.2 மில்லியன் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 11

ஏற்றுமதி அபிவிருத்திக்கு நிதியுதவு

| உதவித் திட்டம் | உதவிய கம்பனிகளின் எண்ணிக்கை<br><br>மில்லி.ரூபா<br>மில்.ரூபா | உதவித் தொகை மில்லியன் ரூபா பெருக்கம் | ஆவது ஆண்டில்.எற்றுமதி களின் பெறுமதி | மதிப்பீடு செய்யப் பட்ட முதலீட்டுப் | தொழிற் பொருள்கள் (ஆட்கள்) |
|---|---|---|---|---|---|
| எற்றுமதிவரியான திட்டங்களில் பங்குநிலை பங்குபற்றல் | 01 | 1.0 | 36.0 | 1.9 | 25 |
| சிறிய அளவு எற்றுமதித் திட்டங்களுக்கு நிதியுதவி | 04 | 0.8 | 3.6 | 1.7 | 86 |
| விரைவில் எற்றுமதிகளை விஸ்தரிப்பதற்கு உற்பத்தி செய்யும், பதணிடும் ஏற்றுமதியாளர்களுக்கு நிதி உதவி | 03 | 2.1 | 46 | 5.8 | – |
| எஅச ஆதரவளித்த வியாபா ரச் சந்தைகளில் பங்குபற்றிய சிறிய அளவு ஏற்றுமதியாளர் களுக்கு தொழிற்படு மூலதனக் கடன்கள் | 06 | 2.6 | 4.8 | – | – |
| ஈபிவி கம்பனிகளுக்கு | 03 | 2.0 | – | – | 1885 |
| உப மொத்தம் | 17 | 8.5 | 49 | 9.4 | 1966 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | | | | | |
| 1. ஈடிஐஎஸ் கொடுப்பனவு | 12 | 5.2 | – | – | – |
| 11. 200 உடைத்தொழிற் சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் | 43 | 15.25 | | | |
| 111. கைத்தறித் துறைக்கு | 30 | 8.72 | – | – | – |
| 1. இறப்பர் பொருள் உற்பத்திக்கு | 127 | 29.1 | – | – | – |
| மொத்தம் | 193 | 55.2 | 49 | 9.4 | 1966 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி/விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் - 1996

| நிகழ்ச்சித் திட்டம் | இடம் பட்ட நிகழ்ச் சித் திட்டத் தின் எண் ணிக்கை | நடாத்தப யோர் எண்ணிக்கை | பங்குபற்றி | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| அ) பொருள் குறிக்கப் பட்ட வேலைக்களங் கள்/கருத்தரங்குகள் | | | | |
| 1. மழங்கள், காய்கறி கள் மீதான கருத் தரங்கு வேலைக் களம் | மத்துகம பன்னலை, டெறு பிட்டிய, காலி, கொழும்பு | 06 | 900 | |
| 2. காளான் பயிரிடுகை மீதான கருத்தரங்கு/ வேலைக்களம் (சுய திட்டங்கள்) | ஹொரண, இரத்தினபுரி, பதுளை, மொறட்டுவ, கொழும்பு, வத்தளை மாத்தளை | 29 | 403 | |
| 3. கஜு மீதான வேலைக்களம் | வாரியபொல கம்பஹ மாவட்டம் | 02 | 150 | |
| 4. காட்சி மீன் மீதான வேலைக்களம் | அவிசாவெல | 01 | 15 | நாரா, ஏஅச வினால் நடாத்தப் பட்ட இன்னொரு வேலைக்களம் சந்தைப்படுத்தல் நோக்குகள் மீதான மூலவளப் பொருட் களை அளித்தது. |
| 5. கூனிறால் கைத்தொ ழிலைப் பாதிக்கும் வெள்ளைப் புள்ளி வியாதி மீதும், கூனிறால் மீதும் கருத்தரங்கு | நீர்கொழும்பு, வைக்கால் | 02 | 160 விவ | |
| 6. சுவிற்ஸ்லாந்து அவுஸ் திரேலிய சந்தைகள் மீதான சந்தை மேற் பார்வை பெறுபேறுகள் மீது கருத்தரங்கு | கொழும்பு | 01 | 25 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | உற்பத்தியை முன்னேற்று வதற்கான முறைநேர நிர்வாகம் மீது கருத் தரங்கு | கொழும்பு | 01 | 20 | |
| 8. | ஐரோப்பிய பாணி முன் கணிப்பீடு | கொழும்பு | 01 | 50 | |
| 9. | குழந்தைகள், பிள்ளைகள் உடைமீதான கருத்தரங்கு | கொழும்பு | 01 | 18 | |
